கல்கி



KALK ஏப்ரல் 13,1952 4 அண



பற்களை சுத்தம் செய்வது பாதி வேலை தான் . . .
தினமும் ஈறுகளைப் பாதுகாப்பது அந்த வேலையை பூர்த்திசெய் கிறது!
உங்கள் பற்கள் எவ்வளவு ஒழுங்கானவையாக இருந்தாலும் அவைகளை வகிக்கும் ஈறுகள் பலமிழந்தோ அல்லது நோயுற்றோ போனால் அவை உபயோகமற்றதாகி விடுகின்றன. அதனால் இந்த ஆபத்துக்குள்ளாகாதீர்கள்! தினமும் இருமுறை எஸ். ஆர். டூத்பேஸ்ட் உபயோகியுங்கள். பல் வைத்தியர்கள் ஈறுகளை உறுதியாகவும், ஆரோக்கியமாகவும் வைத்திருக்க உபயோகிக்கும் ஸோடியம் ரிஸினோலியேட் இதில் அடங்கியுள்ளது. மேலும் எஸ். ஆர். டூத்பேஸ்ட் பற்களை பளிச்சென்று வெண்மையாக சுத்தம் செய்கிறது.
கிப்ஸ்
ரிஜிஸ்டேட்
எஸ்.ஆர். டூத்பேஸ்ட்
பற்களை பளிச்சென்று வெண்மையாகவும் ஈறுகளை ஆரோக்கியமாகவும் வைத்திருப்பதற்கென்றே பிரத்தியேகமாக தயாரிக்கப்பட்டுள்ளது
S.R. TOOTHPASTE
S.R. TOOTHPASTE
CSR. 76-50-55 TN


ஜூபிடர்
தயாரிப்பு
டைரக்ஷன்: பிரசாத் .. ஸ்டுடியோ: சென்ட்ரல் - நெப்டியூன

கல்கி பொருளடக்கம்


மலர் 11 | இதழ் 37

1952 ஏப்ரல் 13

நந்தன ௵ சித்திரை 1

"கல்கி"யில் வெளியாகும் கதைகளில் உள்ள பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்களே; சம்பவங்களும் கற்பனையே.

சென்ற வாரக் கவலைகள்!



கல்கி

மலர் 11 | தமிழ்த் திருநாடு தன்னைப்—பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா. —பாரதியார் | இதழ் 37

கடவுள் பாங்கியில் பணத்தைப் போடுங்கள்!

சென்ற ஆண்டு "கல்கி" தீபாவளி மலரில் ராஜாஜி ஒரு கதை எழுதியிருந்தார். அநாதைச் சிறுவன் ஒருவனைப் பற்றிய கதை அது. கதையின் முடிவில், "மக்களே! கடவுளின் பாங்கியில் உங்கள் பணத்தைப் போடுங்கள். நல்ல வட்டியுடன் பெருகிப் பத்திரமாக இருக்கும்!" என்று குறிப்பிட்டிருந்தார். ஏழை எளியவர்களுக்கும் கஷ்டப்படுகிறவர்களுக்கும் உதவும் பணம் கடவுளின் பாங்கியில் போடும் பணமாகும் என்பது கருத்து.

கடவுளின் பாங்கியில் பணத்தைப் போடுவது என்பது அவ்வளவு சுலபமான காரியமல்லதான். எல்லோருக்கும் எளிதில் மனம் வராது. அதிக வட்டி கொடுப்பதாகச் சொல்லி அடியோடு விழுங்கி ஏப்பம் விடும் பாங்கியில் பணத்தைப் போட்டாலும் போடுவோம்; ஆண்டவன் பாங்கியில் போடுவதற்கு மனந் துணிய மாட்டோம்.

துணியாத மனதையும் துணியச் செய்து கொண்டு கடவுளின் பாங்கியில் பணத்தைப் போடுவதற்கு இப்போது ஓர் அரிய சந்தர்ப்பம் வாய்த்திருக்கிறது.

"புலி வருகிறது" "புலி வருகிறது" என்று நாலைந்து வருஷங்களாகக் கேள்விப்பட்டு வந்தோம்.

பஞ்சமாகிய புலி இப்போது உண்மையிலேயே வந்திருக்கிறது; நமக்கு அடுத்த வீட்டில் வந்திருக்கிறது.

"ராயல சீமையில் பஞ்சம்" என்றால் எங்கேயோ ஆயிரம் மைல்களுக்கப்பால், கடல்களுக்கு அப்பால் உள்ள சீமையில் பஞ்சம் என்று கருத வேண்டாம்.

ராயல சீமை என்பது நமக்கு அடுத்த வீடு. சித்தூர், கடப்பை, பெல்லாரி, கர்னூல் ஜில்லாக்கள். ஏன்? நம்முடைய சொந்த வீட்டிலேயே பஞ்சமாகிய புலி எட்டிப் பார்க்கிறது. வடாற்காடு, செங்கற்பட்டு ஜில்லாக்களிலும் கூடச் சில பகுதிகளில் மக்கள் பஞ்சக் கொடுமைக்கு உள்ளாகி யிருக்கிறார்கள்.

* * * *

"தனி ஒருவனுக்கு உணவில்லையெனில் ஜகத்தினை அழித்திடுவோம்!" என்று பாரதியார் பாடினார். பசியின் கொடுமையை அநுபவித்து அறிந்தவரானபடியினால் அவ்வளவு ஆத்திரத்துடன் பாடினார்.

தனி ஒருவன் அல்ல; தனி ஒருத்தியுமல்ல; லட்சக்கணக்கான மக்கள் உண்ண உணவின்றிப் பசிக் கொடுமையை அநுபவிக்கும் நிலைமை ராயல சீமை ஜில்லாக்களில் ஏற்பட்டிருக்கிறது.

"ஆறு அவுன்ஸ் அரிசி ரேஷனை"ப் பற்றிக் குறை கூறிக் கொண்டு வருஷத்துக்கு ஆறு ராத்தல் உடம்பு நிறை ஏறிக் கொண்டு வந்த அரசியல் பொய்யர்கள் கூறும் பசிக் கொடுமை அல்ல.

உண்மையாகவே உண்பதற்கு ஒரு கவளம் அன்னமும் கிடைக்காத பயங்கரப் பசிக் கொடுமை. நூறு பேர் அல்ல; ஆயிரம் பேர் அல்ல; லட்சக்கணக்கான மக்கள் அத்தகைய பசிக் கொடுமைக்கு ஆளாகியிருக்கிறார்கள்.

தந்தையர்களும் தாய்மார்களும் வயோதிகர்களும் வாலிபர்களும் பஞ்சத்தின் கொடுமைக்கு ஆளாகித் தவிக்கிறார்கள்.

சின்னஞ் சிறு குழந்தைகள், பால்மணம் மாறாத பாலகர்கள்,—ஒரு கவளம் உணவுக்கு ஏங்கி நிற்கிறார்கள்.

உணவுப் பஞ்சத்தைக் காட்டிலும் கொடிய தண்ணீர்ப் பஞ்சமும் சேர்ந்து கொண்டிருக்கிறது. தவித்த வாய்க்குத் தண்ணீர் கிடைக்காத பயங்கரமான நிலைமை பல இடங்களிலே ஏற்பட்டிருக்கிறது.

பசிக் கொடுமையினால் கண்டதைத் தின்கிறார்கள். தாகத்தின் கொடுமையினால் கிடைத்ததைக் குடிக்கிறார்கள். இவற்றினால் கொள்ளை நோய்கள் பரவுகின்றன.

பஞ்சத்தினால் மெலிந்தவர்கள் நோய்களுக்கு எளிதில் இரையாகிறார்கள்.

இவ்வளவும் அடுத்த வீட்டில் நடைபெறுகிறது. "நமக்கென்ன!" என்று சும்மா இருக்கப் போகிறோமா! அல்லது நம்மால் இயன்ற உதவியைச் செய்வதற்கு விரைந்து முன் வரப் போகிறோமா!

* * *

வங்காளத்தில் பத்து வருஷங்களுக்கு முன் பயங்கரமான பஞ்சம் வந்தது; அறுபது லட்சம் மக்கள் மாண்டார்கள். அப்போது அன்னியர்களாகிய ஆங்கிலேயர்கள் இந்தியாவை ஆட்சி புரிந்தார்கள். அன்னிய சர்க்காரின் பேரில் பழியைப் போட்டு மனச்சாட்சியைத் திருப்தி செய்து கொண்டோம்.

தற்போது இந்தியாவில் நம் சொந்த ஆட்சி நடைபெறுகிறது. நேரு சர்க்கார் நம்மை ஆளுகின்றனர். சென்னை மாகாணத்திலும் ஜனநாயக அரசாங்கம் நடைபெறுகின்றது. வங்காளப் பஞ்சத்தைக் காட்டிலும் கொடிய இந்தப் பஞ்சத்தில் மக்கள் மடியாமல் பாதுகாப்பதற்கு நம் சர்க்கார் தீவிரப் பிரயத்தனங்கள் செய்து வருகிறார்கள். மத்திய சர்க்கார் மந்திரிகளும் உத்தியோகஸ்தர்களும் ராயல சீமைக்கு நேரில் வந்து நிலைமையைப் பார்த்துப் போயிருக்கிறார்கள். நம் புதிய கவர்னரும் பஞ்சப் பிரதேசங்களில் சுற்றுப் பிரயாணம் செய்து வந்திருக்கிறார்.

அரசாங்கத்தின் சார்பில் செய்ய வேண்டிய காரியங்கள் ஜரூராக நடக்கும் என்று நாம் நிச்சயமாக எதிர்பார்க்கலாம்.

ஆனால் அதுமட்டும் போதுமா!

சர்க்கார் மீது முழு பாரத்தையும் போட்டுவிட்டு நாம் கையைக் கட்டிக் கொண்டு இருந்துவிடலாமா! அது மனிதத் தன்மை யாகுமா! மானிட தர்மத்துக்கு உகந்ததா!

"சொந்தச் சகோதரர்கள்
துன்பத்திற் சாதல்கண்டும்
சிந்தை யிரங்காரடீ — கிளியே
செம்மை மறந்தாரடீ!"

என்றார் மகாகவி பாரதியார். அத்தகைய கல்நெஞ்சம் படைத்த அரக்கர்கள் நாம் அல்ல என்பதை நிரூபிப்போம்.

"பஞ்சத்தும் நோய்களினும்
பாரதர் புழுக்கள்போல்
துஞ்சத்தம் கண்ணாற்கண்டும்—கிளியே
சோம்பிக் கிடப்பாரடீ!"

என்று பாரதியார் வசை பாடினார். அந்த வசைக்கு உரியவர்கள் இந்தச் செந்தமிழ் நாட்டில் இல்லை என்பதை நிரூபிப்போம்.

"தாயைக் கொல்லும் பஞ்சத்தைத்
தடுக்க முயற்சியுறார்
வாயைத்திறந்து சும்மா — கிளியே
வந்தேமாதரம் என்பார்"

என்றார் பாரதியார். அத்தகைய வெளி வேஷ தேசபக்த சிகாமணிகள் நாம் அல்ல என்பதைக் காரியத்தில் மெய்ப்பித்துக் காட்டுவோம்.

* * *

பசி என்பது இன்ன தென்பது அறியாதவர்கள் சினிமாக்களிலே ஏழைகளின் துயரங்களைப் பற்றி மெழுகாய் உருகிக் கண்ணீர் விடும் காட்சிகளை அமைக்கிறார்கள். பசிக் கொடுமையைப் பற்றிச் சோக ரசம் ததும்பும் கீதங்களைப் பாடச் செய்கிறார்கள். அத்தகைய காட்சிகளைப் பார்த்தும் பாடல்களைக் கேட்டும் நம்மில் பலர் உருகிக் கண்ணீர் வடித்திருக்கிறோம்.

அதெல்லாம் 'முதலைக் கண்ணீர் அல்ல; உண்மைக் கண்ணீர்' என்பதைக் காட்டுவதற்கு இப்போது சந்தர்ப்பம் வாய்த்திருக்கிறது.

நாடக மேடையில் ஏழைகளின் பசிக் கொடுமையையும் பஞ்சத்தின் பரிதாபத்தையும் பார்த்துக் கேட்டு உருகித் தவிக்கிறோம்.

உண்மையில் நாம் அப்போது அநுபவித்தது சங்கீத இன்பத்தை அல்ல,—உண்மையான அநுதாபந்தான் என்பதை இப்போது காட்டுவோம்.

பசிக் கொடுமை பற்றிக் கதைகளிலே நாம் படித்து அடைந்த ஆத்திரம், கடற்கரைப் பிரசங்கங்களிலே கேட்டு அடைந்த கொதிப்பு,—இவையெல்லாம் 'வாயைத் திறந்து சும்மா வந்தே மாதரம்' என்பாரின் வெறும் பேச்சும் வீண் வேஷமும் அல்ல என்பதை இப்போது நிரூபிப்போம்.

* * *

சென்னையின் புதிய கவர்னர் ஸ்ரீ பிரகாசா பஞ்சப் பிரதேசங்களுக்குச் சென்று நேரில் பார்த்து விட்டு வந்தார். 'பஞ்சம் பயங்கரமாகத் தானிருக்கிறது' என்று தெரிவித்தார். அதன்பேரில் சென்னை மாநகரின் ஷெரிப் ராஜாஜி மண்டபத்தில் பொதுக் கூட்டம் ஒன்று கூட்டினார். கவர்னர் தலைமை வகித்தார். ராயல சீமையிலும் மற்றும் தமிழ் நாட்டு ஜில்லாக்களில் சில பகுதிகளிலும் பஞ்சத்தினால் கஷ்டப்படுகிறவர்களுக்குப் பொதுமக்களும் தங்கள் கடமையைச் செய்ய வேண்டும் என்னும் நோக்கத்துடனேயே கூட்டம் நடத்தப்பட்டது. பஞ்ச நிவாரணத்துக்காக மக்களிடமிருந்து பணம் சேர்க்கவும், சர்க்கார் செய்ய முடியாத நிவாரண வேலைகளை அந்தப் பணத்தைக் கொண்டு நடத்தவும் ஒரு கமிட்டி நியமிக்கப்பட்டிருக்கிறது.

மாகாணத்தின் முதன் மந்திரி இக் கமிட்டியின் தலைவர். ஷெரிப் ஸ்ரீ எஸ். அனந்தராமகிருஷ்ணன் பொதுக் காரியதரிசி. பொதுத் தொண்டில் ஊக்கம் கொண்டவர்களும், சமூக ஊழியர்களும், பிரமுகர்களும் அங்கத்தினர். கவர்னரின் சொந்த மேற்பார்வையில் இக் கமிட்டி வேலை செய்யும்.

இந்திய சர்க்காரின் பிரதம மந்திரி பண்டித ஜவாஹர்லால் நேரு இரண்டு லட்ச ரூபாய் பஞ்ச நிவாரண வேலைக்காக இக் கமிட்டிக்கு அனுப்பி வைத்திருக்கிறார். டாடா தர்மஸ்தாபனத்திலிருந்து இருபத்தையாயிரம் வந்திருக்கிறது. இதையெல்லாம் கேட்டுத் திருப்தியடைவதுடன் நம் கடமை தீர்ந்துவிடவில்லை. பஞ்சப் பிரதேசத்தின் கஷ்ட நிலைமை எவ்வளவு பிரம்மாண்டமானது என்பதை நினைக்கும்போது மேற்படி இரண்டேகால் லட்சம் ரூபாய் கடலில் ஒரு துளி போன்றதுதான். தமிழ் மக்கள் இச்சமயம் தீவிரமாக முன்வந்து தங்கள் கடமையைச் செய்ய வேண்டும். "தான் வருந்திப் பிறர்க்குதவும் தயை பிறந்த நாடு" இத் தமிழ் நாடு என்பதைக் காட்ட வேண்டும். பணங் கொடுக்கக் கூடியவர்கள் தாராளமாகக் கொடுக்க வேண்டும். தானியமோ, துணிமணியோ, பஞ்சப் பிரதேசத்தில் உபயோகப்படக்கூடிய வேறு எந்தப் பொருளோ, கொடுக்க இயன்றவர்கள் தங்களால் இயன்றதைக் கொடுக்க வேண்டும்.

ஏழைகள் ஏழ்மையின் கஷ்டத்தை உணர்ந்தவர்கள். பஞ்சத்தின் கொடுமையையும் பசியின் வேதனையையும் அறிந்தவர்கள். ஆகையால்

ஏழைகள் பஞ்ச நிவாரணத்துக்குக் கட்டாயம் உதவுவார்கள். எப்படிப்பட்ட ஏழையானாலும் பஞ்சத்தினால் மக்கள் சாகாமல் தடுப்பதற்கு ஒரு ரூபாயாவது கொடுக்க முடியும்; கொடுப்பார்கள்.

நம் நடுத்தர வகுப்பினர் எப்போதுமே தாம் வருந்திப் பிறர்க்கு உதவும் இனத்தைச் சேர்ந்தவர்கள். அவர்கள் இந்தப் பஞ்ச நெருக்கடியில் சும்மா இருந்துவிட மாட்டார்கள். பத்து ரூபாய் அல்லது ஐந்து ரூபாயாவது பஞ்ச நிவாரணத்துக்குக் கொடுத்தே தீருவார்கள்.

இந்நாட்டிலுள்ள பணக்காரர்களுக்குத்தான் இப்போது ஒரு சோதனைக் காலம். பணக்காரர்கள் என்றால் லட்சக்கணக்கில் பணம் வைத்திருப்பவர்கள், கோடிக்கணக்கில் வைத்திருப்பவர்கள், பதுக்கி வைத்திருப்பவர்கள், பகிரங்கமாக வைத்திருப்பவர்கள், பரம்பரைப் பணக்காரர்கள், சென்ற பத்து வருஷங்களுக்குள் பெரும் பணக்காரர்கள் ஆனவர்கள், ஆலை முதலாளிகள், வர்த்தக ராஜாக்கள், இன்ஷியூரன்ஸ் அரசர்கள், பாங்கி மன்னர்கள், ஸ்டுடியோ சக்கரவர்த்திகள் எல்லாரையுந்தான் சேர்த்துச் சொல்லுகிறோம்.

இந்த நாட்டிலிருந்து "பணக்கார வர்க்கத்தைப் பூண்டோடு அழித்து விட வேண்டும்" என்று சொல்லும் கூட்டம் ஒன்று கிளம்பியிருக்கிறது. அவர்களுடைய செல்வாக்கும் நாளுக்கு நாள் பெருகி வருகிறது. "பணக்காரர்கள் எல்லாருமே நெஞ்சில் ஈவிரக்கமில்லாத அரக்கர்கள். அவர்களை ஒழித்தாலன்றி மக்கள் முன்னேற்றமடைய முடியாது" என்று கிளர்ச்சி செய்து வருகிறார்கள். இந்தக் கிளர்ச்சி பொய்மையை அடிப்படையாகக் கொண்டது என்பதை இச்சமயம் நாட்டிலுள்ள பணக்காரர்கள் நிரூபிக்க வேண்டும்.

வங்காளப் பஞ்சத்தின்போது சில கொடிய பணக்காரர்கள் தானியத்தை வாங்கி மூடக்கி வைத்துக் கொள்ளை லாபம் சேர்த்ததாக நாம் கேள்விப்பட்டிருக்கிறோம். அம்மாதிரி பொல்லாம் இப்போது செய்வதற்கில்லை; செய்ய முடியாது.

வங்காளப் பஞ்சத்தின்போது பணக்கார—முதலாளி வர்க்கத்துக்கு ஏற்பட்ட பயங்கரமான கெட்ட பெயரை இச்சமயம் துடைத்து விடச் சந்தர்ப்பம் வாய்த்திருக்கிறது.

"காதறுந்த ஊசியும் வாராது காண் கடைவழிக்கே!" என்ற பட்டினத்தார் வாக்கை இச்சமயம் அனைவரும் நினைவு கூரவேண்டும்; பணக்காரர்கள் முக்கியமாக ஞாபகப்படுத்திக் கொள்ள வேண்டும். பஞ்ச நிவாரணத்துக்கு விரைந்து வந்து உதவி செய்ய வேண்டும்.

மனிதர்கள் தாங்களாகவே வருவித்துக்கொள்ளும் கஷ்டங்கள் உண்டு. மடமை, சோம்பல், பேராசை, துராசை, பொறாமை முதலியவை காரணமாகத் தவறுகள் செய்து கஷ்டப்படுவார்கள். அப்படிப்பட்ட கஷ்டங்களின் விஷயத்தில் அலட்சியமாயிருந்தால் அதற்கு மன்னிப்பு உண்டு.

இப்போது ராயல சீமையில் ஏற்பட்டிருக்கும் கஷ்டமோ இயற்கையின் கொடுமையினால் ஏற்பட்டது. இதற்கு யார் மேலும் குற்றம் சொல்ல முடியாது. இத்தகைய சந்தர்ப்பங்களில் உதவி செய்ய முன் வராதவர்களை மானிட குலத்தினர் என்றே சொல்வதற்கில்லை!

* * *

பண உதவி அனுப்ப விரும்புவோர் ஸ்ரீ எஸ். அனந்தராமகிருஷ்ணன், சென்னை ஷெரீப், கல்யாண் மஹால், எட்வர்ட் எலியட்ஸ் ரோட்,

அன்றும் இன்றும் !



சென்னை என்ற விலாசத்துக்கு அனுப்பிவையுங்கள். ஒரு ரூபாய் முதல் பதினாயிரம் ரூபாய் வரையில் அனுப்பி வையுங்கள். இந்தக் காரியத்துக்கு நீங்கள் அனுப்பும் பணம் அவ்வளவும் கடவுளின் பாங்கியில் போடப்பட்ட பணம் என்று நிச்சயமாக நம்பலாம்.

தானியம், துணிமணிகள் உதவ விரும்புவோர் அந்தப் பிரதேசத்துத் தாசில்தார்களைப் பிடித்துக் கொள்ளுங்கள். ஆமாம்; தாசில்தார்கள் முதலிய உத்தியோகஸ்தர்களை விரட்டுவதற்கு இது ஒரு நல்ல சந்தர்ப்பம். "இதோ அரிசி! இதோ சோளம்! இதோ ராகி! இதோ துணிமணிகள்! பஞ்சப் பிரதேசங்களுக்கு அனுப்பி விட்டு மறு காரியம் பார்க்கவும்" என்று சர்க்கார் அதிகாரிகளை ஜனங்கள் அதிகாரம் பண்ணலாம்.

வேண்டாத காரியங்களுக்கெல்லாம் அதிகாரிகளின் காரியங்களில் தலையிட்டு உபத்திரவிக்கும் பிரமுகர்கள் இப்போது இந்தப் புண்ணிய காரியத்தில் அதிகாரிகள்மீது தங்கள் அதிகாரத்தைச் செலுத்த முன் வரட்டும்.

அடுத்த செப்டம்பர் அக்டோபரில் மறுபடி மழை பெய்யும் வரையில் இந்தப் புண்ணிய காரியத்தைத் தொடர்ந்து நடத்தட்டும்.

ஐந்தொழில் வல்ல சமூகத்தார்

தமிழ் மக்களின் புராதனப் பண்பாட்டைக் குறித்தும் கலை உணர்வைக் குறித்தும் பெருமையடித்துக் கொள்கிறோம். பெருமையடித்துக் கொள்ள நமக்கு உரிமை உண்டு.

அயல் மாகாணத்தாரும் அயல் நாட்டாரும் நமது செந்தமிழ் நாட்டிலுள்ள மாமல்லபுரத்துச் சிற்பங்களையும், காஞ்சிபுரம், தஞ்சாவூர், மதுரை, இராமேசுவரம் கோயில்களையும் பார்த்துப் பார்த்து வியந்து போகிறார்கள்.

"உலகத்திலேயே கோயில் கட்டும் கலையில் தமிழர்கள் சிறந்தவர்கள்; அவர்கள் கட்டிய கோயில்களில் தஞ்சாவூர்க் கோயில் தலை சிறந்தது" என்று என்ஸைக்ளோபீடியா பிரிட்டானிக்கா என்னும் உலகப் பிரசித்தி பெற்ற கலைக் களஞ்சிய நூலில் எழுதியிருக்கிறது.

நமது செந்தமிழ் நாட்டு நடராஜ விக்கிரகத்தைப்போன்ற ஓர் அற்புத சிற்ப வடிவம் உலகத்திலேயே இதுவரையில் சிருஷ்டிக்கப்பட்டதில்லை. இனியும் சிருஷ்டிக்கப்படப் போவதில்லை என்று பாரெல்லாம் போற்றுகிறது.

இத்தகைய அற்புதச் சிற்பக் கலையை வளர்த்த சமூகத்தினர் தங்களை 'விசுவ கர்ம சமூகம்' என்று பெருமிதத்துடன் அழைத்துக் கொள்ளுவதில் வியப்பு ஒன்றுமில்லை.

இறைவனை 'ஐந்தொழில் செய்பவன்' என்று பெரியோர் கூறுவதுண்டு.

விசுவகர்ம சமூகத்ினரும் ஐந்து தொழில்களில் ஈடுபட்டவர்கள். தொழில்கள் என்றும் சொல்லலாம்; கலைகள் என்றும் சொல்லலாம்.

கல்வேலை செய்யும் சிற்பிகள், பொன்வேலை செய்யும் பத்தர்கள், இரும்பு வேலை செய்யும் கொல்லர்கள், மர வேலை செய்யும் தச்சர்கள், செப்பு வேலை செய்யும் கன்னார்கள்,—ஆக ஐந்து வகைப்பட்ட கலைத் தொழில்களை விசுவ கர்ம சமூகத்தினர் செய்கிறார்கள்.

மேற்கூறிய ஐந்து வகைத் தொழில்களும் வீட்டையும் நாட்டையும் அழகு படுத்தும் தொழில்கள்; வீட்டுக்கும் நாட்டுக்கும் இன்றியமையாத உபயோகமான தொழில்கள்.

தமிழ் நாட்டு மகா சிற்பிகளின் பரம்பரையில் வந்து இன்று விசுவகர்ம சமூகத்தின் துரோணாச்சாரியாராக விளங்கி வருகிறவர் திரு டி. எம். தெய்வ சிகாமணி ஆச்சாரியார் அவர்கள்.

விசுவ கர்ம குலத்தில் நாடெங்கும் புகழ்பெற்ற மற்றொரு பிரமுகர் திரு எம். கே. தியாகராஜ பாகவதர் அவர்கள்.

இவர்களுடைய பெருமுயற்சியினால் "விசுவகர்ம தொழில் வல்லோர் விசேஷ மகாநாடு" சென்ற வாரத்தில் சென்னை செண்ட் மேரிஸ் மண்டபத்தில் நடைபெற்றது.

விசுவகர்ம குலத்தைச் சேர்ந்த கிராமத் தொழிலாளிகளான கருமார், தச்சர், கன்னார் முதலியவர்களுக்கு, அவர்களுடைய தொழிலை நடத்துவதற்கு வேண்டிய இரும்பு, மரம், பித்தளை, செம்பு முதலிய தாதுப் பொருள்கள் இப்போது இலகுவில் கிடைப்பதில்லை. இதனால் அந்தப் புராதனக் கைத் தொழில்கள்—கலைத் தொழில்கள்—நசித்து வருகின்றன. தொழிலாளிகள் பரம்பரையாகப் பெற்ற தங்கள் அரிய கைத்திறனை இழந்து வருகிறார்கள். அத்தொழிலாளருக்கு வேண்டிய தாதுப் பொருள்களையும் மற்ற வசதிகளையும் செய்து கொடுக்க நம் அரசாங்கத்தார் முன் வர வேண்டும் என்று மேற்படி மகாநாட்டில் தீர்மானம் நிறைவேறியிருக்கிறது.

இந்த முக்கியமான தீர்மானத்தை நாம் முழு மனதுடன் ஆமோதிக்கிறோம். மேற்கூறிய ஐந்து வகைத் தொழில் திறமைகளையும் தேசத்தின் பொதுச் செல்வம் என்றே கூறவேண்டும். யாரிடமிருந்தாலும் அத்திறமைகள் அழியாமல் காப்பாற்ற அரசாங்கம் முன் வரவேண்டும்.

கைத்தொழில் பெருக்கத்தில் ஊக்கமுள்ள நம் சுதந்திர அரசாங்கத்தார் அத்தகைய உதவிகளைச் செய்வார்கள் என்று எதிர்பார்க்கிறோம்.

* * *

கலைத்திறமையையே மூலதனமாகக் கொண்ட விசுவகர்ம சமூகத்தில் சங்கீதம், நாடகம் முதலிய துறைகளில் சிலர் அவ்வப்போது மேன்மை அடைவதிலும் வியப்பில்லை.

மேற்படி மகாநாட்டை யொட்டிக் கலைவிழா ஒன்றும் ஏற்படுத்தி யிருந்தார்கள். ஸ்ரீ எம். கே. தியாகராஜ பாகவதர் அரங்கமேடையில் தோன்றி, பவழக்கொடி நாடகம் நடத்திக் கலைவிழாவைத் தொடங்கி வைத்தார். சங்கீத டைரக்டர் ஸ்ரீராமநாதனின் பக்க வாத்தியமும் இடைவேளை இசையும் நாடகத்தின் வெற்றிக்கு மிகவும் உதவியாயிருந்தன. அழகழகான மெட்டுக்களில் பாரதியாரின் கண்ணன் பாடல்கள் பலவற்றை டைரக்டர் ராமநாதன் உணர்ச்சி பாவத்துடனும் இன்னிசையுடனும் பாடிச் சபையில் கூடியிருந்த ரஸிகர்களைப் பரவசப் படுத்தினர்.

பழைய பவழக்கொடி நாடகத்தை முப்பது வருஷங்களுக்கு முந்தைய பழைய நாடக பாணியிலேயே ஸ்ரீ தியாகராஜ பாகவதரும் அவருடைய சகாக்களும் நடத்தினார்கள்.

அதைப் பார்த்தபோது இந்தக் காலத்து நவீன நாடகங்களைவிடப் பழைய பாணியைச் சேர்ந்த

நாடகங்கள் சில அம்சங்களில் சிறந்து விளங்குவதாகத் தோன்றியது.

இக்காலத்துச் சமூக நாடகங்கள் இந்த நாளையச் சமூகப் பிரச்னைகளை நம் முன்னால் எடுத்துக் காட்டுகின்றன. சிந்தனையையும் ஊட்டுகின்றன; வேதனையையும் அளிக்கின்றன.

வள்ளி, அல்லி, பவளக்கொடி முதலிய நாடகங்களோ நம்மை இந்த உலகத்தையும் இதன் துன்ப வேதனைகளையும் மறக்கச் செய்து கற்பனைக் கனவு லோகத்துக்குக் கொண்டு போய் விடுகின்றன.

சிற்சில அசந்தர்ப்பங்கள் அங்கங்கே குறுக்கிட்டு இடர் செய்தாலும், மொத்தத்தில் நாடகம் பார்த்தவர்கள் உள்ளம் நிறைந்த களிப்புடன் வெளியேறுகிறார்கள். எனவே, இத்தகைய நாடகங்கள் அடியோடு மறைந்துவிடாமல் நாம் பார்த்துக் கொள்ள வேண்டும்.

ஸ்ரீ டி. எம். தெய்வசிகாமணி ஆச்சாரியார், ஸ்ரீ எம். கே. தியாகராஜ பாகவதர் முதலிய பிரமுகர்கள் தங்கள் குலத்தினரையும், குலத் தொழில்களையும் முன்னேறச் செய்வதற்காக மிகுந்த உற்சாகத்துடன் தொடங்கி நடத்தும் பிரயத்தனங்கள் பரிபூரண வெற்றியடைய வேண்டும் என்று 'ஐந்தொழில் செய்யும்' இறைவனை இதய பூர்வமாகப் பிரார்த்திக்கிறோம்.

கட்டுரைப் போட்டியில் நேயர்கள் உற்சாகம்

பாரதி காட்டிய பாதை—கட்டுரைப் போட்டியை வரவேற்று ஏராளமான அன்பர்களிடமிருந்து கடிதங்கள் வந்து குவிகின்றன. தக்கோலம் டாக்டர் கே. ஆர். கிருஷ்ணமூர்த்தி "தனி ஒருவனுக்கு உணவில்லை யெனில் ஜகத்தினை அழித்திடுவோம் என்று கர்ஜித்த வீரனைத் தமிழ் மக்களுக்கு அடிக்கடி ஞாபகப்படுத்த வேண்டும். இந்தக் கட்டுரைப் போட்டி மூலமாய்ச் சிறந்த கட்டுரைகள் வெளி வருமென்று எதிர்பார்க்கிறேன்" என்று எழுதுகிறார். காரைக்கால் ஜனாப் கே. ஏ. சையது அவர்கள் "தாழ்ந்திருந்த தமிழ் நாட்டைத் தலை நிமிரச் செய்தார் பாரதியார். உறங்கிக் கிடந்த உள்ளம் உணர்ச்சி கொண்டு துள்ளி எழுந்தது, அவர் வீர முழக்கம் கேட்டு. கவி நயத்துடன் புது மெருகிட்டு, கேட்டவுடன் மெய் சிலிர்க்கும் வண்ணம் ஆழ்ந்த கருத்துக்கள் அடங்கிய பாரதியார் பாடல்களுக்கு விளக்கம் தரக்கூடியது இக் கட்டுரைப் போட்டி!" என்று உற்சாகத்துடன் கூறியிருக்கிறார். திருநெல்வேலி ஸ்ரீ கோமதி சுவாமிநாதனோ "சிந்தனைக்கு வேலை கொடுத்து அரிய கட்டுரையை வாசக மாணவர்களிடமிருந்து எதிர்பார்க்கும் தாங்கள் மேலும் சிறிது அவகாசம் கொடுத்தால் நலம். முடிவு தேதியை மே௴ 31உக்குத் தள்ளிப் போடும்படி—தற்சமயம் பரீட்சையில் ஈடுபட்டிருக்கும் மாணவர்கள் சார்பிலும் மற்றும் தபால் போக்குவரத்துக்கு நெடுநாளாகும் பினாங்கு சிங்கப்பூர் தமிழர்களின் சார்பிலும் கேட்டுக் கொள்ளுகிறேன்" என்று எழுதுகிறார். இதுபோல இன்னும் பல அன்பர்களிடமிருந்து தேதியைத் தள்ளி வைக்கும்படி கோரிக் கடிதங்கள் வந்திருக்கின்றன. நேயர்களின் குதூகலமான உற்சாகத்தைப் பார்த்து மகிழ்ச்சி அடைகிறோம். கட்டுரைப் போட்டியின் கடைசி தேதியை மே௴ 31உக்குத் தள்ளி வைத்திருக்கிறோம். மற்ற விவரங்களைக் கீழேயுள்ள விளம்பரத்தில் பார்க்கவும்.

பாரதி காட்டிய பாதை

(கட்டுரைப் பரிசுப் போட்டி)

பரிசு ரூ. 100-ம் தங்கமெடலும்

1. இந்தப் போட்டிக்கு அனுப்பும் கட்டுரைகள் பாரதியார் பாடல்களிலிருந்தோ வசன நூல்களிலிருந்தோ ஊக்கம், உற்சாகம், உழைப்பு, முயற்சி, மனோதைரியம், தன்னம்பிக்கை — இவற்றை வற்புறுத்தும் சில வரிகளைப் பொறுக்கி எடுத்து அதை ஆதாரமாகக் கொண்டதாக இருக்க வேண்டும்.

2. கட்டுரைகளின் நீளம் "கல்கி" பத்திரிகையில் இரண்டு பக்கம் முதல் மூன்று பக்கத்துக்குள் அடங்குவதாயிருக்க வேண்டும்.

3. "கல்கி" வாசகர்கள் அனைவரும், புருஷர்களும், பெண்மணிகளும் சிறுவர் சிறுமிகளும் இலங்கை, பர்மா முதலிய வெளிநாடுகளில் உள்ள தமிழ்ச் சகோதர சகோதரிகளும் இந்தக் கட்டுரைப் போட்டியில் ஈடுபடலாம்.

4. பொதுவாக முதற்பரிசும் தங்கமெடலும் அளிக்கப் படுவதைத் தவிர மாணவர்களால் எழுதப்படும் சிறந்த கட்டுரைக்கு மற்றொரு விசேஷப் பரிசு, நூறு ரூபாயும் தங்கமெடலும் அளிக்கப்படும்.

5. ஹைஸ்கூல் மாணவர்களும், காலேஜ் மாணவர்களும் இந்த விசேஷப் பரிசைப் பெறுவதற்கு முயற்சி செய்யலாம். ஆகையால் கட்டுரை எழுதும் மாணவர்கள் தங்கள் விலாசத்துடன் படிக்கும் வகுப்பு, பள்ளிக்கூடம், கலாசாலை இவற்றைக் குறிப்பிட வேண்டும்.

6. நாளது 1952-ம் வருஷம் மே மாதம் 31-ந் தேதிக்குள் போட்டிக் கட்டுரைகள் கல்கி காரியாலயத்துக்கு வந்து சேர வேண்டும். கவரின்மேல் கட்டுரைப் போட்டி என்று குறிப்பிட வேண்டும்.

7. பரிசு பெறாத கட்டுரைகளைத் தவிர, பிரசுரத்துக்குத் தகுதியான கட்டுரைகள் பிரசுரத்துக்கு எடுத்துக் கொள்ளப்படும். அக்கட்டுரைகள் ஒவ்வொன்றுக்கும் பதினைந்து ரூபாய் சன்மானம் அளிக்கப்படும்.

8. முதற்பரிசு பெற எந்தக் கட்டுரையும் தகுதியற்றதென்று கருதப்பட்டால் பரிசுத் தொகையை உசிதம்போல் பிரித்துக் கொடுக்கப் படும்.

9. இந்தப் போட்டி சம்பந்தமான விதிகளை மாற்றவும் திருத்தவும் "கல்கி" ஆசிரியருக்கு உரிமை உண்டு.

10. சந்தேகம் ஏற்படும் எந்த விஷயத்திலும் "கல்கி" ஆசிரியரின் தீர்ப்பே முடிவானது.

மானேஜர் : "கல்கி" : கீழ்ப்பாக்கம் : சென்னை

பொன்னியின் செல்வன்

கல்கி

அத்தியாயம் 18

நிமித்தக்காரன்

நம்பியாண்டார் நம்பியை வரவேற்பதற்காகக் கூட்டியிருந்த சபை கலையும் சமயத்தில் பெரிய மகாராணி தம் செல்வக் குமாரனிடம், "மகனே! நான் இவர்களை அரண்மனை வாசல் வரையில் சென்று வழி அனுப்பி விட்டு வருகிறேன். அதற்குள் நீ உன் இருப்பிடம் சென்று சிரமபரிகாரம் செய்து கொண்டு திரும்பி வா! உன்னிடம் ஒரு முக்கியமான விஷயம் பேச வேண்டும்!" என்றார்.

"ஆகட்டும், தாயே!" என்று சொல்லிவிட்டு மதுராந்தகர் புறப்பட்டார். அரண்மனையில் அவர் தங்கியிருந்த பகுதிக்குப் போனார். அவருடைய உள்ளத்தில் ஆத்திரமும் அசூயையும் கொழுந்துவிட்டு எரிந்தன. யாரோ வழியோடு போகிற ஆண்டிப் பண்டாரத்துக்கு எவ்வளவு தடபுடலான மரியாதைகள்! இராஜகுலத்தின் கௌரவத்துக்கே தம் தாயினால் பங்கம் நேர்ந்துவிடும் போலல்லவா இருக்கிறது! பழுவேட்டரையர்கள் தம் அன்னையைப் பற்றி அடிக்கடி குறை சொல்லுவதில் வியப்பு ஒன்றுமில்லை. உடம்பில் சாம்பலைப் பூசிக் கொண்டு ருத்திராட்ச மாலைகளை அணிந்து கொண்டு யார் வந்தாலும் பெரிய மகாராணிக்குப் போதும்! பதிகம் ஒன்றும் அவன் பாடிக் கொண்டு வந்துவிட வேண்டும்; அல்லது கோயில், குளம், திருப்பணி என்று சொல்லிக் கொண்டு வந்துவிட வேண்டும்; இப்படிப்பட்டவர்களுக்கு அள்ளிக் கொடுத்து இராஜாங்க பொக்கிஷத்தையே இவர் சூனியமாக்கி விடுவார் போலிருக்கிறது! போதாதற்கு, இளவரசி குந்தவை ஒருத்தி எப்போதும் அருகில் இருக்கிறாள். கோயில் திருப்பணி செய்து மிச்சம் ஏதேனும் இருந்தால் அதை மருத்துவ சாலை ஏற்படுத்துவதற்காகச் செலவிட்டு விடுகிறாள். இப்படியெல்லாம் இவர்கள் செய்வதற்கு இடம் கொடுத்து வந்தால் நாளை நம்முடைய மனோரதம் எப்படி நிறைவேறும்? சோழ சிங்காதனத்தில் ஏறி நாலா திசைகளிலும் சைன்யங்களை அனுப்பி இந்த நில உலகம் முழுவதையும்வென்று ஒரு குடை நிழலில் ஆளுவது எவ்விதம் நடைபெறும்?

மறுபடியும் பெரிய மகாராணிக்கு மகனிடம் ஏதோ அந்தரங்கம் பேசவேண்டுமாம்! என்ன அந்தரங்கத்தைச் சொல்லப் போகிறாரோ, தெரியவில்லை! அஷ்டாங்க யோகம், இயம நியம நிதித்தியாசனம் ஆகியவற்றைக் குறித்து ஒருவேளை பேச ஆரம்பித்து விடுவார். கண்களின் பார்வையை மூக்கு நுனியில் செலுத்திக் குண்டலினியை மேல் நோக்கிக் கொண்டு வருவதினால் அறுபத்தி நாலு கலைகளையும் கல்லாமல் கற்கும் முறையைப் பற்றி ஒருவேளை உபதேசிக்க ஆரம்பித்து விடுவார்! அல்லது நடராஜருடைய ஆனந்தக் கூத்தின் உட்பொருளைக் குறித்தும், அவருடைய சடா மகுடம் எதைக் குறிக்கிறது, அவர் அணிந்திருக்கும் பிறை எதைக் குறிக்கிறது என்பவை குறித்தும் சொல்ல ஆரம்பித்து விடுவார். இப்படியெல்லாம் சொல்லிச் சொல்லித்தான் நம்மை உலகம் அரைப் பைத்தியம் என்று பரிகசிக்கும்படியான நிலைக்குக் கொண்டு வந்து விட்டார். அம்மாதிரி பேச்சுக்களுக்கு இனிமேல் இடங்கொடுக்கக் கூடாது. அவர் பேசித்தான் தீருவேன் என்றாலும், நாம் காதிலே வாங்கிக் கொள்ளக் கூடாது......

இருக்கட்டும்; அன்னை மீண்டும் கூப்பிட்டு அனுப்புவதற்குள் அந்த நிமித்தக்காரனிடம் பேசியாக வேண்டும்; வருங்காலத்தைப் பற்றிக் கேட்டாக வேண்டும். யாருமே அறிந்திருக்க முடியாத இரண்டு மர்மமான செய்திகளை அவன் எப்படி அறிந்து கொண்டான்? அதை நினைத்துப் பார்த்தால் ஒரே வியப்பாக அல்லவா இருக்கிறது! அதிசயமான சக்தி அவனிடம் ஏதோ இருக்க வேண்டும். சென்று போன நிகழ்ச்சிகளை

அறிந்து கூறியதுபோல் வருங்காலத்தில் நடக்கப் போவதைப் பற்றியும் அவனால் கூற முடியுமா?—அவனையே கேட்டுப் பார்த்து விடலாம்.

சபையிலிருந்து தாம் புறப்படும் சமயத்தில் நிமித்தக்காரன் அங்குமிங்கும் பார்த்துக் கொண்டு தயங்கித் தயங்கி நிற்பதை மதுராந்தகர் கவனித்தார். அவனைத் தம்முடன் வரும்படி சமிக்ஞையினால் கட்டளையிட்டார். வந்தியத் தேவனுடைய கண்கள் இளவரசியின் முகத்தைப் பார்க்கவும், நயன பாஷையினால் செய்தி உணர்த்தவும் ஆர்வம் கொண்டிருந்தன. ஆனால் இளவரசி மீண்டும் அவனைத் திரும்பிக் கூடப் பாராமல் பெரிய மகாராணியுடன் போய் விட்டாள்.

இது என்ன? தன்னை இளவரசி அடியோடு மறந்து விட்டாளா? அப்படித்தான் இருக்க வேண்டும். எத்தனையோ ஆயிரமாயிரம் பேரை அவர் தினம் தினம் பார்த்து வருகிறார். ஒருதடவை — இரண்டு தடவை பார்த்த தன்னுடைய முகம் அவர் மனதில் எவ்விதம் நினைவிருக்கும்? நான் பைத்தியக்காரன்; இரவும் பகலும் எத்தனை எத்தனையோ விபரீத சம்பவங்கள்—அபாயங்களிடையிலும் இளவரசியின் திருமுகத்தையே நினைத்துக் கொண்டிருந்தேன். இளவரசி எதற்காக என்னை நினைத்திருக்க வேண்டும்? தேனீ தேனை விரும்பி மலரைச் சுற்றிச் சுற்றி வருகிறது. மலருக்குத் தேனீயைப் பற்றி என்ன கவலை? மலர் சூரியனைப் பார்த்துப் புன்னகை புரிந்து கொண்டிருக்கிறது. குந்தவையின் முகமலரை விரியச் செய்யும் சூரியதேவன் யாரோ?...

ஆயினும் தன்னை எதற்காக அனுப்பினாரோ, அந்தச் செய்தியைத் தெரிந்து கொள்வதிலே கூட அவருக்கு ஆர்வம் இல்லாமலா போய்விடும்? தனக்கு முன்னாலேயே யாராவது வந்து சொல்லியிருப்பார்களோ? அது எப்படி முடியும்? இல்லை, இல்லை! அவர் ஏதோ கவலையில் ஆழ்ந்திருக்கிறார் என்பதை அவர் முகம் நன்றாகக் காட்டியது. தன்னை அடையாளம் கண்டு கொள்ளாததுதான் காரணமாயிருக்க வேண்டும். அந்தரங்க ஓலை எடுத்துக் கொண்டு இலங்கை சென்ற தூதன் மதுராந்தகத் தேவரின் பரிவாரங்களில் ஒருவனாகச் சபைக்கு வந்தால் எப்படி அடையாளம் கண்டு பிடித்துத் தெரிந்து கொள்ள முடியும்?—ஆகா! இளவரசியைச் சந்தித்து, அந்நகரில் நுழைவதற்குத் தான் கையாண்ட யுக்திகளைப் பற்றிச் சொல்லும் போது அவர் எவ்வளவு ஆச்சரியம் அடைவார்? ஆனால் சந்திப்பது எப்படி? செய்தி சொல்லி அனுப்புவது எப்படி?...

“நிமித்தக்காரா! என்ன யோசனையில் ஆழ்ந்திருக்கிறாய்?” என்ற மதுராந்தகரின் குரலைக் கேட்டு வந்தியத்தேவன் திடுக்கிட்டான். அதற்குள்ளே அவர்கள் அரண்மனையில் மதுராந்தகத் தேவருடைய தனி அறைக்கு வந்திருந்தார்கள்.

அந்த நாளில் சோதிடர்கள், ஆருடக்காரர்கள், ரேகை பார்த்துக் குறி சொல்வோர், நிமித்தக்காரர் என்று, வருங்காலத்தைப் பற்றிச் சொல்வோர் பலர் இருந்தனர். சோதிடர்கள் ஜாதகம் பார்த்தும், கிரகங்கள் நட்சத்திரங்களின் சஞ்சாரத்தைக் கணித்தும், ஜோதிடம் சொல்வார்கள். ஆருடக்காரர்கள் தங்க



விடம் வருவோர் பேசும் சொற்களைக் கொண்டும், ஆருடம் கேட்கும் வேளையைக் கொண்டும், நூற்றெட்டில் ஒரு இலக்கம் சொல்லும்படி கேட்டும் சுபா சுபங்களைப் பற்றிப் பொதுப்படையாகச் சொல்வார்கள். ரேகை சாஸ்திரமோ அன்றைக்கு இருந்தபடியே இன்றைக்கும் இருந்து வருகிறது.

நிமித்தக்காரர்கள் என்பவர்கள் ஞான திருஷ்டி படைத்த முனி புங்கவர்களைப் போல் அகக் கண்ணினால் பார்க்கும் ஆற்றல் உடையவர்கள். அவர்கள் மனதை ஒரு முகப்படுத்தி வைத்துக் கொண்டு, அகக் கண்ணின் உதவியினால் முக்கால நிகழ்ச்சிகளையும் நேரில் பார்ப்பது போல் பார்த்து உரைப்பார்கள். சிலர் புறக் கண்களை மூடிக் கொண்டு தியானத்தில் அமர்ந்து சொல்வார்கள்; இன்னும் சிலர் தீபப் பிழம்பை உற்று நோக்கிய வண்ணம் மனதை ஒருமுகப் படுத்திக் கொண்டு நடந்து போன, நடக்கப் போகிற நிகழ்ச்சிகளை அந்தத் தீபப் பிழம்பில் பார்த்துச் சொல்வார்கள். இன்னும் சிலருக்கு எதிர்ப் பட்டவர்களின் முகத்தைப் பார்க்கும்போதே அவர்களுடைய சென்ற கால வரலாறும், வருங் கால வரலாறும் மனதில் தோன்றிவிடும். இத்தகைய அதிசய சக்திகள் படைத்தவர்களைத் தவிர, காக்கை இடம் போயிற்று வலம் போயிற்று என்பது முதலான வெளி நிகழ்ச்சிகளைக் கொண்டு சகுன பலன்களை உரைக்கும் சாதாரண நிமித்தக்காரர்களும் உண்டு.

வந்தியத் தேவன் தன்னை "நிமித்தக்காரா!" என்று மதுராந்தகர் அழைத்ததும் திடுக்கிட்டான். இளவரசர் மேலும் தன்னை என்னென்ன கேள்விகள் கேட்பாரோ தெரியவில்லை. அவற்றுக் கெல்லாம் சாமர்த்தியமாகத் தக்க விடை கூறிச் சமாளித்துக் கொள்ள வேண்டும். கடவுளே! இங்கிருந்து, இவரிடமிருந்து தப்பித்துச் செல்லுவது எப்படி? இளவரசியைத் தனியாகச் சந்தித்துப் பேசுவது எப்படி?...

"வேறு யோசனை ஒன்றுமில்லை, ஐயா! நான் நிமித்தக்காரனாயிருப்பதைக் காட்டிலும் இப்போது சபையில் பார்த்த பிள்ளையைப் போல் நாலு பதிகங்களைக் கற்றிருந்தால் எவ்வளவு நன்றாயிருக்கும், எனக்கும் எவ்வளவு உபசாரம் மரியாதை யெல்லாம் நடக்கும் என்றுதான் சிந்தித்துக்கொண்டிருந்தேன்!" என்றான்.

"யார் வேண்டாம் என்றார்கள்! நீயும் தேவாரத் திருப்பதிகம் கற்றுக் கொண்டு பாடுவது தானே?"

"இன்னாருக்கு இன்னபடி என்று எழுதி யிருப்பது போலத்தானே நடக்கும், இளவரசே! வீண் ஆசைப்பட்டு என்ன பயன்?"

"பதிகம் பாடிய அந்தப் பிள்ளையைப் பற்றி உனக்கு என்ன தோன்றுகிறது? அவனுடைய யோகம்......"

"மிக உயர்ந்த யோகம். சிவ யோகமும் இராஜ யோகமும் கலந்தது. மன்னர்களும் மகாராணிகளும் அந்தப் பிள்ளைக்கு மரியாதை செய்வார்கள். மகான்களுடைய பெயருடனே அவருடைய பெயரும் சேர்ந்து இப் பூவுலகத்தில் நெடுங்காலம் விளங்கும்."

வல்லவரையன் ஏதோ குருட்டாம் போக்காக இவ்விதம் கூறினான். ஆனால் மதுராந்தகருடைய மனதில் அவனுடைய வார்த்தைகள் பெருங் கிளர்ச்சியை உண்டாக்கி விட்டன.

"என்னுடைய யோகம் எப்படி என்று சொல், பார்க்கலாம்!"

"அவனுடைய யோகத்தைப்போலவே தங்கள் யோகமும்; சிவயோகமும் இராஜ யோகமும் கலந்தது. ஆனால் இன்னும் மேன்மையானது."

"அப்பனே! கொஞ்சம் விவரமாகச் சொல், பார்க்கலாம்."

வல்லவரையன் என்ன சொல்வது என்றுயோசிக்க அவகாசம்வேண்டினான். ஆகையால், "இப்படி யெல்லாம் அவசரப் பட்டால் முடியுமா? விவரமாகச் சொல்ல வேண்டுமானால், தீபம் ஏற்றி வைத்து, அகிற் புகை போடச் சொல்ல வேணும். தாங்களும் தீபத்துக்குப் பின்னால் உட்கார்ந்துகொள்ள வேணும். அப்போது வருங்கால நிகழ்ச்சிகளை நடக்கப் போகிறபடியே பார்த்துச் சொல்லுவேன்."

மதுராந்தகர் பரபரப்பு அடைந்து தீபம் ஏற்றி வைக்கும்படியும், அகிற் புகை போடும்படியும் கட்டளையிட்டார்.

தீபத்துக்கு முன்னாலும் பின்னாலும் இரண்டு மணைகளும் போடப்பட்டன. மதுராந்தகர் ஒரு மணையில் உட்கார்ந்த பின்னர் அவருக்கெதிரே வந்தியத் தேவனும் உட்கார்ந்தான்.

கண்ணை மூடிக்கொண்டு சிறிது நேரம் தியானத்தில் ஆழ்ந்திருந்தான். அவனுடைய வாய் ஏதோ மந்திரங்களை முணுமுணுத்துக் கொண்டிருந்தது.

பிறகு அவன் உடம்பை ஒரு குலுக்குக் குலுக்கிக் கொண்டு ஆவேசம் வந்தவனைப் போல் நடித்தான். வெறியாட்டக்காரனைப்போல் அவன் உடல் நடுங்கிற்று.

பின்னர், கண்களை அகலத் திறந்தான். எதிரில் இருந்த தீபத்தின் பிழம்பை உற்றுப் பார்க்கலானான்.

சற்று நேரம் பார்த்து விட்டு மதுராந்தகத் தேவரை நோக்கி, "ஐயா! தங்களைப் பற்றி அலட்சியமாக நான் ஏதாவது சொல்லியிருந்தால் மன்னிக்க வேண்டும். தங்களுடைய யோகம் சாதாரண யோகம் அல்ல. அங்கே சபையில் உட்கார்ந்து பாட்டுப் படித்த பிள்ளையின் யோகத்துக்கும் தங்கள் யோகத்துக்கும் யாதொரு சம்பந்தமும் இல்லை. அந்தப் பிள்ளையின் யோகம் அரசர்களின் ஆதரவினால் ஏற்படும் ராஜ யோகம்; தங்களுடைய யோகத்தைப்பற்றி இந்தத் தீபத்திலே நான் காண்பது — ஆகா! என்னையே பிரமிக்கச் செய்கிறது!" என்றான்.

"அப்படி என்ன காண்கிறாய்? சொல்! சொல்!" என்றார் மதுராந்தகர்.

"ஆகா! எப்படிச் சொல்லுவேன்? சொல்லுவதற்கு வார்த்தைகள் எனக்குக் கிடைக்கவில்லை! அதோ கண்ணுக் கெட்டிய தூரம் மணிமுடி தரித்த மன்னர்கள் அணிவகுத்து நிற்கிறார்கள். மந்திரிகளும் சாமந்தர்களும் அதிகாரிகளும் வரிசை வரிசையாக நிற்கிறார்கள். அவர்களுக்கு அப்பால், முடிவில்லாத கடலைப் போல், சேனா வீரர்கள் அலைமோதிக் கொண்டு நிற்கிறார்கள். அவர்கள் கையில் பிடித்த வேல்களும் வாள்களும் மார்பில் தரித்த கவசங்களும் ஒளி வீசிக் கண்ணைப் பறிக்கின்றன. தூரத்திலுள்ள மாட மாளிகைகளின் மேல் ஜனங்கள் நின்று ஆர்ப்பரிக்கிறார்கள். கோட்டை கொத்தளங்கள் மீதெல்லாம் மக்கள் கூட்டம் கூட்டமாய் நிற்கின்றனர். அவர்கள்...அவர்கள் ...ஏதேதோ கோஷம் செய்கிறார்கள்!..."

"சொல், சொல்! மக்கள் என்ன கோஷமிடுகிறார்கள்?"

"இளவரசே! பல்லாயிரம் மக்களின் கோஷமாகையால் நன்றாகக் கேட்கவில்லை. 'சோழ குலத் தோன்றல் வாழ்க! திரிபுவன சக்கரவர்த்தி வாழ்க! மன்னாதி மன்னர் வாழ்க!' என்றெல்லாம் கோஷிப்பது போலத் தோன்றுகிறது."

"அப்புறம் என்ன?"

"மக்கள் திரண்டு கூட்டம் கூட்டமாக முன்னேறி வருகிறார்கள். வேலும் வாளும் பிடித்த வீரர்கள் அவர்களைத் தடுத்து நிறுத்துகிறார்கள். சிறிது நேரம் அங்கே ஒரே கூச்சலும் குழப்பமுமாக இருக்கிறது."

"சரி, சரி! கூட்டம் எதற்காகக் கூடியிருக்கிறது? அதை சொல்!"

"அதைத்தான் நானும் இப்போது பார்க்கப் போகிறேன். கூட்டத்தின் மத்தியில் புலிக்கொடி வானளாவிப் பறக்கிறது. அதற்குக் கீழே மீனக்கொடி, விற்கொடி, பனைக்கொடி, சிங்கக்கொடி, ரிஷபக் கொடி, பன்றிக் கொடி ஆகியவை தாழ்வாகப் பறக்கின்றன. மயன் மாளிகையைப் போன்ற சபா மண்டபத்தின் நடுவிலே நவரத்தின கசிதமான தங்கச் சிங்காதனம் போட்டிருக்கிறது. அருகில் ஒரு பீடத்தில் கோடி சூரியப் பிரகாசமான வைர வைடூரியங்கள் பதித்த மணி மகுடம் ஒன்று வைத்திருக்கிறது. சிங்காதனத்துக்கு மேலே தண்மதியின் வெண்ணிலவை யொத்த குளிர்ச்சி பொருந்திய பொன் கொற்றக் குடை விரிந்து கவிந்திருக்கிறது. தேவ கன்னிகையரைப் போன்ற பெண்கள் கைகளில் வெண்சாமரங்களை வைத்துக் கொண்டு காத்திருக்கிறார்கள். பற்பல புண்ணிய தீர்த்தங்களிலிருந்து கொண்டு வந்த தண்ணீருடன் பொற் குடங்கள் வரிசையாக வைத்திருக்கின்றன. இளவரசே! பட்டாபிஷேகத்துக்கு எல்லாம் ஆயத்தமாகி விட்டன!......"

"யாருக்குப் பட்டாபிஷேகம்? அதைச் சொல், அப்பனே!" என்றார் மதுராந்தகர்.

"இதோ அதுவும் தெரிந்து விடும். சபா மண்டபத்தின் பிரதான வாசற் கதவு திறக்கிறது. பல வகைக் கட்டியம் கூறிக்கொண்டு சிலர் உள்ளே வருகிறார்கள். வீர கம்பீரத் தோற்றமுடைய கிழவர் ஒருவர் வருகிறார். அவருடைய சகோதரர் போலக் காணப்படும் இன்னொருவர் வருகிறார். அவர்களுக்குப் பின்னால் மன்மதனை யொத்த சுந்தர ரூபமுடைய இராஜகுமாரர் ஒருவர் இதோ வருகிறார்......"

"அது யார்? யார்?"

வந்தியத்தேவன் மதுராந்தகரை மறுமுறை உற்றுப் பார்த்து விட்டு மீண்டும் தீபத்தை நோக்கினான்.

"ஐயா! தங்களைப் போலவே அவர் இருக்கிறார்! தங்களைப் போல என்ன? தாங்களேதான்! முன்னால் வந்த இருவரும் தங்களைச் சிம்மாசனத்தை நோக்கி அழைத்துச் செல்கிறார்கள். 'ஜய விஜயீபவா!' என்ற கோஷம் சமுத்திர

கோஷத்தைப் போல் எழுகிறது. தங்கள் மீது நூறு நூறு கரங்கள் மலர்களையும் மணிகளையும் மஞ்சள் நிறத் தானியங்களையும் தூவுகின்றன. இதோ தாங்கள் சிங்காதனத்தை நெருங்கி விட்டீர்கள்! அடடா! இது என்ன? சகுனத்தடை போல் யார் குறுக்கே வருகிறது? தலைவிரி கோலமாக ஒரு ஸ்திரீ குறுக்கே வந்து தங்களுக்கும் சிம்மாதனத்துக்கும் நடுவில் நிற்கிறாள். 'வேண்டாம்' என்று தங்களைத் தடை செய்கிறாள். தாங்கள் அந்த ஸ்திரீயைத் தள்ளுகிறீர்கள்!...... அடாடா! இது என்ன, நல்ல சமயத்தில் இப்படிப் புகை வந்து மூடிக்கொள்கிறது? ஒன்றும் தெரியவில்லையே?..."

"பார்! பார்! நன்றாக உற்றுப் பார்! அப்புறம் என்ன நடக்கிறது?"

"இளவரசே! மன்னிக்க வேண்டும்! பெரும் புகைப் படலம் வந்து எல்லாவற்றையும் மறைத்து விட்டது!......"

"பார், அப்பனே! பார்! அந்த ஸ்திரீ யார் என்றாவது பார்! அவளை நீ முன்னம் பார்த்திருக்கிறாயா?"

"இளவரசே! அந்த மாதரசியும் மறைந்து விட்டாள். தாங்களும் மறைந்து விட்டீர்கள். சபை, சிம்மாசனம், கிரீடம், — எல்லாம் மறைந்து விட்டன. இந்த அரண்மனையில் மந்திர சக்தி உள்ளவர்கள் யாரோ இருக்க வேண்டும்! வேண்டுமென்றே மந்திரம் போட்டுத் தடுத்து விட்டதாகக் காண்கிறது. ஐயோ! என் முகமெல்லாம் பற்றி எரிவது போல் தகிக்கிறது!"......

இவ்விதம் கூறி வந்தியத்தேவன் தன் கரங்களினால் முகத்தை மூடிக் கொண்டான். அப்படியே சிறிது நேரம் இருந்து விட்டுக் கண்களைத் திறந்து பார்த்தான்.

மதுராந்தகத் தேவருடைய உடம்பின் நரம்புகள் எல்லாம் புடைத்துக் கொண்டிருந்தன. அவருடைய முகத்தில் கோபம் கொதித்துக் கொண்டிருந்தது. கண்கள் எரியும் தணல்களைப் போல் பிரகாசித்தன. வந்தியத்தேவனுக்குச் சிறிது பயமாகவே போய் விட்டது. இளவரசருடைய ஆசை வெறியை அளவுக்கு அதிகமாகக் கிளப்பி விட்டு விட்டோமோ என்று பயந்து போனான்.

"மறுபடியும் பார்! நன்றாகப் பார்த்துச் சொல்!" என்றார் மதுராந்தகர்.

"இளவரசே! அதில் பயனில்லை! ஒரு தடவை மறைந்த காட்சி மறுபடியும் உடனே வராது. சில நாள் கழிந்த பிறகு தான் வரும். தீபத்தைப் பார்த்து; வேண்டுமானால் வேறு ஏதாவது காட்சி தெரிந்தால் சொல்லுகிறேன்..."

"சொல், சொல்! என்ன காட்சி புலப்பட்டாலும் சொல்!"

"ஜனங்கள் ஒரே குழப்பமாயிருக்கிறார்கள். துக்கமாயும் கோபமாயும் இருக்கிறார்கள். தூதன் ஒருவன் வந்து அவர்களிடம் ஏதோ செய்தி சொல்லுகிறான். இராஜ குடும்பத்தைச் சேர்ந்த யாரோ ஒருவர் கடலில் மூழ்கிவிட்டதாகச் சொல்கிறான். ஐயோ! பாவம்! அந்தத் தூதனை ஜனங்கள் அடிக்கப் போகிறார்கள். இளவரசே! அம்மாதிரி ஏதாவது நேர்ந்தால் தாங்கள் அந்த சந்தர்ப்பத்தில் ஜனங்கள் மத்தியில் செல்ல வேண்டாம்! சென்றாலும் ஜாக்கிரதையாகச் செல்லுங்கள்!"

"கடலில் மூழ்கியது யார் என்று பெயர் சொல்ல வில்லையா?..."

"கூச்சலிலும் குழப்பத்திலும் பெயர் காதில் விழவில்லை. அந்தக் காட்சி மறைந்து விட்டது......இப்போது கழுத்தில் மண்டை ஓடு மாலைகளை அணிந்த ஒரு பயங்கரமான கூட்டம் என் கண்முன் தெரிகிறது. காபாலிகர்கள்—காலாமுகர்கள் போல் தோன்றுகிறார்கள். அவர்களில் ஒருவன் கையில் ஒரு பயங்கரமான அரிவாளை வைத்துக் கொண்டிருக்கிறான். அவனுக்கு எதிரில் பலிபீடம் ஒன்று இருக்கிறது. இளவரசே! இங்கேயும் இராஜகுமாரர் ஒருவர் வருகிறார். காலாமுகர்கள் அவரைச் சூழ்ந்து கொண்டு கொம்மாளம் அடிக்கிறார்கள். ஐயா! தப்பித் தவறிக்கூடத் தாங்கள் அப்படிப்பட்ட கூட்டத்தின் மத்தியில் போக வேண்டாம்!......"

இதைக் கேட்டதும் மதுராந்தகருடைய முகத்தில் வியர்வை துளித்தது. அவர் உடம்பு நடுங்கியது.

வந்தியத்தேவன் அதைக் கவனித்துக் கொண்டான். பின்னர், "இளவரசே! மேலே ஒன்றும் எனக்குத் தெரியவில்லை. மன்னிக்க வேண்டும். என் தலை சுற்றுகிறது. கண் இருளுகிறது. யாரோ மந்திரம் போட்டுத் தடை செய்கிறார்கள். இன்னொரு சமயம் இன்னொரு இடத்தில் பார்த்துச் சொல்கிறேன்!" என்று கூறித் தன் தலையைக் கைகளால் பிடித்துக் கொண்டான்.

அச்சமயத்தில் அரண்மனைச் சேவகன் ஒருவன் வந்து பெரிய மகாராணி செம்பியன்மாதேவி இளவரசரை அழைத்து வரச் சொன்னதாகக் கூறினான்.

மதுராந்தகர் தன் உள்ளத்தில் பொங்கிய ஆத்திரத்தை யெல்லாம் அன்னையின்மீது கொட்டி விடுவது என்று தீர்மானித்துக் கொண்டு புறப்பட்டார்.

"ஐயா! தலைவலி பொறுக்க முடியவில்லை. அரண்மனைக்கு வெளியேசென்று இந்த நகரைக் கொஞ்சம் சுற்றிப் பார்த்து விட்டு வருகிறேன்!" என்று வந்தியத்தேவன் அவரிடம் கூறி அநுமதி பெற்றுக் கொண்டான்.

* * *

பழையாறை மருத்துவர் மகன் பினாகபாணி பண்டிதனுக்கு வாழ்க்கையில் ஒரு புதிய ரஸம் ஏற்பட்டிருந்தது. சில நாளைக்கு முன்பு வரையில் அவன் தந்தையிடம் மருந்து சாஸ்திரம் கற்றுக் கொள்ளுவதுடன் திருப்தியடைந்தான். கோடிக்கரைப் பிரயாணத்தின் போது வந்தியத் தேவன் வெளி உலகத்தைப் பற்றிப் பல விஷயங்களை அவனுக்குக் கூறினான். அத்துடன் மட்டும் அவன் நிறுத்தவில்லை. புதிதாகக் காதல் வலையில் விழுந்தவர்களுக்கு அதைப் பற்றி யாரிடமாவது பேசத் தோன்றுவது இயல்பு. வைத்தியர் மகன் முதல்தர அசடு என்று தெரிந்து கொண்ட வந்தியத் தேவன் அவனிடம் பெண்களிடம் காதல் கொள்ளுவதைப் பற்றிய அபாயங்களைப் பற்றிப் பேசலானான். தான் ஒரு பெண்ணிடம் காதல்கொண்டு அதன் பயனாக அநுபவித்துவரும் இன்ப துன்பங்களைப் பற்றியும் கூறினான்.

வைத்தியர் மகன் பினாகபாணி இந்தப் பேச்சுக்களை முதலில் அவ்வளவாக ரஸிக்கவில்லை. சிறிது சிறிதாக அவன் மனம் மாறியது. வந்தியத் தேவனிடம் விவரமில்லாத அசூசையும் ஆத்திரமும் ஏற்பட்டன. அவனுடைய மனதைக் கவர்ந்த மங்கையின் ஊர், பெயர் என்ன என்று கேட்டான். வந்தியத் தேவன் சொல்ல மறுத்து விட்டான். அதனால் பினாகபாணியின் கோபம் அதிகமாயிற்று. கோடிக்கரை போய்ச் சேருவதற்குள் வந்தியத்தேவனை வைத்தியரின் மகன் தன்னுடைய சத்துருவாகவே கருதத் தொடங்கி விட்டான்.

அவன் மனதிற்குள் புகைந்து கொண்டிருந்த தீ பூங்குழலியைப் பார்த்ததும் கொழுந்து விடத் தொடங்கியது. பூங்குழலி அவனை மறுதளித்ததுடன் பரிகாசமும் செய்தாள். அவள் தன்னைக் காட்டிலும் வந்தியத் தேவனை அதிகம் மதிக்கிறாள் என்று தெரிய வந்ததும் பினாகபாணியின் பைத்தியம் முற்றிவிட்டது. வந்தியத் தேவனைத் தொடர்ந்து வந்த வீரர்களிடம் அவனைக் காட்டிக் கொடுக்கவும் துணிந்தான்.

பழுவேட்டரையரின் ஆட்கள் வந்தியத்தேவனைப் பிடிக்க முடியாமல் பினாகபாணியைப் பிடித்துக் கொண்டு தஞ்சை சென்றார்கள். சிறிது நேரம் அவன் பாதாளச் சிறையில் வசிக்கும்படி நேர்ந்தது. இதனாலெல்லாம் அவனுக்கு முன்னமே வந்தியத்தேவனிடம் உண்டாகியிருந்த கோபம் மேலும் வளர்ந்தது.

இளவரசி குந்தவை அவனைப் பார்த்துப் பேசி விடுதலை செய்வதற்காகப் பாதாளச் சிறைக்குப் போவதற்கு முன்னாலேயே அவன் விடுதலையாகி யிருந்ததைக் கண்டோம். விடுதலை செய்தவள் பழுவூர் இளைய ராணி நந்தினிதான். தன்னிடம் சொல்லிக் கொள்ளாமல் வந்

தியத் தேவன் தஞ்சை அரண்மனையிலிருந்து தப்பித்துச் சென்றது பற்றி நந்தினி கோபமும் சந்தேகமும் கொண்டிருந்தாள். அவன் பழையாறை சென்று பிறகு ஈழநாட்டுக்குத் தப்பிச் சென்றதை அறிந்த பிறகு அவளுடைய சந்தேகம் அதிகமாயிற்று. எப்படியும் ஒரு நாள் பழையாறைக்குத் திரும்பி வந்து இளவரசி குந்தவையைப் பார்க்க முயல்வான் என்று ஊகித்தாள். அப்போது அவனைக் கண்டு பிடித்துச் செய்தி அனுப்பப் பழையாறையில் தனக்கு நம்பகமான ஆள் ஒருவன் வேண்டும் என்று தீவிரமாக எண்ணினாள்.

வைத்தியர் மகன் பினாகபாணியைப் பார்த்துப் பேசிய பிறகு அவன் அந்த வேலைக்குச் சரியான ஆள் என்று முடிவு செய்தாள். அவனிடம் அந்தப் பெரிய பொறுப்பை ஒப்புவித்தாள்.

"உனக்குத் துரோகம் செய்து விட்டுத் தப்பிச் சென்றவன் சீக்கிரத்தில் ஒரு நாள் பழையாறைக்குத் திரும்பி வருவான். நீ கண்ணும் கருத்துமாகப் பார்த்திருந்து அவன் எங்கெங்கே போகிறான், என்னென்ன செய்கிறான் என்பதைக் கவனித்து எனக்கு உடனே சொல்லி அனுப்ப வேண்டும். அவ்விதம் செய்தால் உனக்கு வேண்டிய வெகுமதிகளை அளிப்பேன்" என்றாள்.

பின்னர் சின்னப் பழுவேட்டரையரும் அவனை அழைத்து வந்தியத் தேவனைப் பற்றிக் கட்டளை இட்டார். "அந்த இராஜத் துரோகி திரும்பி வரும்போது அவனைப் பிடித்துக் கொடுத்தால் உன்னை நமது ஒற்றர் படையில் சேர்த்துப் பெரிய அதிகாரியாக்கி விடுவேன்" என்று அவனுக்கு ஆசை காட்டியிருந்தார்.

அது முதல் பினாகபாணி மருத்துவத் தொழிலில் பற்றை இழந்து விட்டான். ஏதேதோ ஆகாசக் கோட்டைகள் கட்டிக் கொண்டே பழையாறை நகரின் வீதிகளில் ஓயாமல் அலைந்து கொண்டிருந்தான். திடீர் திடீரென்று அவனுக்குச் சந்தேகம் உதித்து விடும். வீதியில் போகிறவர்களின் அருகில் ஓடிச் சென்று முகத்தை உற்றுப் பார்ப்பான். "இவன் இல்லை!" என்று முணு முணுத்துக் கொண்டே அப்பால் செல்வான். இதைப் பார்த்த பலரும் வைத்தியர் மகனுக்குச் சித்தப்பிரமை பிடித்து விட்டதென்று எண்ணத் தொடங்கினார்கள்.

ஆயினும் பினாகபாணி தன்னுடைய முயற்சியைக் கைவிடவில்லை.

மதுராந்தகத் தேவரும் அவருடைய பரிவாரங்களும் பழையாறைக்குள் பிரவேசித்தபோது பினாகபாணி அவர்களை அவ்வளவு நன்றாகக் கவனிக்கவில்லை. அவர்களில் வந்தியத் தேவன் இருக்கக் கூடும் என்று அவன் எதிர்பார்க்கவில்லை. திருநாரையூர் நம்பியின் பல்லக்கைச் சூழ்ந்திருந்த பெருங்கூட்டத்திலே அவன் சுற்றிச் சுற்றி வந்து பார்த்துக் கொண்டிருந்தான். அப்போது சற்றுத் தூரத்தில் மதுராந்தகருடைய பரிவாரம் போவது தெரிந்தது. மதுராந்தகருக்கு அருகில் குதிரை மேலிருந்தவன் ஒரு தடவை திரும்பிப் பார்த்த போது பினாகபாணிக்கு ஐயம் உதித்தது. ஆனால் அவன் விரைவாகச் சென்று அரண்மனையில் புகுந்து விட்டபடியால் சந்தேகத்தைத் தீர்த்துக் கொள்ள முடியவில்லை.

அட்டைப்பட விளக்கம்

ஒரு சமயம் சங்கீத வித்துவான் ஒருவர் வேஷ்டி துவைத்துக் கொண்டிருந்தார்.

அப்போது அருகில் இருந்த ஒரு பெரியவர் "நீங்கள் செய்வது சுத்தத் தப்பு" என்று வித்துவானைக் கடிந்து கொண்டார்.

வித்துவானுக்கு ஒன்றும் புரியவில்லை. "வேஷ்டி துவைப்பது தவறா!" என்று கேட்டார்.

"வேஷ்டி துவைப்பது தவறு என்று நான் சொல்லவில்லை. ஆனால் வேஷ்டி துவைக்கும்போது தாளம் ஏன் தவறுகிறது!" என்று கேட்டார் அந்தப் பெரியவர்.

அந்தப் பெரியவர்தான் வைணிக மகாவித்துவான் காரைக்குடி ஸ்ரீ சாம்பசிவ அய்யர் அவர்கள். வித்துவான் வேஷ்டி துவைக்கும்போது தாளம் தவறுவதைக் கூட அவரால் சகிக்க முடியவில்லை!

ஸ்ரீ சாம்பசிவ அய்யரும் காலஞ் சென்ற அவரது மூத்த சகோதரர் ஸ்ரீ சுப்பராம அய்யரும் பரம பக்தர்களும் நாத உபாசகர்களுமான வைணிக வித்துவான்களின் பரம்பரையைச் சேர்ந்தவர்கள்.

அவர்களுடைய முன்னோர்கள் ஏழு தலைமுறைகளாக, அதாவது சுமார் முந்நூறு வருஷ காலமாக, வீணை வாத்தியத்தின் மூலம் நாதப்பிரம்ம உபாசனை செய்து வந்தவர்கள்.

அத்தகைய உயர்ந்த சங்கீதப் பரம்பரையைச் சேர்ந்த ஸ்ரீ சாம்பசிவ அய்யர் அவர்களை வாத்திய சங்கீதத்துக்காக நம் இந்திய சர்க்கார் கௌரவித்தது மிகவும் போற்றத் தக்கது.

கலப்பற்ற சுத்த கர்நாடக சங்கீதத்துக்கு உறைவிடமாகவும் நாதப்பிரம்ம உபாசகராகவும் விளங்கும் ஸ்ரீ சாம்பசிவ அய்யரவர்களின் உருவப்படம் இந்த இதழ் அட்டையை அலங்கரிக்கின்றது.

அருணோதயம் முதல்
நட்சத்திரம் உதிக்கும்
வரையில் — நாள்முழுவதும்
இனிய வாசனையோடிருப்பீராக



டால்கம் பவுடர்




பள பள
வென்று ஜொலிக்கும்
புதுமைக்கு காஷ்மீர் புக்கே
டால்கம் பவுடரை உங்கள்
மேல் தாராளமாகத் தூவுங்கள்.
அது அதிகக் கசிவை உறிஞ்சுகிறது ... எரிச்சலையும்
அரிப்பையும் அடங்கச் செய்கிறது ... உங்களைக்
குளிமையுடனும் இனிய வாசனையுடனும், நாள
முழுவதும் புதுமையுடனும் இருக்கச் செய்கிறது.


காஷ்மீர் புக்கே

மானிடர்கள் விரும்பும் பரிமளத்துடன்


1806 லிருந்து கோல்கேட் உயர்ந்த சுகந்திரங்கள் பெயர்போனது




ஒவ்வொரு வேலைக்கும் பிரத்யேகமான




ஷாலிமார் பெயிண்ட்



இருக்கிறது



புத்திசாலிகள் ஷாலிமார் பெயிண்டையே



SPX 83ATM

உபயோகிக்கிறார்கள்.



SHALIMAR PAINT, COLOUR & VARNISH CO., LTD.

POST BOX 136, MADRAS 1

Importers & Distributors for Ceylon:

LEWIS BROWN & CO., LTD., POST BOX 85, COLOMBO

மனித தெய்வம்

கே. ஆர். கௌஸல்யா

ராமநாதன் கூறிய அந்த வார்த்தைகளைக் கேட்ட கீதாவின் முகத்தில் ஒருவித மாறுதல் தோன்றியது.

"பாவம்......!" என்ற வார்த்தை வெளி வந்தது அவளுடைய வாயிலிருந்து.

"என்ன கீதா! போயும் போயும் அவனுக்காகப் பரிதாபப் படுகிறாயே! உன்னுடைய வாயிலிருந்து அவனுக்காகப் 'பாவம்' என்ற வார்த்தை வருவதற்குக் கூட அவன் அருகதையற்றவன் ஆயிற்றே!" என்றான் ராமநாதன் வெறுப்புடன்.

"அப்படிச் சொல்லாதே, அண்ணா! என்ன இருந்தாலும் பெரிய அண்ணாவுக்காக என் மனம் பச்சாத்தாபப்படத்தான் செய்கிறது..."

"ஆமாம், அந்தப் பச்சாத்தாபமும், இரக்கமும் அப்போது அவனுக்குத் தோன்றவில்லையே!"

"உண்மைதான். என் மனத்தில் இப்போது தோன்றும் இந்தப் பரிதாப உணர்ச்சி அவன் மனத்தில் அப்போது தோன்றாமல் போய்விட்டதல்லவா? அப்படியிருக்க நான் ஏன் அவனைக் குறித்து வருத்தப்பட வேண்டும்!" என்று ஒரு நீண்ட பெரு மூச்சுடன் கூறினாள் கீதா.

'டங்' 'டங்'—மணி ஆறடித்தது.

"கீதா! இன்று நான் ஆபீஸ் விஷயமாக ஒரு சினேகிதனைப் பார்க்க வருவதாகச் சொல்லியிருக்கிறேன்......நான் போய் வரட்டுமா?......" என்று சொல்லிக் கொண்டே எழுந்தான் ராமநாதன்.

"இன்னொரு நாள் சாவகாசமாக வா, அண்ணா!" என்று அன்புடன் சொல்லிக் கொண்டே வாசல் வரையில் வந்து அவனை வழியனுப்பி விட்டு உள்ளே வந்த கீதா முன் புற ஹாலில் உட்கார்ந்தாள். ரேடியோவைத் திருப்பினாள். எவ்வளவு முயன்றும் மனம் இசையில் லயிக்க மறுத்தது. ரேடியோவை மூடிவிட்டு மாடி வராந்தாவுக்குச் சென்று நின்று கொண்டாள். பங்களாவின் முன்புறத் தோட்டத்தில் மலர்ந்திருந்த மலர்களின் சுகந்தத்தை மந்தமாருதம் சுமந்து வந்து வீசிக்கொண்டிருந்தது. கீதாவின் சிந்தனை அலை அலையாக எழும்பி மிதந்து சென்று கொண்டிருந்தது.

ஜானகி பால்ய வயதிலேயே கணவனை இழந்தவள். தன் மூன்று குழந்தைகளுடன் உலகில் திக்கற்றவளாக நிறுத்தப்பட்டாள் அவள். மூத்தவன் ஜெயராமன். இளையவன் ராமநாதன். கீதா அப்போது கைக் குழந்தை. எவ்வளவோ இன்னல்களைப் பொறுமையோடு சகித்துக் கொண்டு மூன்று குழந்தைகளையும் தன் கண்ணில் வைத்து இமையால் மூடிக் காத்து மிகவும் அருமையோடு வளர்த்து வந்தாள் அவள்.

திடீரென்று ஒருநாள் ஜுரம் என்று படுத்தாள் ஜானகி. ஏற்கெனவே அனுபவித்த கஷ்டங்களும், வியாதியும் ஒன்று சேர்ந்து கொண்டதால் அவள் உடலும், மனமும் ஒன்றையொன்று போட்டியிட்டுக் கொண்டு பலஹீனமடைய ஆரம்பித்தன.

அன்று ஜானகியின் உடல் மிகவும் மோசமான நிலைக்குள்ளாயிருந்தது. தான் பிழைத்திருக்கப் போவது இன்னும் சிலமணி நேரம் தான் என்று உணர்ந்து கொண்டு விட்டாள் அவள். கலங்கிய உள்ளத்துடனும், கண்ணீர் மல்கும் விழிகளுடனும் தன் புத்திரர்களை அருகே அழைத்தாள் அவள். குழந்தை கீதாவை அவர்களிடம் ஒப்படைத்தாள். "உலகமறியாத சிறு பெண்ணான அவளை எப்படியாவது வளர்த்துப் பெரியவளாக்கி ஒரு நல்ல இடத்தில் கல்யாணம் செய்து அவள் கண்ணைக் கசக்காமல் பார்த்துக் கொள்ள வேண்டியது அவள் கூடப் பிறந்தவர்களாகிய உங்கள் பொறுப்பு!" என்று வேண்டினாள். ஜெயராமனின் முகத்தில் எவ்வித சலனமும் இல்லை. ஆனால் ராமநாதனின் கண்களில் ஜொலித்த அந்தக் கண்ணீர்த் துளிகளைக் கண்ட தாயின் சோர்ந்து கிடந்த வதனத்தில் புன்னகை அரும்பியது. தன் மக்கள் மூவரையும் கடைசியாக ஒரு முறை பார்த்துவிட்டுத் தன் கண்களை மூடிக் கொண்டாள் அவள்.

தாயின் மறைவுக்குப் பின் ஜெயராமன், ராமநாதன், கீதா இவர்களுடைய வாழ்க்கை வேறு விதமாக மாறியது.

ஜெயராமன் ஒரு பாங்கில் உத்தியோகம் ஏற்றான். நல்ல வரும்படி வர ஆரம்பித்தது. ராமநாதன் ஒரு கம்பெனியில் குமாஸ்தாவாக அமர்ந்தான். அவனுக்கு ஏதோ சொற்ப சம்பளம் தான் கிடைத்தது. இருந்தாலும் ஜெயராமனைவிட அவன்தான் குடும்பத்திற்கென அதிகச் செலவு செய்தான்.

ராமநாதன், கீதா இவர்களுடன் இனி சேர்ந்திருக்க விரும்பாத ஜெயராமன் தனக்குப் பிடித்த ஒரு பெண்ணை மணந்துகொண்டு வேறு இடத்திற்குத் தனிக் குடித்தனம் சென்று விட்டான். அவனுடைய போக்கு ராமநாதனுக்கும், கீதாவுக்கும் அளவற்ற வெறுப்பை யளித்தது. இனிமேல் தன் ஒரே அண்ணனுடைய சம்பாத்தியத்தினால் குடும்பம் நடக்கவேண்டுமே என்று எண்ணி எண்ணி மனம் குமுறினாள் கீதா.

நாட்கள் தம் போக்கில் ஓடிக்கொண்டிருந்தன. கீதா கல்யாணப் பருவத்தை எட்டிப் பிடித்துக் கொண்டிருந்தாள். ராமநாதன் கீதாவின் திருமண விஷயத்தில் அதிக சிரத்தை எடுத்துக் கொண்டு வரன் தேட

ஆரம்பித்தான். அன்று சமையலறையில் ஏதோ வேலையாக இருந்தாள் ஸீதா. கூடத்தில் ராமநாதனும், ஒரு தரகரும் இரண்டு ஜாதகங்களை வைத்துக் கொண்டு ஏதோ பல விஷயங்களைப் பற்றிப் பேசிக் கொண்டிருந்ததை அவள் உற்றுக் கேட்டாள்.

"இதோ பாருங்கள், ராமநாதன்! இது தான் அந்த இரண்டாந் தார மனிதரின் ஜாதகம். அவருக்கு வயது நாற்பதாகிறது. தங்கமான குணம் வாய்ந்தவர். ஏராளமான சொத்து இருக்கிறது. குடும்பத்தில் ஒரு தொந்தரவும் கிடையாது. அதோடு அவர் மிகவும் நல்ல மனிதர்" என்றார்.

பிறகு மற்றொரு ஜாதகத்தை எடுத்தார் அந்தத் தரகர். "இது ஒரு பணக்கார வீட்டுப் பிள்ளையின் ஜாதகம். வயது இருபத்திநாலுதான் ஆகிறது. ஆனால் அவர்கள் வரதக்ஷிணை இரண்டாயிரமும் மேல் சீர் செனத்திகள் ஐயாயிரமும் எதிர்பார்க்கிறார்கள். முடிந்தால் நீங்கள் அதை முயற்சி செய்து பார்க்கலாம்" என்று சொல்லிவிட்டு எழுந்து சென்று விட்டார் தரகர். ராமநாதன் சாப்பிட வேண்டிய நினைவு கூட இல்லாமல் யோசனையில் ஆழ்ந்து உட்கார்ந்திருந்தான்.

அதே சமயம் ஸீதாவின் உள்ளமும் சிந்தனையில் சூழ்ந்திருந்தது. அந்த இரண்டாந்தார மனிதருக்கு வயது அதிகம்தான். அவரை மணந்தால் அவள் தாம்பத்ய வாழ்க்கையின் பரிபூரண இன்பத்தை அடைய முடியாது. ஆனால் அவள் அண்ணா ராமநாதனால் அந்த இரண்டாவது வரனை நிச்சயமாக ஏற்பாடு செய்ய இயலாது. ஐயாயிரமும், பத்தாயிரமும் செலவழிக்க அவனுக்குச் சக்தியில்லை. அவனுடைய சொற்ப சம்பளத்தில், அவளுக்குக் கல்யாணம் செய்து வைத்தால் அதுவே பெரிது. ஒரு முடிவான தீர்மானத்திற்கு வந்து விட்டாள் ஸீதா. தன் அண்ணா ராமநாதனுக்காகத் தன் வாழ்க்கை இன்பங்களை, சுகங்களை, அபிலாஷைகளைத் தியாகம் செய்து விடத் துணிந்து விட்டாள். எனவே, அவள் மெள்ள ராமநாதன் இருக்குமிடம் வந்தாள்.

"அண்ணா, இவ்வளவு நேரமும் நீயும் அந்தத் தரகரும் பேசியதை நான் கேட்டேன். நீ வீணாக யோசிக்காதே. நான் அந்த இரண்டாந் தார வரனையே மணந்து கொள்ளுகிறேன்......" என்றாள்.

அவளுடைய பெருந் தன்மையான மனப்பான்மையை ஒருவாறு புரிந்து கொண்டு விட்டான் ராமநாதன். இருந்தாலும் அவன் உள்ளத்தில் ஒரு ஆசை எழுந்தது. தன் அண்ணன் ஜெயராமனிடம் கொஞ்சம் பணம் கேட்டு அத்துடன் தானும் கொஞ்சம் கடன் வாங்கி அந்த முதல் தார வரனையே அவளுக்கு முடித்து விட எண்ணினான் அவன்.

இந்த நோக்கத்துடன் ஜெயராமனைப் போய்ப் பார்த்த ராமநாதனுக்குப் பெரிய ஏமாற்றந்தான் ஏற்பட்டது.

அவர்களிடமிருந்து பிரிந்து தனியாக வந்து விட்ட பிறகு தனக்கும் ஸீதாவின் விவாகத்தைப் பற்றி எவ்விதப் பொறுப்பும் கிடையாதென்றும் அதனால் தான் பணம் கொடுத்து உதவ முடியாதென்றும் நிர்த்தாட்சண்யமாக ஜெயராமன் கூறிவிட்டான். அதற்கு மேல் அவனிடம் பேச என்ன இருக்கிறது? பேசாமல் திரும்பி விட்டான் ராமநாதன்.

ஒரு நல்ல நாளில் ஸீதாவின் விவாகம் நடந்தேறியது. அந்த இரண்டாந் தார வரனுக்குத் தான் அவள் வாழ்க்கைப் பட்டாள். அது வரை ஒன்றாகச் சேர்ந்திருந்த ஸீதாவும், ராமநாதனும் தனித்தனியே பிரிந்து செல்லும் படியான சந்தர்ப்பம் ஏற்பட்டு விட்டது. பிரிய மனமின்றிப் பிரிந்தனர் இருவரும்.

தன் கணவனுடன் குடித்தனம் செய்ய வந்தாள் ஸீதா. அழகிய பங்களா, சொத்து எல்லாவற்றுக்கும் மேலாகத் தன்மேல் உயிரையே வைத்திருக்கும் தன் கணவன் இவற்றால் இளையதாரமாக வாழ்க்கைப்பட்டு விட்



டோமே என்ற குறையைக்கூட மறந்து மன நிம்மதியுடன் வாழ்க்கையை நடத்தினாள்.

வருஷங்கள் பல விளையாட்டுப் போல் உருண்டோடி விட்டன. ஒரு நாள் ஜெயராமனின் பெண் சரோஜாவுக்கு ஒரு நல்ல இடத்தில் விவாகம் நிச்சயமாகி இருப்பதாக சீதாவிடம் வந்து சொன்னான் ராமநாதன்.

ஜெயராமன் தனக்குச் சரோஜா பிறந்த போதோ அல்லது அதற்குப் பிறகோ ஒரு முறைகூட அவளை எதற்கும் கூப்பிடவில்லை. சீதாவும் அங்கு போனதில்லை. இருந்தாலும் தன் அண்ணாவின் பெண்ணுக்கு விவாகம் நிச்சயமாகியிருக்கிறது என்பதைக் கேட்டு அவள் மனம் மட்டற்ற மகிழ்ச்சி யடைந்தது.

*

இரண்டு மூன்று நாட்களுக்கெல்லாம் மறுபடியும் வந்தான் ராமநாதன். ஜெயராமனால் தன் பெண்ணின் கல்யாணத்துக்குப் பிள்ளை வீட்டார் கேட்டபடி சீர் செய்வதற்கு இன்னும் இரண்டாயிரம் ரூபாய் தேவையாக இருப்பதாகவும், அதைக் கொடுத்தால்தான் அவர்கள் சரோஜாவை விவாகம் செய்து கொள்வோமென்று கண்டிப்பாகச் சொல்லுவதாகவும் சொன்னான் அவன். இந்த வரன் நிச்சயமாகவில்லை என்றால் கடைசியில் யாராவது ஒரு இரண்டாந்தார வரனைத்தான் பார்க்க வேண்டும் என்று கூறித் தன்னிடம் அவன் வருத்தப்பட்டதாகச் சொன்னான் ராமநாதன்.

அவனுடைய அந்தக் கடைசி வார்த்தைகளைக் கேட்ட போதுதான் ஆரம்பத்தில் குறித்தபடி சீதாவின் முகத்தில் வருத்தத்தின் சாயை படர்ந்தது. ஆனால் அதற்குப் பதிலாக ராமநாதன் கூறிய வார்த்தைகளைக் கேட்டவுடன் அவள் உள்ளமும் நடந்தவற்றை எண்ணிப் பார்க்க ஆரம்பித்தது.



கல்யாணத்திற்கு வருவோரும், போவோருமாக ஜெயராமனின் வீடு குதூகலமாக இருந்தது. காரிலிருந்து இறங்கி உள்ளே சென்றாள் சீதா. வீடு தேடி வந்ததற்காக உபசாரத்திற்காகவாவது ஜெயராமன் தன்னை வரவேற்பான் என்று எதிர்பார்த்துக்கொண்டே உள்ளே நுழைந்த அவளுக்குப் பெருத்த ஏமாற்றம்தான் ஏற்பட்டது. ஜெயராமனின் மனைவி கமலாவும் கல்யாணத்திற்கு வந்திருந்த சில ஸ்திரீகளும் ஒரு பக்கமாக நின்று வம்பளந்து கொண்டும் சிரித்துக் கொண்டுமிருந்தனர். ஒருவராவது சீதா வந்ததைக் கவனித்ததாகவே காட்டிக் கொள்ளவில்லை. துக்கம் நெஞ்சை யடைத்துக் கொண்டு வந்தது அவளுக்கு. சின்ன அண்ணா ராமநாதனாவது வந்திருக்கிறானா. அவன் வந்திருந்தாலாவது அவனிடமாவது பேசலாம் என்று நினைத்துச் சுற்று முற்றும் பார்த்துத் தேடினாள். அவனைக் காணவில்லை. அவளையுமறியாமல் அவள் கண்களில் கண்ணீர் முட்டி நின்றது. கல்யாண வீடாயிற்றே என்று அதைச் சிரமத்துடன் அடக்கிக் கொண்டாள்.

வந்ததும் வராததுமாக வீட்டிற்குக் கிளம்பினால் யாராவது ஏதாவது நினைத்துக் கொள்ளப் போகிறார்களே என்று நினைத்து ஒரு மூலையில் ஒருவருடனும் கலந்து கொள்ளாமல் தனியாக நின்று கொண்டிருந்தாள்.

சிறிது நேரத்திற் கெல்லாம் மணமான தம்பதிகளுக்கு ஆசீர்வாதம் செய்யும் சமயம் வந்தது. சீதா தான் வாங்கிக் கொண்டு சென்ற பரிசைத் தன் மருமாளுக்கு ஆசீர்வாதம் செய்துவிட்டுத் தாம்பூலம் பெற்றுக்கொண்டு வீட்டுக்குக் கிளம்பினாள். 'சீ...நாம் ஏன் இன்று இங்கு வந்தோம்! ராமநாதனிடமே நாம் பரிசைக் கொடுத்தனுப்பிவிட்டு வீட்டிலேயே இருந்திராமல் போனோமே' என்று தன்னை நொந்து கொண்டே சீதா காரிலேறிக் கொண்டாள். 'விர்'ரென்று கார் கிளம்பிச் சென்றது.



"ஏதுடி அம்மா! காலம் ரொம்பக் கெட்டுக் கிடக்கிறது! துணை இல்லாமல் புருஷனை வெளியே அனுப்பப் பயமாயிருக்கிறதே!"

அன்று மாலை ராமநாதன் தோவைப் பார்ப்பதற்காக வந்திருந்தான்.

"ஆமாம், தோ!...உனக்கு இந்த விஷயம் ஆச்சரியமாக இல்லையா!..." என்றான் ராமநாதன் படபடவென்று.

"எந்த விஷயம்?..."

"...நம்ம ஜெயராமன் தன் பெண் கல்யாணத்துக்குப் பிள்ளை வீட்டார் கேட்ட ரூபாய் இரண்டாயிரத்தைக் கொடுக்காமலே கல்யாணத்தை எப்படிச் சாமர்த்தியமாக நடத்தி விட்டான் பார்த்தாயா? முதலில் அந்த ரூபாய்க்கு அவ்வளவு கெடுபிடி பண்ணின சம்பந்திப் பேர்கள் எப்படி அது இல்லாமலேயே கல்யாணத்துக்குச் சம்மதித்தார்கள் என்று எனக்கு ஆச்சரியமாயிருக்கிறது!"

"அந்தப் பெண் சரோஜாவுக்கு நல்ல அதிர்ஷ்டம் இருந்திருக்கும்! அது போகட்டும். கல்யாணத்துக்கு உன்னை ஜெயராமன் நேரிலே வந்து கூப்பிட்டானா?"

"நான் ஆபீஸுக்குப் போய்க் கொண்டிருந்தபோது வழியிலே பார்த்து ஏதோ கூப்பிடணுமே என்று கூப்பிட்டான். அவ்வளவுதான். நான்தான் ஏதோ போனால் போகிறது என்று உறவை விட்டுக் கொடுக்காமல் போனேன்."

"உம்; உன்னையாவது வழியிலாவது பார்த்துக் கூப்பிட்டானே! என்னை அது கூட இல்லை. வெறுமனே எல்லாருக்கும் அழைப்பு அனுப்புவது போல எனக்கும் தபாலில் அனுப்பியிருந்தான். நீ வந்திருப்பாய் என்னும் தைரியத்திலேதான் நான் காலையில் அங்கு போனேன். ஒருவராவது என்னை 'வா' வென்றுகூடக் கூப்பிடவில்லை. கண்ணீர் வடித்துக் கலங்கி நின்று கொண்டிருப்பதைத் தவிர வேறு ஒரு வழியும் எனக்குத் தோன்றவில்லை. கடைசியில் உடனே வந்து விட்டால் நன்றாயிராதே என்று கொஞ்ச நேரம் இருந்து விட்டு வந்தேன். காலத்தின் கோளாறினால் அண்ணன் தங்கை என்ற பாசம்கூட விட்டுப் போய்விடுகிறது, பார்த்தாயா?" என்று சொல்லும் போதே தோவின் குரல் கம்மியது. விழிக் கடையில் நீர் முத்துக் கோத்து நின்றன. அதைக் கண்ட ராமநாதனின் மனம் துணுக்குற்றது.

"சே! அசடே! அவன் சுபாவம் இன்னிக்குத்தானா நமக்குத் தெரியும்? இதுக்காக வருத்தப்படலாமா?" என்று அன்புடன் கூறி அவளைத் தேற்றினான்.

கல்யாணம் முடிந்தது. ஜெயராமன் வீட்டில் பந்தல், வாழை மரங்களெல்லாம் பிரிக்கப்பட்டு விட்டன.

ஜெயராமனுடைய பெண் சரோஜாவும் அவள் அம்மாவும் உட்கார்ந்து பேசிக்கொண்டிருந்தனர்.

"அம்மா, ஒரு முக்கியமான சமாசாரம் உன்னிடம் சொல்ல வேண்டும்!" என்றாள் சரோஜா.

"அது என்ன?" என்று கேட்டாள் அம்மா.

"நம் சம்பந்தி வீட்டார் முதலில் கேட்ட இரண்டாயிரம் ரூபாயைப் பிறகு கேட்காமல் இந்தக் கல்யாணத்துக்குச் சம்மதித்ததாகத் தானே நாம் நினைத்துக் கொண்டிருக்கிறோம்? இல்லவே இல்லை, அம்மா! அப்பா ஒரு பியூனிடம் பணத்தை ரகசியமாய்க் கொடுத்து அவர்கள் வீட்டுக்கு அனுப்பி விட்டாராம். பணம் சம்பந்தியிடம் போய்விட்டது. அவர்கள் வீட்டில் இப் பேச்சு என் காதில் விழுந்தது."

"அப்பா இதைப்பற்றி ஒரு வார்த்தை கூட என்னிடம் சொல்லவில்லையே!" என்று சரோஜாவின் தாயார் ஆச்சரியப்பட்டாள்.

அதைக் கேட்டுக் கொண்டே வந்த ஜெயராமன் "என்னது?... இரண்டாயிரமா?... நான் கொடுத்தேனா?..." என்று வியப்புடன் கூறி ஒன்றும் விளங்காமல் விழித்தான்.

அதற்குள் ஜெயராமனைத் தேடிக்கொண்டு அங்கே வந்தார் சரோஜாவின் மாமனார்.

"ஜெயராமன்! நீங்கள் கொடுத்ததாக இரண்டாயிரம் ரூபாயை ஒரு வாரத்திற்கு முந்தி ஒரு வேலைக்காரன் வந்து கொடுத்தான். முதலிலேயே நீங்கள் அதைக் கொடுத்திருந்தால் நடுவிலே ஏற்பட்ட அந்தச் சிறு தகராறுகூட ஏற்பட்டிருக்காது..." என்றார் அவர். ஜெயராமனுக்கு ஏற்கெனவே இருந்த பிரமிப்புக்கு அவருடைய வார்த்தைகள் தூபம் போட்டன.

"என்ன! ஒரு வேலைக்காரன் கொண்டு வந்து கொடுத்தானா?..."

"ஆமாம்!" என்று கூறிய அவர் ஒரு கார் நம்பரைச் சொல்லி அந்தக் காரிலேறிக்

கொண்டுதான் அவன் வந்ததாகவும். அதே கார் கல்யாணத்தன்று காலைகூட வந்திருந்த தென்றும், அதில் ஒரு அம்மாள் வந்ததாக வும், அவள்தான் 'கலியாணப் பெண்ணின் அத்தை' என்று யாரோ தமக்கு அவளைக் காட்டிச் சொன்னதாகவும் சொன்னார் அவர்.

விஷயம் விளங்க வெகு நேரமாகவில்லை ஜெயராமனுக்கு. சீதாதான் அந்தக் காரிலே வந்தவள். அந்தக் கார் அவளுடையதுதான். அவள் தான் அவ்வாறு தானே பணத்தைக் கொடுத்தனுப்பிவிட்டு ஜெயராமன் கொடுத்த தாகச் சொல்லச் சொல்லி யிருக்கிறாள்.

ஜெயராமனின் உடலில் ஒரு துடிப்பேற் பட்டது; மனத்தை ஏதோ ஒரு பாரம் அழுத்தியது. "இதோ வந்து விட்டேன் இருங்கள்!" என்று அவர்களிடம் சொல்லி விட்டு, சீதாவின் வீட்டை நோக்கிப் பரபரப் புடன் ஓடினான் அவன்.

தோட்டத்தில் புஷ்பித்திருந்த பல் வேறு புஷ்பங்களை ஒன்று சேர்த்து மாலை யாகக் கட்டி முடித்த சீதா அதை மலர்ந்த முகத்துடன் எடுத்துச் சென்று ஹாலில் சுவரின் நடுவே மாட்டப்பட்டிருந்த சுவாமி படத்திற்குப் போட்டுவிட்டுக் கைகுவித்து வணங்கினாள். குத்து விளக்கை ஏற்றி வைத்து விட்டு அவள் திரும்புவதற்கும் ராமநாதன் வருவதற்கும் சரியாக இருந்தது. "வா, அண்ணா!" என்று அவனை வரவேற்றாள் சீதா.

ஹாலில் வந்து சோபாவில் உட்கார்ந்து கொண்ட அவன் பார்வை எதிரே தோட்டத்தில் செழிப்பாக வியாபித்திருந்த பசும் செடி கொடிகளின் மீது சென்றது.

"சீதா! அந்தத் தோட்டத்துச் செடிகள் எல்லாம் எவ்வளவு நன்றாகத் துளிர்த்திருக் கிறது பார்த்தாயா? எல்லாம் உன்னுடைய கண்காணிப்பிலே இருக்கிறதினால்தானே! வேலைக்காரர்களைக் கூட விடாமல் நீயே இவ்வளவு அக்கறையாக அந்தச் செடிகளைக் கவனித்துக் கொள்வதைப் பார்த்தால் எனக்கு ஆச்சரியமா யிருக்கிறது!" என்று கூறி முடிப்பதற்குள், "சீதா! சீதா!... உன்னாலே வெறும் செடிகள்மட்டும் துளிர்க்க வில்லை. என் பெண் சரோஜாவின் வாழ்க் கைச் செடி கூடப் புத்துயிர் பெற்றுவிட் டது!" என்று உரத்த குரலில் கூறிக் கொண்டே ஓடி வந்த ஜெயராமனை வியப் புடன் திரும்பிப் பார்த்தனர் சீதாவும், ராமநாதனும்.

சீதா விஷயத்தை ஊகித்துக் கொண்டு விட்டாளாதலால் நிலைமையை ஒருவாறு சமாளித்துக் கொண்டாள்.

"அப்படி என்ன பிரமாதமாக நான் செய்து விட்டேன்!" என்றாள் அவள் சாவதானமாக.

ராமநாதன் அவர்கள் இருவருடைய முகத் தையும் மாறிமாறிப் பார்த்தான். "என்ன சீதா! என்ன இது? நீங்கள் இண்டு பேரும் என்னவோ புதிர் போடுகிற மாதிரி பேசு கிறீர்களே?" என்றான் அவன்.

"ராமநாதா! எல்லாவற்றையும் விவர மாகச் சொல்லிச் சீதாவிடம் மன்னிப்புக்

கேட்கத்தான் நான் வந்திருக்கிறேன்" என்று சொல்லி மாலையில் நடந்த விஷயங்களை ஒன்று விடாமல் கூறி முடித்தான். உணர்ச்சிப் பெருக்கால் அவன் வாயிலிருந்து வார்த்தைகள் ஒருவித தடுமாற்றத்துடன் வெளி வந்தன. "சீதா! ஒரு காலத்திலே உன்னுடைய கல்யாணத்துக்கு உதவாமல் நான் நிர்த்தாட்சண்யமாக இருந்தேன். ஆனால் நீ அதையெல்லாம் மறந்துவிட்டு எனக்கு உதவி, 'கல்யாணம் நின்றுவிட்டது' என்று நாலுபேர் இகழ என்னை அவமானத்துக் குள்ளாக்காமல், எனக்குக்கூடத் தெரியாமல் உதவி என் பெண்ணின் வாழ்வில் விளக் கேற்றி வைத்தாயே! நீ சாதாரணப் பெண்ணல்ல. மனித தெய்வம். விலையில்லா மாணிக்கம். நான் செய்த தவறை 'மன்னித்து விட்டேன்' என்று சொல்லு. அப்போது தான் என் மனசு நிம்மதியடையும்" என்று மூச்சு விடாமல் கூறிச் சீதாவின் முகத்தைப் பரிதாபமாகப் பார்த்தான்.

"அண்ணா! இப்போதாவது உன் மனம் மாறி என்னைப் பற்றி உன் மனத்தில் இருந்த கறை நீங்கி அன்பு பிறந்திருக்கிறதே என்று நான் சந்தோஷப் படுகிறேன். இதில் நான் செய்தது என்ன இருக்கிறது? எல்லாம் அந்த பகவானின் செயல்" என்று கூறிச் சற்று முன் தான் மாலை சாத்திய பகவானின் படத்தைச் சுட்டிக் காட்டினாள் சீதா.

படித்துப் பாருங்கள்!

கன்னியின் கனவு

கதை எழுதுவதில் இரண்டு விதங்கள் உண்டு. வாழ்க்கையில் நிகழும் சம்பவங்களைச் சித்திரித்து அநுபவ பூர்வமான அந்தச் சம்பவங்களுக்குக் கதை உருவம் கொடுத்துச் சுவாரஸ்யமாகச் சொல்லுவது ஒரு விதம். இதிகாச புராணங்களுக்கு, அவற்றின் உண்மையான நோக்கம் கெடாமல் நூதன உருவம் கொடுத்துக் கதையாகச் சித்திரிப்பது இன்னொரு விதம்.

இத்தகைய இரண்டு விதமான கதைகளும் இந் நூலில் இருக்கின்றன.

"லக்ஷ்மணன் பத்தினி", "லங்கா தகனம்," "அநுபவ சித்தாந்தம்" முதலிய கதைகள் இதிகாச நிகழ்ச்சிகளாயினும், பொருத்தமான புது உருவங் கொடுக்கப் பட்டு நல்ல சிறுகதைகளாக வெளிவந்திருக்கின்றன.

"ஏக புத்திரன்," "சந்திரமதி" முதலிய கதைகள் விறுவிறுப்பான நடையில் தங்கு தடையில்லாமல் செல்லுகின்றன.

ஆசிரியர்: ஸ்ரீ க. சந்தானம்; பிரசுரம்: கலைமகள் காரியாலயம், மயிலாப்பூர், சென்னை; விலை ரூ. 2—4—0.

வாடா மலர்

எத்தனையோ மலர்கள் காட்டில் மலர்ந்து, மக்கள் கண்களுக்குப் புலப்படாமலேயே மறைந்து விடுகின்றன. ஆனால், இந்த நவீனத்தில் கதாநாயகியாக வரும் மல்லிகா என்ற பாத்திரம், மக்கள் கண்களுக்குப் பட்டும், வாடா மலராகவே வாழ்ந்து வருகிறாள்; வண்டு சூழ்ந்தும் முகராத மல்லிகையாகவே வாழ்கிறாள். அது எப்படி என்று கேட்டு விடாதீர்கள். அதைத்தான் 'மாயாவி' வெகு ரஸமான நவீனமாகத் தீட்டியிருக்கிறார்.

பிரசுரம்: அமுத நிலையம் லிமிடெட், தேனாம்பேட்டை, சென்னை—18; விலை: ரூ. 3—8—0

பஜனாவளி

"ஒரு நாமம் ஓர் உருவம் ஒன்றுமிலாற்கு ஆயிரம் திருநாமம் பாடி நாம் தெள்ளேணம் கொட்டாமோ" என்று பாடினார் மாணிக்கவாசகர். இதுதான் பக்தர்களின் இயல்பு. ஆதி சங்கரர் ஆண்டவனை வடமொழியில் துதித்தார். புரந்தர தாஸர் கன்னடத்தில் துதித்தார். தியாகராஜர் தெலுங்கில் பரவிப் பாடினார். அருணகிரிநாதர், தாயுமானவர், ராமலிங்க சுவாமிகள் முதலியோர் தேனினும் இனிய தீந்தமிழில் பரந்தாமனுக்குப் பாமாலை சூட்டி மகிழ்ந்தார்கள். அத்தகைய பக்தர்களின் பாடல்களைத் தொகுத்து, ஆஸ்திகர்களுக்கு உதவும் வண்ணம் ஸ்ரீ ராமகிருஷ்ண மடாலயத்தார் வெளியிட்டிருக்கிறார்கள். வடமொழி, கன்னடம், மராட்டி, ஹிந்தி, தெலுங்கு முதலிய பாஷைப் பாடல்களையெல்லாம் இடது பக்கத்தில் நாகர எழுத்திலும், அதற்கு எதிர் பக்கமாகிய வலது பக்கத்தில் தமிழ் எழுத்திலும் வெளியிட் டிருக்கிறார்கள்.

கிடைக்குமிடம்: ஸ்ரீ ராமகிருஷ்ண மடம், மயிலாப்பூர், சென்னை—4. விலை: ரூ. 3—0—0

கயால் தாஸ் (நாடகம்)

ரங்கராஜுவின் வாழ்க்கை ஆனந்த சுவாமியின் கூட்டுறவினால் மாறுதலடைந்தது. புலாலையும் நவநாகரிகக் கேளிக்கைகளையும் ஒழித்துப் புனித வாழ்க்கையை மேற் கொண்டான் ரங்கராஜு. ஆனால் அவன் மனைவி சுபத்ரையினால் மாற முடியவில்லை. அதனால் அவள் வாழ்வுப் பாதையில் வழுக்கி விழுகிறாள். பிறகு இதற்குப் பச்சாதாபப் பட்டு மன்னிப்புக் கோர முன் வருகிறாள். கணவன் மன்னிப்பு அளித்து உயிர்ப்பிச்சை யளிக்கிறானே தவிர்த்து மனைவி யென்னும் உரிமையை நல்க மறுக்கிறான். இந்த உரிமையை அளித்தாலன்றி மன்னிப்புக் கோர மறுக்கிறாள். கணவன் ஆத்திரமடைகிறான். தன் மனத்தில் தோன்றும் எண்ணங்களுக்கு (கயால்) அடிமை (தாஸ்) ஆகிவிடுகிறான். இப்படி அடிமையானவன் எப்படி மீள்கிறான் என்பதை உணர்ச்சியுடன் கனம் ரீஜபதி ஏ. எஸ். பி. ஐயர் தீட்டி யிருக்கிறார்.

பிரசுரம்: அல்லயன்ஸ் கம்பெனி, மயிலாப்பூர், சென்னை; விலை ரூ. 1—4—0.

நந்தன வருஷத்துத் திருமூர்த்தி பஞ்சாங்கம்

புது வருஷப் பலனில் ஆரம்பித்து, இப் பஞ்சாங்கம், சோதிடப் பொது விஷயங்கள், தாராபலப் பொருத்தங்கள், விவாகப் பொருத்தங்கள், சுப முகூர்த்த கால நிர்ணயங்கள் முதலிய விஷயங்களைப் பற்றிச் சாங்கோபாங்கமாகக் கூறுகிறது.

பிரசுர கர்த்தர்: கா. க. ஸ்ரீநிவாஸன், குருஜு பப்ளிஷிங் ஹவுஸ், 60, ஈசுவரன் கோயில் தெரு, மாம்பலம், சென்னை-17; விலை: அணா 7.

நோய்க்குப் பிறகு துரிதமாக

தேர்வு பெற!



ஜுரத்தால் பலவீனமும், சோர்வும் அடைந்திருந்தால், உடல் தேறுவதற்கு ஒவல்டினைவிடச் சிறந்த டானிக் கிடையாது. இந்த ருசியான உணவுப் பானம் சுலபமாக ஜீரணமாவதுடன், உடல் தேர்வுக்கு வேண்டிய பிரத்யேக சக்தி தரும் சமச்சீர் உணவுமாகும். அதில் அத்யாவசியமான வஸ்துக்களான பசுவின் கட்டுப்பால், பழுத்த பார்லி மால்ட், கோக்கோ, இயற்கையான பாஸ்பேட்டுகள், பி & டி விடமின்களும் சேர்க்கப்பட்டு சாஸ்திரீயமாக தயாரிக்கப்பட்டதாகும். ஒவல்டினில் இருக்கும் போஷணை மற்றும் விடமின் சத்துக்களும் இன்றியமையாதவை. ஒவல்டினைப் போலச் சிறந்தது வேறு கிடையாது.

டாக்டர்கள் நோய்க்குப் பிறகு உடல் தேற ஒவல்டினை சிபார்சு செய்கிறார்கள். இன்றியமையாத டானிக் உணவு—பானம்—போலிகளைத் தள்ளிவிடுங்கள்.

விநியோகஸ்தர்கள்: கிரஹாம்ஸ் டிரேடிங் கம்பெனி (இந்தியா) லிட்.



ஓவல்டின்

சுகவீனத்திலிருந்து ஆரோக்கியத்திற்கு!

OV. 324



வீர வானரம்

விஜயம்



காட்டிலிருந்த குரங்குக் குட்டிகள் எல்லாம் கூட்டமாகச் சேர்ந்து அந்தப் பெரிய பாறைக்கு அருகே வந்து அதைச் சூழ்ந்து கொண்டு உட்கார்ந்தன. ஆகாயத்தில் பூரண சந்திரன் மிதந்து கொண்டிருந்தான். காடு முழுவதும் அந்த நில வொளியில் கனவு உலகமாகக் காட்சியளித்தது.

குரங்குக் குட்டிகளுக்கு உற்சாகம் தாங்கவில்லை. 'கிரீச் கிரீச்' என்று சத்தம் போட்டுக் கொண்டும் ஒன்றை யொன்று தாவிக் குட்டிக்கரணம் போட்டு விளையாடிக் கொண்டும் இருந்தன.

சமீபத்தில் இருந்த மரத்தில் சில குரங்குகள் தாவி ஏறிக் கிளைகளைப் பிடித்துக் கொண்டு தொங்கலாட ஆரம்பித்தன.

பெரிய குரங்காரை எதிர் பார்த்துத்தான் அந்தக் குட்டிக் குரங்குகள் அந்தப் பாறைக்கு வந்து சேர்ந்தன.

பெரிய குரங்கார் கதை சொல்லுவதில் நிபுணர். எத்தனை கதைகள் வேண்டுமானாலும் கொஞ்சங்கூட அலுக்காமல் சொல்லுவார்.

கடைசியில் பெரிய குரங்கார் வந்து சேர்ந்தார். அவர் வந்ததும் குரங்குக் குட்டிகள் ஓரேயடியாகக் கூச்சலிட்டுத் தங்கள் உற்சாகத்தைத் தெரிவித்துக் கொண்டன. ஒன்றன் மேல் ஒன்று விழுந்து கட்டிப் புரண்டன. 'நீ முந்தி, நான் முந்தி' என்று முண்டியடித்துத் தள்ளின.

பெரிய குரங்கார் அந்தப் பாறையின் மேல் ஏறி நின்று "குழந்தைகளே, நீங்கள் கூச்சல் போட்டுக் கலாட்டா செய்தால் நான் கதை சொல்ல மாட்டேன்!" என்று கண்டிப்பாகச் சொன்னார்.

உடனே குரங்குக் குட்டிகளெல்லாம் சேர்ந்து, "கதை சொல்லுங்கள். இனிமேல் நாங்கள் சத்தம் போடாமல் இருக்கிறோம்!" என்று கெஞ்சிக் கூத்தாடின.

பெரிய குரங்கார் ஒரு முறை தொண்டையைக் கனைத்துக் கொண்டு, "நான் உங்களுக்கெல்லாம் இன்றைக்கு என் வாழ்க்கையில் நிகழ்ந்த உண்மை நிகழ்ச்சிகளைப் பற்றிச் சொல்லப் போகிறேன். அந்த நிகழ்ச்சிகள் எல்லாம் வீர தீரமாக இருக்கும். நான் சில வருஷங்களுக்கு முன்பு மிக பலசாலியாக இருந்தேன். அந்தக் காலத்தில் சமுத்திரத்தைத் தாண்டிய மாருதியின் வம்சத்தில் வந்தவர்கள் என்ற நமது பெயருக்குப் பங்கம் வராமல் அற்புதச் சாகசங்களைப் பிரமாதமாகச் செய்திருக்கிறேன்!" என்று கூறினார்.

பிறகு பெரிய குரங்கார் கதை சொல்ல ஆரம்பித்தார்:

ஒரு நாள் நான் வழக்கம் போல் பழம், கிழங்கு இவைகளைத் தேடிக் கொண்டு காட்டுப் பக்கமாகப் போனேன். அப்பொழுது 'ஓ' வென்ற பேரிரைச்சல் கேட்டது. மரங்களெல்லாம் 'சடார், சடார்!' என்று முறிந்து விழும் சத்தம் கேட்டது. சற்று நேரத்துக்கெல்லாம் ஒரு பெரிய யானை ஓடி வந்தது. ஓரேயடியாக எங்கும் புழுதி பறந்தது. என்னைப் பார்த்ததும் யானைக்குக் கோபம் பிரமாதமாக வந்துவிட்டது. என்னைப் பிடித்துத் தூக்கி எறிய நினைத்து என்னை நெருங்கியது.

அவ்வளவுதான். நான் அந்த யானையின் முகத்தில் ஒரு குத்துவிட்டு, காதைப் பிடித்துத் திருகி ஒரு தள்ளுத் தள்ளினேன். யானை அலறிக் கொண்டு கீழே விழுந்து விட்டது. அப்புறம் அதை வீட்டுக்குக் கொண்டு போய்ச் சேர்த்தேன்; என்னுடைய காட்சிச்சாலையில் இன்னும் அந்த யானை இருக்கிறது.

அப்புறம் இன்னொரு அதிசயச் சம்பவம் நிகழ்ந்தது. ஒரு நாள் விடியற்காலையில் இருள் பிரிவதற்கு முன் எழுந்து வெளியே புறப்பட்டேன். ஒரு மரத்தின் பக்கமாகப் போனபோது திடீரென்று ஒரு உருவம் மரத்தின் பின்புறத்திலிருந்து வந்து என் கையைக் கெட்டியாகப் பிடித்துக் கொண்டு விட்டது. அடுத்த நிமிஷம் அந்த உருவம் மரத்துக்குப் பின்னாலிருந்து வெளியே வந்தது. எனக்கு அதைப் பார்த்ததும் ஒரே ஆச்சரியமாய்ப் போய் விட்டது. அது என்ன வென்று நினைக்கிறீர்கள்? ஒரு பெரிய கரடி. மனிதர்களைப் போல் இரண்டு கால்களால் நின்று கொண்டு என்னைப் பார்த்து 'உர் உர்' என்று உறுமியது. உடனே அதனுடைய இன்னொரு கையைக் கெட்டியாகப் பிடித்துக் கொண்டு



என் இடது கையை ஒரு உதறு உதறி விடுவித்துக் கொண்டேன். அதுவும் தன் கையை உதறி என் கைப்பிடியைத் தளர்த்தப் பார்த்தது. ஆனால் அது முடியவில்லை. 'குரங்குப் பிடி' என்றால் சாதாரணமா?

பிறகு அந்தக் கரடியை அப்படியே செங்குத்தாகத் தூக்கிக் கர கர வென்று சுற்றிக் கீழே இறக்கினேன். கரடி மயக்கம் போட்டு ஒன்றும் புரியாமல் கீழே விழுந்து கிடந்தது. அப்புறம் அதையும் கொண்டு போய் வீட்டில் சேர்த்தேன்.

இதெல்லாம் இருக்கட்டும். மிருகேந்திரனை சிங்கத்தையே நான் அடக்கியிருக்கிறேன் என்று சொன்னால் நீங்களெல்லோரும் ஆச்சரியப்பட்டுப் போவீர்கள்.

வெகு நாட்களுக்கு முன்பு இந்தக் காட்டில் ஒரு பெரிய சிங்கம் இருந்தது. அந்தச் சிங்கத்துக்கு இருந்த திமிர் கொஞ்ச நஞ்சமல்ல. எதிர்ப்பட்ட மிருகங்களை யெல்லாம் கொன்று தின்று வந்தது. அதனுடைய கர்ஜனையைக் கேட்டாலே இந்தக் காட்டிலுள்ள மற்ற மிருகங்களெல்லாம் நடுங்கி ஒடுங்கிக் கிடக்கும்.

அந்தச் சிங்கம் ஒரு நாள் ஆகாரம் ஒன்றும் கிடைக்காமல் கோபத்துடனும் பசியுடனும் இருந்தது. அந்த வழியாகக் கொஞ்சம்கூடப் பயமில்லாமல் போன என்னைப் பார்த்ததும் சிங்கத்தின் கோபம் எல்லை மீறிவிட்டது.

"ஏ, குரங்கே, என்ன தைரியம் உனக்கு? மிருக ராஜனாகிய நான் இங்கே இருக்கும் போது நீ கொஞ்சங்கூடப் பயம் இல்லாமல் இந்த வழியாகப் போகிறாயா? என்ன செய்கிறேன் பார், உன்னை!" என்று கேட்டு என் மேல் பாய்ந்தது.

"சீ மூடு வாயை! முட்டாளே!" என்று சொல்லி விட்டு நான் அலட்சியமாக அதனுடைய வாலைப்பிடித்துத் தூக்கிக் கர கர வென்று சுழற்றி, எலியைத் தூக்கி எறிகிற மாதிரி தூரத்தில் வீசி எறிந்தேன். மிருக ராஜன் அடங்கி ஒடுங்கிக் கிடந்தார். அவரையும் என் வெற்றியின் அடையாளமாக என் காட்சிச் சாலையில் அடைத்து விட்டேன். இப்பொழுது அது நாய் மாதிரி அடங்கிக் கிடக்கிறது.

ஒரு சமயம் ஒரு புலி என் வீரத்தைப் பற்றிக் கேள்வியுற்று, என்னோடு சண்டை போட வந்தது. 'ஆ' வென்று வாயைத் திறந்தபடி உறுமிக்கொண்டு என்மேல் பாய்ந்தது. இதைக் கண்டு நான் பயந்துவிடுவேனா? பளீர் என்று அதன் கன்னத்தில் ஒரு அறை கொடுத்தேன். புலியின் ஆர்ப்பாட்ட மெல்லாம் ஒடுங்கிவிட்டது. பிறகு அதையும் வீட்டுக்குக் கொண்டு போய்ச் சேர்த்தேன். இதை யெல்லாம் விட ஒரு முக்கியமான சமாசாரத்தைச் சொல்ல மறந்துவிட்டேனே! ஒரு சமயம் இந்தக் காட்டுக்குப் பத்து சிப்பாய்கள் வந்தார்கள். கூடாரம் அடித்துக் கொண்டு முகாம் போட்டார்கள். நம்மவர்களில் ரொம்பப் பேரைப் பிடித்து விட்டார்கள். துப்பாக்கியுடன் வந்திருந்த அவர்கள் எத்தனையோ மிருகங்களைச் சுட்டு விட்டார்கள்.

அவர்களுடைய துப்பாக்கிக்குச் சற்றும் பயப்படாமல் அலட்சியமாக அத்தனை சிப்பாய்களையும் பிடித்துக் கட்டி என் வீட்டுக்குக் கொண்டு போய்ச் சேர்த்தேன். இந்த அற்புதக் காட்சிகளை யெல்லாம் என் வீட்டுக்கு வந்தால் நேரில் பார்க்கலாம். நீங்களெல்லோரும் ஆச்சரியப்பட்டுப் போவீர்கள்.

பெரிய குரங்கார் இப்படிச் சொல்லி முடித்ததும் குரங்குகளுக் கெல்லாம் ஆச்சரியம் தாங்கவில்லை.

"நாங்களெல்லோரும் உங்கள் வீட்டுக்கு வந்தால் அந்த மிருகங்களையும் சிப்பாய்களையும் பார்க்க முடியுமா?" என்று கேட்டது ஒரு குட்டிக் குரங்கு.

"ஆகா! பேஷாய்ப் பார்க்கலாம்! நான் அந்த மிருகங்களையும் சிப்பாய்களையும் மிகவும் ஜாக்கிரதையாகப் பாதுகாத்து வருகிறேன். வாருங்கள், என் வீட்டுக்கு!" என்று அழைத்துக்கொண்டே பெரிய குரங்கார் எழுந்து வீட்டுக்குப் புறப்பட்டார். எல்லாக் குரங்குக் குட்டிகளும் அவர் வீட்டுக்குப் புறப்பட்டன.

பெரிய குரங்கார் வீடு ஒரு பெரிய மரத்தின்மேல் இருந்தது. மரப் பலகைகளை யெல்லாம் வைத்துக் குரங்கார் வீட்டை நன்றாகக் கட்டி யிருந்தார்.

எல்லாக் குரங்குகளும் மேலே ஏறி அவர் வீட்டுக்குள்ளே போய்ப் பார்த்தன. அவைகளுக்கு அங்கே ஒரு அதிசயம் காத்திருந்தது. புலி, சிங்கம், யானை, கரடி எல்லாம் அந்த அறையில் இருந்தன. சிப்பாய்களும் ஒரு ஓரமாக நின்று கொண்டிருந்தார்கள். அடங்கி ஒடுங்கி மூச்சுக்கூட விடாமல் இருந்தார்கள்!

ஆமாம். அவர்கள் எப்படி மூச்சு விடுவார்கள்? மூச்சு விடுவதற்கு அவர்களுக்கு உயிர் இருந்தால்தானே? மண் பொம்மைகளுக்கு உயிர் ஏது?

குரங்குகளெல்லாம் கை கொட்டிச் சிரித்தன. பெரிய குரங்காரும் அவர்களுடைய சிரிப்பில் கலந்து கொண்டார்.

வட்ட மேஜை

அவசியம் தேவை!

தமிழ்நாடு மறுபடியும் தலைதூக்கி நிற்க வேண்டுமானால், அதற்கு ராஜாஜியின் சேவை மிகவும் தேவை. ராஜாஜியின் தலைமையில் சென்னைக்கு மத்திய அரசாங்கத்தின் உதவியும் ஆதரவும் அதிகம் கிடைக்கும்.

மாகாணத்தின் பெயரை மறுபடியும் நிலைநாட்டுவதுடன் தமிழ் நாட்டில் காங்கிரஸ் இழந்துவிட்ட பெயரையும் ராஜாஜியால்தான் நிலைநாட்ட முடியும். தன்னலம் பாராட்டாத ராஜாஜி மறுபடியும் தலைமை தாங்க முன் வந்ததற்கு மிக மகிழ்ச்சியடைகிறேன். வாழ்க ராஜாஜி! வாழ்க தமிழ்நாடு!

பம்பாய்
1—4—52

வி. எஸ். சுந்தரராஜன்

★

தராசு முனை

செங்கதிர் உரைந்துசெல்லும்
செழிப்புடைத் தமிழ்நாட்டின்
அரசியல் அரங்கத்தில்
அடிவைத்தார் அண்ணலவர்

தாழாது நடுநிற்கும்
தராசு முனைபோலே
உண்மைக்கும் உறுதிக்கும்
உழைக்கும் உத்தமராம்

இணையற்ற இந்தியாவில்
இன்பமுறு இந்தியரில்
இன்றளவும் இல்லாத
இடம்பெற்றார் ராஜாஜி.

பம்பாய்
1—4—52

பரமன்

★

வழிகாட்டி!

"தருமத்தின் வாழ்வதனைச் சூது கவ்வும்
தருமம் மறுபடி வெல்லும் எனுமியற்கை
மருமத்தை நம்மாலே யுலகங் கற்கும்
வழி தேடி 'விதி' இந்தச் 'சதி' செய்தான்"

பாரதியார்

கடந்த ஆறு ஆண்டுகளுக்கு முன்பாக நம் மாகாணத்தில் தருமம் சூதால் மக்களிடமிருந்து மறைக்கப் பட்டதை நாம் கண்டோம்; சிலரது ஆத்திரத்தையும் கொண்டோம். ஆயினும், "கட்டுண்டோம், பொறுத்திருப்போம், காலம் மாறும்" என்ற பொன் மொழிகளில் இன்று உண்மையாயின. இன்று, ராஜயோகி ராஜாஜியை மீண்டும் ஆட்சி புரிய எல்லோரும் ஒன்று பட்டு அழையுங்கள் என்று நம் மாகாணம் கதறியது கண்டு காங்கிரஸ் தலைவர்களும் இரு கைகளை ஏந்தி அவரை அழைத்தார்கள். "என் கடன் பணி செய்துகிடப்பதே" என்பதற் கிணங்க தலைவர் ராஜாஜி அவர்களும் ஏற்றுக் கொண்டார்கள். இனி நம் மாகாணம் நாட்டிற்கு வழி காட்டியாக நிற்குமென்பது நிச்சயம்.

குளித்தலை
1—4—52

கோ. ராமதாஸ் பாரதி

கற்றுக்கொள்ள வேண்டும்!

ராஜாஜி அவர்கள் சென்னைக் காங்கிரஸ் கட்சியின் தலைமையை எடுத்துக் கொண்டது அவருடைய பெருந்தன்மையையும் தியாகபுத்தியையும் தான் காட்டுகின்றது.

குழந்தைகளுக்குச் சங்கடம் வரும்பொழுது ஓடி வந்து உதவி புரியும், தாய் தந்தைக்குச் சமானம் அவர். ஓய்வையும், நிம்மதியையும் தேடி இருக்கும் பெற்றோருக்குக் கஷ்டத்தைக் கொடுக்கும் நிலையில் நாம் இருந்து வருகின்றோம்.

இனியாவது அவர் செய்வதும் சொல்வதும் வேதம் என்று நாம் கருதி நடக்கக் கற்றுக் கொண்டால் அதுவே நாம் அவருக்குச் செய்யும் பெரும் கைம்மாறாக இருக்கும்.

சென்னை
1—4—52

எஸ். கே. ராமநாதன்

★

ஈடு இணையில்லை!

பஜகோவிந்தம் கட்டுரை தென்னாட்டுக்கு மட்டுமின்றி, அகில உலகத்திற்கும் ஒரு பெரிய சிகரமாக விளங்கியிருக்கும் என்பது கல்வி யறிவு படைத்த ஒவ்வொரு மானிடப் பிறவியும் தட்ட முடியாத உண்மை. அவைகள் அனைத்தும் திரும்பப் படிக்கப் படிக்க, சர்க்கரைப் பந்தலில் தேன்மழை பெய்து கொண்டு இருப்பதாக என் அகக் கண்ணால் பார்த்து மகிழ்கிறேன்.

ஸ்ரீ ராஜாஜி அவர்களுடைய இந்த உயரிய கருத்துடன் கூடிய சேவைக்கு அகில உலகத்தையே ஈடாகக் கொடுத்தாலும் மிகையாகாது.

மணப்பாறை
31—3—52

வ. ஷண்முகம்

★

இந்தியாவின் பாக்கியம்!

ராஜாஜி அவர்கள் சென்ற கால நிகழ்ச்சிகளை மறந்து தற்சமயம் ஏற்பட்டிருக்கும் சூழ்நிலையைப் போக்க முன் வந்து தலைமை தாங்கிக் காங்கிரஸைச் சீர் படுத்தி நாட்டு மக்களுக்கு நல் வாழ்வுக்கான வழியை வகுக்க முன் வந்தது கண்டு பெருமையடைகிறேன்.

ஐம்பது ஆண்டுகள் நாட்டுக்கும் மக்களுக்கும் பணிபுரிந்த ஒப்புயர்வற்ற தலைவர் ராஜாஜி அவர்கள் இந்த நெருக்கடியில் தலைமை தாங்க முன் வந்தது சென்னை மாகாணத்தின், ஏன் இந்தியாவின் பாக்கியமே யாகும்.

சென்னை
1—4—52

என். எம். ஜெயராமன்

★

மேல்நாட்டு மோகமா?

இந்தியத் திரைப் படங்களில் மட்டுந்தானா மேல்நாட்டு முறைகள் கையாளப்படுகின்றன! நமது அன்றாட வாழ்க்கையே மேனாட்டு முறையில் தான் நடக்கின்றது என்றே கூறலாம். பவுடர், ஸ்னோ, லிப்ஸ்டிக் போன்றவை நமது வாழ்வில் அவசியந்தானா! அநேகமாக எங்கு திரும்பினாலும் 'பாப்' செய்த தலைகள் தான் காணப்படுகின்றன.

விருந்தினர் வந்தால் அழகாக 'நமஸ்காரம்!' என்று கூறி வரவேற்றது போய் 'குட் மார்னிங்'

என்று கூறி கைக் குலுக்குவது 'பாஷன்' ஆகிவிட்டது. கல்யாண காலங்களில் கூடப் பெரியோர்கள் கீழே அமர்ந்திருக்க, மாப்பிள்ளை மேலே உட்கார முடியாதவகையில் 'சூட்' அணிந்துகொண்டு அவஸ்தைப்படும் காட்சியைக் காண்கிறோம். இவைகளெல்லாம் நமது நாட்டு வழக்கங்கள்தானா!

ஒவ்வொரு இந்தியப் பெண்ணும் ஆணும் முடிந்த வரையில் இந்தியப் பண்பாட்டிலேயே நடக்க உறுதி கொண்டால், மேற்கத்திய முறை தன் மட்டுமல்ல நம்மைக் கீழாக்க முயலும் எந்த அநாகரிகமும் கூட நம் பழக்க வழக்கங்களை மாற்ற முடியாது.

இலங்கை
30—3—52

"ஒரு சகோதரி"

★

குறளுக்கு உவமை!

"வேண்டாமை அன்ன விழுச்செல்வம் ஈண்டில்லை
யாண்டும் அஃதொப்ப தில்"

என்ற திருக்குறள் கருத்தின் உண்மை நம் தமிழ் நாட்டில் நடந்துள்ளது இவ்வாரம்.

மனமார எதை வேண்டாம் என்று துறவு கொள்கிறோமோ அது நம்மை நாடி வருகிறது; இந்த உண்மை நிகழ்ச்சியைக் கண்கூடாகக் கண்டோம்.

பெருமை தங்கிய ராஜாஜி அவர்களின் அருமைத் தலைமையைத் தேடிப் பிடித்துவர அவர் மாளிகையை நோக்கி நடந்தவர்களின் வெற்றி தமிழ் நாட்டின் வெற்றி. குறளுக்கு உவமை. வேண்டாம் என்ற பதவி, 'உங்களை நான் விடேன், விடேன்' என்று தமிழ் நாட்டுத் தந்தையைத் துரத்துகிறது.

வெள்ளகோவில்
31—3—52

வி. டி. இராமசாமி.

★

உ பார்ட்டிகள் ஒழிக!

நினைத்ததெற்கெல்லாம் உ. பார்ட்டிகள் மலிந்து கிடக்கும் இக்காலில் "ஒவ்வொரு கிராமத்துக்கும் போய்த் தாங்கள் சட்ட சபையில் இதுவரையில் செய்த வேலைகளையும் இனி செய்யப் போகும் வேலைகளையும் சொல்ல வேண்டும். இத்தனைக் கிராமத்துக்குப் போனேனும், இத்தனைக் கூட்டங்களில் பேசினேனும் என்பதை மாகாண ஜில்லா காங்கிரஸ் கமிட்டிகளுக்கும், பத்திரிகைகளுக்கும் அறிவிக்க வேண்டும்" என்று அருப்புக்கோட்டை ஸ்ரீ நாராயணன் எழுதியிருக்கிறார்.

அனுவசிய உ. பார்ட்டிகளை மறந்து, கிராமம் கிராமமாகச் சென்று காங்கிரஸைப்பற்றி ஜனங்கள் மனத்தில் நல்ல அபிப்பிராயம் கொள்ளும்படி செய்திருந்தால் காங்கிரஸ் மதராஸ், திருவாங்கூர், கொச்சி முதலிய இடங்களில் ஸ்தானங்களை இழந்திருக்குமா!

முதல் மந்திரி உள்படப் பல மந்திரிகள் தோல்வி பெறுவார்களா! மொத்தத்தில் எல்லாம் உ. பார்ட்டியால் வந்த விபரீதம்தான்.

ஒழிக, உ. பார்ட்டிகள்! எம். எல். ஏ. க்களின் காங்கிரஸ் பிரசாரம் வளர்க! காங்கிரஸைப் பற்றிப் பொது ஜனங்களிடையே நல்ல அபிப்பிராயம் ஓங்கட்டும்!

கல்கத்தா
24—3—52

வ. கி. ஜ. நாதன்

★

உள்ளம் கொதிக்கிறது!

"அலட்சணப் போட்டி" என்ற தலைப்பில் கண்டுள்ள ஒவ்வொரு வார்த்தையையும் பரிபூரணமாக வரவேற்கிறேன். பாரத நாட்டின் பண்பாட்டைப் பாழ்படுத்தியவர்களின் அருவருக்கத்தக்க செயலை எண்ணி என்னுடைய தமிழ் ரத்தம் கொதித்தது. தமிழ் நரம்பு துடித்தது. உண்மையான நாகரிகத்தையும் சீரிய ஒழுக்கத்தையும் சிறந்த பண்பாட்டையும் உலகத்தின் எல்லா நாடுகளுக்கும் போதனை செய்து வரும் நம் புண்ணிய நாட்டிலா இத்தகைய அருவருக்கத் தக்க அநாகரிகமான நிகழ்ச்சி நடைபெற வேண்டும்!

காரைக்குடி
14—3—52

ஏ. ஆர். அண்ணாமலை

★

தவறை உணர்ந்தனர்!

திறுதியும், அரசியல் தீர்க்க தரிசனமும், நேர்மையும் கொண்ட நமது மதிப்புக்குரியவர் ராஜாஜியை வேண்டாம் என்று ஒதுக்கித் தள்ளிய நமது மாகாணத்தவர் தம் தவறை உணர்ந்து அவரையே தலைவராய் ஏகமனதாய்த் தேர்ந்தெடுத்ததற்கு வணக்கம் செலுத்துகிறோம்.

மேற்கு வங்கத்துக்கும் மத்திய சர்க்காருக்கும் கிடைத்த நமது தலைவரின் பற்றற்ற சேவை நமக்கும் கிடைக்க இருக்கிறது கண்டு மிக்க சந்தோஷம் அடைகிறோம்.

எட்டையபுரம்
2—4—52

எஸ். தியாகராஜன்

மனப் போராட்டம்

பீஷ்மன்

அகிற் புகையின் நறுமணம் அறை முழுதும் பரவி யிருந்தது. அடுத்த அறையிலே யாரோ வேத பாராயணம் செய்து கொண்டிருப்பது அங்கு பரவியிருந்த மௌனத்தினூடே கேட்டது.

காலடியிலே 'கலகல' என்ற சப்தத்துடன் விழுந்த நாணயங்களைப் பார்த்து விட்டு மலர்ந்த முகத்துடன் நிமிர்ந்தார் சுவாமி வித்தியானந்தர். எதிரே சற்றுத் தூரத்திலே, பயபக்தியுடன் கையைக் கட்டிக் கொண்டு 'ஸேட்ஜி' ஒருவர் நின்று கொண்டிருந்தார். அவருக் கருகிலே அந்த மனிதரின் மகன் தன் கள்ளங் கபடற்ற முகத்திலே ஆச்சரிய பாவம் தோன்ற நின்றான். அவன் கண்கள் வினயத்தோடு சுவாமி வித்யானந்தரின் தோற்றத்தை ஆராய்ந்து கொண்டிருந்தன. சுவாமி அவர்களை ஆசீர்வதிக்கும் முறையிலே கையை உயர்த்தினார். இருவரும் தங்கள் சிரங்களைத் தாழ்த்தி மரியாதை செய்தனர்.

வித்யானந்தர் 'ஸேட்ஜியின் மகனையே உற்றுக் கவனித்துக் கொண்டிருந்தார். முறைக்கு ஸேட்ஜியை ஏதோ விசாரித்துக் கொண்டிருந்தாரே தவிர, அவரது கவனமெல்லாம் அந்தப் பத்து வயதுப் பையனிடம்தான் பதிந்திருந்தது. பையன், ஸ்வாமி தன்னைக் கவனிக்கிறாரே என்ற பெருமிதத்தில் சற்று விறைப்பாக நின்று கொண்டான்.

கீழே யிருந்த தீர்த்த பாத்திரத்திலிருந்து ஒரு உத்திரணி மூலம் தீர்த்தம் எடுத்து அவர்களுக்கு விநியோகித்தார் ஸ்வாமி. பையன் தீர்த்தத்தைப் பெற்றுக் கொள்ளும் பொழுதும் அவர் கண்கள் அவனைச் சுற்றியே வட்டமிட்டன.

வந்தவர்கள் போய் விட்டார்கள். கோவில் அர்த்தஜாம பூஜை மணி யோசை "டாண் டாண்" என்று ஓங்கார நாதமிசைத்தது. வித்தியானந்தர் இருக்கையை விட்டு எழுந்திருந்தார்.

சிஷ்யன் ஒருவன் உள்ளே விரைந்து வந்து கீழே யிருந்த காணிக்கைத் தட்டையும், தீர்த்த பாத்திரங்களையும் எடுத்துக் கொண்டு சென்றான்.

எதிரேயிருந்த பூஜ்யர் அகிலானந்தரின் படத்தை வணங்கி விட்டு உள்ளே சென்றார் சுவாமி. தம் மனத்திலே பளுமிக்க பாறாங்கல் ஒன்றைத் தூக்கி வைத்திருப்பதைப் போல உணர்ந்தார் அவர். ஸேட்ஜியின் மகனைப் பார்த்ததிலிருந்து அவர் உள்ளத்தை இனம் தெரியாத வேதனை யொன்று அரித்துக் கொண்டிருந்தது.

மடத்தினுள்ளே அமைக்கப் பட்டிருந்த பொய்கைக்குப் போய் மாத்யாஹ்நிகம் பண்ணி விட்டு வந்தார். அவர் வாய் மட்டும் யந்திரத்தைப் போல ஏதோ மந்திர உச்சாடனம் செய்து கொண்டிருந்தது. மனம் என்னவோ ஆடிக் காற்றிலே பறக்க விடப்பட்ட பட்டத்தைப் போலவே அங்கும் இங்கும் அலைந்து கொண்டிருந்தது.

மத்தியானம் ஒரு வேளைதான் அவர் சாப்பிடுவது வழக்கம். மற்ற இரண்டு வேளைகளிலும் வெறும் பால் அருந்துவார். அன்று என்னவோ அந்த ஒரு வேளைச் சாப்பாடுகூட அவருக்கு ரஸிக்கவில்லை. தம் அன்றாட அலுவல்களில் ஒன்றைச் செய்து முடிப்பதைப் போன்ற மன நிலையுடன் சாப்பிட்டு எழுந்தார் அவர்.

நடு அறையிலே போடப் பட்டிருந்த ஊஞ்சலிலே வந்தமர்ந்த அவருக்கு வழக்கமாக ஏற்படும் உண்ட மயக்கம் கூட அன்று உண்டாகவில்லை. திண்டிலே சாய்ந்தவாறே உருத்தெரியாத எண்ணச் சுழலிலே சிக்கித் திணறினார் அவர்.

உதறித் தள்ளினாலும் ஓடி வந்து அவர் மனத்தைப் பிணித்த அந்தப் பாழும் எண்ணங்களுக்குத்தான் என்ன வலிமை!

அறையின் வெளியே கசமுசவென்று கேட்டுக் கொண்டிருந்த பரிசாரகர்களின் பேச்சுக் குரல் கூட அடங்கிவிட்டது. யாரோ ஒரு பக்தர் சங்கிரக ராமாயண சுலோகத்தைத் திரும்பத் திரும்ப வெளியிலே பாடிக் கொண்டிருந்தது மட்டும் மெதுவாகக் கேட்டது.

அறைக் கதவு திறக்கும் சத்தம் கேட்டது.

திண்டிலே சாய்ந்தவாறே பார்வையை நிலைப் பக்கம் செலுத்தினார் சுவாமி.

" ஸ்வாமி நியமிக்கிறதா...... !"

அடக்க ஒடுக்கமாக மெல்லிய குரலிலே கேட்டார் வந்து நின்ற மனிதர். சுவாமியின் அந்தரங்க சிஷ்யரான அவர் சுவாமியிடம் விடை பெற்றுக் கொள்ளும் முறை அதுதான்.

" துளசி ராமாயணப் புஸ்தகம் அதோ இருக்கிறது பார். அதை எடுத்துக் கொடுத்து விட்டுப் போகலாம்!"

வந்திருந்தவர் புத்தகத்தை எடுத்து வந்து கொடுத்து விட்டு நகர்ந்தார். அறை வாசற் கதவின் மணிகள் கண கணத்தன. பூரண அமைதி நிறைந்தது.

வித்யானந்தர் ஆழ்ந்த ஏக்கத்தின் எதிரொலியைப் போல நீண்ட பெருமூச்சு விட்டார். அவர் கை விரல்கள் பக்கங்களைப் புரட்டின.

'டக்'கென்று ஏதோ விழுந்த சத்தம் கேட்டது. அவர் எழுந்து நேராக உட்கார்ந்து கொண்டு அறையின் நாற்புறமும் பார்வையை ஓடவிட்டார். மேற்குச் சுவரோரமாக இருந்த பெஞ்சின் மேல் வைக்கப்பட்டிருந்த வெள்ளிக் கூஜாவை உருட்டி விட்டு ஓடிக் கொண்டிருந்தது ஒரு பூனை. அவர் பார்வை அங்கே யிருந்த மற்றும் சில தங்க, வெள்ளிச் சாமான்களின் மீது நிலைத்தது. அவர்



" எல்லாப் பணத்தையும் பாங்கியில் கட்டி விட்டேன்......ஒரு ஐந்து ரூபாய் இருந்தால் கொடுங்களேன்!......"

தமக்குத் தாமே சிரித்துக் கொண்டார். அவரது சிந்தனை வேகமாகக் கடந்த கால நினைவுகளைப் புரட்டிக் கொண்டிருந்தது.

காலக் கறையான் அரித்ததினால் இடிந்தும் பழுதுபட்டதுமான சுவர்களோடு நின்ற அந்த ஒற்றை மனையிலேதான் அவரது பூர்வாசிரம வாழ்வு தொடங்கி நடந்தது. தமிழ் நாட்டைச் சேர்ந்த 'பொன்னிக்கரை' கிராமத்திலே உஞ்சவிருத்தி மகாதேவய்யர் என்று அவர் பெயர் பிரசித்தமாயிருந்தது.

காலை ஏழு, ஏழரை மணிக்கெல்லாம் தலையில் தலைப்பாகையும் கையில் ஒரு செம்புமாகத் தேவிஸ்தோத்திரங்களைப் பாடிக் கொண்டு கிளம்பி விடுவார் அவர். அனேகமாகத் தினந்தோறும் குறைந்த பட்சம் ஒருபடி அரிசியாவது சேர்ந்து விடும். ஜோஸ்யம், வைதீகம், வேத பாராயணம் என்று ஏதோ சேரும் அற்ப சொற்பமான பணத்தையும் உஞ்சவிருத்தி அரிசியையும் வைத்துக் கொண்டு அவர் காலம் எப்படியோ ஓடிக் கொண்டிருந்தது. பொறுமையின் புகலிடமான அவர் மனைவி சரஸ்வதி அம்மாள் இருப்பதை வைத்துக் கொண்டு இரண்டு பெண் குழந்தைகளும் ஒரு ஆண் குழந்தையும் கொண்ட அந்தக் குடும்பத்தைத் திறமையுடன் சமாளித்து வந்தாள். மகாதேவய்யர் குடும்பப் பொறுப்பை அவ்வளவாக எடுத்துக் கொள்ள மாட்டார். எப்பொழுது பார்த்தாலும் ஏதாவது புராணப் புத்தகங்களையோ வேதாந்த உபநிஷத் புத்தகங்களையோ வைத்துக் கொண்டு உட்கார்ந்திருப்பார்.

காலம் வேகமாக ஓடிக்கொண்டேயிருந்தது. மகாதேவ அய்யரின் மூத்த பெண் ஜனகம் பருவத்தை எட்டிப் பூத்துக் குலுங்கி நின்றாள். அடுத்தவள் மதமதவென்று வளர்ந்து கொண்டிருந்தாள். அவளுக்கும் பதின்மூன்று வயது ஆகிக் கொண்டிருந்தது. சரஸ்வதி அம்மாளும் தன் கடமையை விடாமல் அடுத்து ஒரு குழந்தைக்குத் தாயாகத் தயாராக இருந்தாள். அப்பொழுது அவள் பூரண கர்ப்பிணி. போதாக் குறைக்கு அந்த நேரம் பார்த்துப் பையன் சாமாவுக்கு எங்கிருந்தோ விஷ ஜுரம் ஒன்று வந்து தொடர்ந்திருந்தது.

எங்கேயோ ஐரோப்பாவில் யுத்தம் துவங்கியதாம்! நாடெங்கும் அகவிலைகள் விஷம்போல ஏறிக் கொண்டிருந்தன. பருவ மழை தவறி, பஞ்சம் தன் பாதச் சுவட்டை இலேசாகப் பதிய விட்டிருந்தது. செல்வ நிலை குறைந்து க்ஷீணதிசை மேவும் போது தானமேது, தர்மமேது! மகாதேவய்யர் வாழ்வு வரவர ரொம்பவும் மோசமாகிக் கொண்டே வந்தது. வைதீகம் தெய்வீகம், இவற்றிலே மக்களுக்கிருந்த நம்பிக்கை மேலும் மேலும் குறைந்து போகவே அவர், நிலை மிகவும் பரிதாபத்துக்கிடமாகிவிட்டது. அன்றாட வாழ்வே மிக மிகச் சிரமமான காரியமாகி விட்டது.

வீட்டு முன் வாசற் குறட்டிலே உட்கார்ந்து வீதியைப் பார்த்துக்கொண்டிருந்தார் அவர்.

"அப்பா, அப்பா! கொஞ்சம் உள்ளே வாயேன்! சாமா என்னவோ பயங்கரமாக உளறுகிறான்!"

ஜனகம் அழாக்குறையாகப் படபடப்புடன் கூறியதைக் கேட்டு மௌனமாக அவர் எழுந்து உள்ளே போனார். சாமா உண்மையிலேயே மிகவும் பயங்கரமான நிலைமையில்தானிருந்தான்.

"யாராவது வைத்தியரை அழைத்து வரக் கூடாதா!" என்று கவலை நிறைந்த குரலிலே வினவினாள் சரஸ்வதி அம்மாள்.

அவர் பதிலே பேசவில்லை. கீழே குனிந்து கொண்டே வெளியே போய்விட்டார். அப்புறம் உள்ளூர் நாட்டு வைத்தியர் ஒருவருடன் திரும்பி வந்தார். நாட்கள் ஓடின. ஏற்கெனவே வறண்டு போயிருந்த அவர் மனம் மேலும் ஒடிந்து சுக்குநூறாயிற்று. பாசம் சுரக்க வேண்டிய மனத்திலே வெற்று வெறுப்பு நன்றாக வேர்விட்டுத் தளிர் விட்டுக் கிளை விட்டு விட்டது.

போதிய வசதியும், வைத்தியமும் இல்லாதது தான் காரணமோ அல்லது தெய்வ சோதனையோ, சாமா கண்ணை மூடிவிட்டான். மகாதேவய்யர் பித்தரைப்போல நாளைக் கழிக்கலானார்.

சாமா இல்லாத இடத்தைச் சுந்தரம் வந்து நிறைத்தான். கடைக்குட்டியாகப் பிறந்த அந்தக் குழந்தையின் குஞ்சுக் கரங்களிலும் குளறும் மொழிகளிலும் அவர் எந்த இன்பத்தையும் காணவில்லை. அந்தக் குழந்தையின் முகத்தைக்கூட அவர் சரிவரப் பார்த்திருப்பாரோ, என்னவோ! அத்தனை வெறுப்புடன் தான் அவர் நடந்துகொண்டார். என்றைக்காவது ஜனகமோ, சரஸ்வதியம்மாளோ குழந்தையின் விளையாட்டுத் திறமையைப் பற்றிப் புகழ்ச்சியாக அவரிடம் சொல்ல வந்தால் அவர் அதைக் காதிலேயே வாங்கிக் கொள்ளாமல், 'உம். எல்லாம் ஈசுவர லீலை' என்று சொல்லிவிட்டுப் போய் விடுவார். அவரது இந்த விசித்திர மன மாற்றத்தின் பொருளை அறிந்துகொள்ள இயலாமல் ஏங்கினாள் அவர் மனைவி.

வருமானம் மிகவும் சுருங்கிற்று. வாழ்க்கைத் தரம் மிகவும் இறுகிற்று. அவர் மனத்திலே வளர்ந்த வெறுப்பும் இறுகித் திடமாக உறைந்துவிட்டது.

வெளியே அமாவாசையின் கரிய இருள் அடர்ந்திருந்தது.



காற்று சுழன்று சுழன்று வீசிக் கொண்டிருந்தது. கதவைத் திறந்து கொண்டு கல்லான நெஞ்சுடன் வீட்டைத் திரும்பியும் பாராமல் விடுவிடென்று அந்த இருளிலே நடந்தார் அவர். யாராவது பின்னால் தொடர்ந்து வந்து விடுவார்களோ என்ற பயம் பிடித்துக் கொள்ளவே வேகமாக நடந்தார். பத்துப் பதினைந்து மைல்கள் நடந்ததும் அவர் கால்கள் கெஞ்சின. கண் இருண்டது. நடை தளர்ந்து தள்ளாடியது. ஆயினும் நடந்து கொண்டிருந்தார். கடைசியில் அவர் அந்தப் பாதையிலே தன்னுணர்வின்றி விழுந்து விட்டார்.

அவர் கண்ணை விழித்தபோது ஏதோ ஒரு தெய்வ சந்நிதானத்திலே இருப்பது போன்ற பிரமை அவருக்கு உண்டாயிற்று. மேள தாளங்களின் ஒலியும், சங்கங்களின் குமுறலும், தீப வரிசைகளின் ஒளியும் அவருள்ளத்திலே புத்துணர்வை ஊட்டின. எழுந்து உட்கார முயன்றார்.

“எழுந்திருக்க வேண்டாம். அப்படியே இருங்கள். ரொம்பவும் களைப்பாக இருக்கிறீர்கள்!” என்றார் ராமகிரி மடாலயத்து அதிபரான ஸ்வாமி பூஜ்யர் அகிலானந்தர்.

அதன் பின்னர்தான் எத்தனை மாறுதல்! ஆயிரமாயிரம் அறிமுகமான சிஷ்யர்களும் வித்வான்களும் இருக்க, அகிலானந்தர் மகாதேவய்யரையே தம் அந்தரங்க சிஷ்யராக வைத்துக் கொண்டதைக் கால பலன் என்றுதானே சொல்ல வேண்டும்! அகிலானந்தருக்குப் பிறகு மகாதேவய்யர் ஸ்வாமி ஸ்ரீ வித்யானந்தராக மாறி மடாலயப் பொறுப்பேற்றுக் கொண்டார். குடும்ப வாழ்விலே ஏற்கனவே வெறுப்பு ஏற்பட்டிருந்த அவருக்கு முதலிலே இது உகந்ததாகத்தான் தோன்றியது.

ஆனால் அன்று காலை லேட்டரியின் பத்து வயதுப் பையனைப் பார்த்த உடனேயே மனத்திலே படர்ந்திருந்த வெறுப்பைப் பிளந்து கொண்டு பூர்வாசிரம நினைவுகள் பீறிட்டெழுந்தன. அவர் வீட்டை விட்டுப் புறப்படும்பொழுது கைக்குழந்தையாக இருந்த சுந்தரம் இப்பொழுது இந்தச் சிறுவனைப்போல வளர்ந்திருப்பான். ஆம்; அவர் வீட்டை விட்டு வந்துதான் பத்து வருடங்கள் பறந்து விட்டனவே! ஆனால், தான் இருக்கும்பொழுதே தள்ளாடி வாழ்வு நடத்திய அந்தக் குடும்பம் இந்தப் பத்து வருட காலமாக ஆண் துணையில்லாமல் என்ன பாடு படுகிறதோ! நிர்மலமான மனத்துடன் தானா அவர் வீட்டை விட்டுப் புறப்பட்டார்? குடும்பத் தொல்லைக்கு ஈடு கொடுக்கப் பயந்து தானே வெளியேறினார்! பாவம், அந்தக் குணவதி சரஸ்வதி என்ன பாடு படுகிறாளோ! அவர் மனச்சாட்சி அவரைக் குத்திச் சித்திரவதை செய்வதுபோல இருந்தது. வீட்டை விட்டு ஓடிவந்து அவர் இங்கே நிம்மதியாக ராஜபோகம் அனுபவிக்கிறார். அவராக வலிந்து இந்தப் போகத்தை வரவழைக்கவில்லைதான். என்றாலும், தானாகத் தலையிலே ஏறிவிட்ட அந்த போகத்திலே, ராஜரிஷி வாழ்விலே அவர் மனம் இன்பம் பெறாமலா போய் விட்டது!...சாய்ந்து கொள்ளத் திண்டு, உட்காரக் காஷ்மீர் கம்பளம், ஊஞ்சல்; பால் அருந்தப் பொன் பாத்திரங்கள். சுற்றிலும் பணம். ஏன் என்று கேட்க ஏகப்பட்ட ஏவலாளர்கள். பெயர் சன்னியாசி, ஸ்வாமி ஸ்ரீ வித்யானந்தர்! அப்படியாவது இந்த மனம் பூர்வாசிரம நினைவை அறவே இழந்து விட்டதா! வாழும் காலத்திலே இல்லாத குடும்ப நினைவும், பாச உணர்வும் இன்று மேலோங்குவதேன்! — அவர் கண்களை இறுக மூடிக் கொண்டு சிந்தனையில் ஆழ்ந்தார்.

“தெய்வமே! என் மனத்தைப் பரிசுத்தம் செய்ய மாட்டாயா!” — நெற்றியைக் கையினால் அழுத்திக்கொண்டு வாய்விட்டு அரற்றினார் அவர். எவ்வளவோ முயன்று தம் மனத்தைத் துளசி ராமாயணத்தில் ஓடவிட்டுப் பார்த்தார். ஆனால் அது மதம் பிடித்த யானையைப் போலப் பொன்னிக் கரையை நோக்கி ஓடியது.

*　　　　*　　　　*

பண்ணையூர் கிருஷ்ணன் கோவிலையடுத்து இருந்த அந்தப் பாழ்மண்டபம் அன்று ‘ஜே, ஜே’ என்று விளங்கியது. மாவிலைத் தோரணங்களாலும், பூச்சரங்களாலும் மண்டபத்தின் முகப்பிலே தோரணம் கட்டியிருந்தார்கள். அடிக்கொருமுறை சங்கமும், சின்னமும், மேளதாளமும் முழங்கிக் கொண்டிருந்தன.

உள் மண்டபத்திலே கல்லணை யொன்றில் அமர்ந்து சாளரத்தின் வழியே வெளிப்புறக் காட்சிகளைப் பார்த்துக் கொண்டிருந்தார், ஸ்வாமி ஸ்ரீ வித்யானந்தர்.

மாலை வெய்யில் சாளரத்தின் வழி நுழைந்து மெதுவாக அவர் முகத்தை ஸ்பரிசித்தது. தூரத்திலே எங்கேயோ பலர் சேர்ந்து பாடும் ஒலி மெதுவாகக் காற்றின் வழி கேட்டது. இடையிடையே, முரளிகானமும் மிருதங்க ஒலியும் கலந்து வந்தன.

“சேவையில் ஆர்வம் க்ஷேமம் விளைக்கும்
சேர்ந்து தினம் பணி செய்திடுவோம்!”

என்ற அடிகளைக் கேட்டபோது, ‘இது ஏதோ பஜனைக் கூட்டம் போலிருக்கிறது’ என்று நினைத்துக் கொண்டார் அவர். வரவரப் பாட்டின் ஒலி



ஹோட்டல்காரர்:— ஏன் காப்பியை வெகு நேரமாக வைத்துக் கொண்டு தவிக்கிறீர்? ஏதாவது வாசனை வருகிறதா?

சாப்பிடுபவர்:—ஆமாம், விளக்கெண்ணெய் வாசனை வருகிறது!

ஹோட்டல்காரர் (அதை வாங்கி முகர்ந்து பார்த்து விட்டு):—நீர் என்ன, சுத்த மோசமாயிருக்கிறீரே! உமக்கு ஒன்றும் தெரியவில்லையே! அது வேப்பெண்ணெய் வாசனையல்லவா வருகிறது?

மிகவும் அருகே கேட்டது. சற்று நேரத்துக்கெல்லாம் சிறுவர், சிறுமிகள் கூட்டமொன்று அந்தப் பக்கமாகப் பாடிக் கொண்டு செல்வதை அவர் பார்த்தார். கள்ளங் கபடற்ற அந்த முகங்களிலே மிளிர்ந்த குதூகலமும் ஆர்வமும் அவர் மனத்துக்கு இன்பம் தந்தன. அந்தக் குழந்தைகளின் கூட்டத்திற்குள் தலைமை வகித்த ஒரு அம்மாள் பாட்டின் முதலடியைப் பாடினாள். பின், குழந்தைகள் எல்லோருமாகச் சேர்ந்து அதைப் பாடினார்கள். சாளரத்திற்கு எதிராக அவர்கள் கடந்து செல்லும்பொழுது அந்த அம்மாளின் முகத்தை அவர் தெளிவாகப் பார்த்தார்.

அவர் உடம்பெல்லாம் புல்லரித்தது. திடீரென ஓர் எரியுணர்ச்சி நரம்புகள் எங்கும் பரந்து அவரைக் குலுக்கி எடுத்தது. அவர் கண்கள் காண முடியாத அதிசயத்தைக் கண்டு விட்டதைப்போல அகல விரிந்து மறுபடி மூடிக் கொண்டன. ஏதோ தியானத்தில் அமர்ந்திருப்பதைப்போலச் சற்று நேரம் அவர் அப்படியே இருந்தார். அப்புறம் எதையோ நினைத்துக் கொண்டவர்போல எழுந்து அறையின் வாசல் வரை நடந்தார். வெளியறையில் பூதலிங்கமய்யர் நின்று கொண்டிருந்தார். அடியோசை கேட்டுச் சட்டெனத் திரும்பி, சுவாமிஜியின் அருகில் அடக்க ஒடுக்கமாக வந்து நின்றார்.

“இப்பொழுது ஒரு பஜனைக் கூட்டம் போயிற்றே — என்ன விசேஷம்!” என்று கேட்டார் சுவாமி. அதைப்பற்றி அறிந்து கொள்ளும் ஆவல் அவர் குரலிலே பரபரத்தது.

“இங்கே ‘அநாதாசிரமம்’ ஒன்று நடக்கிறது. எங்கெங்கிருந்தோ வந்த அநாதைகளைப் பராமரிப்பதற்காக ஏற்படுத்தப்பட்ட அந்த ஆசிரமம் இன்று இத்தனை பெரியதாக வளர்ந்து ஒரு ஏழைப் பள்ளிக்கூடமே நடத்துகிறது. அந்தப் பள்ளிக்கூடத்தின் வருஷாந்திரக் கொண்டாட்டம்தான் இது” என்றார் ஸ்ரீமான் பூதலிங்கம்.

சுவாமிஜி மேலே அண்ணாந்து பார்த்தவாறே ஏதோ யோசனையில் ஆழ்ந்தார். பூதலிங்கம் தொடர்ந்து பேசிக்கொண்டே போனார்:

“இதோ முன்னால் பாடிக்கொண்டு போகிறாளே, அந்த அம்மாள் இரண்டு மூன்று குழந்தைகளுடன் ஏழெட்டு வருஷங்களுக்கு முன் இந்த ஊருக்கு வந்தாள். இப்பொழுது இந்த ஆசிரமத்தின் முழுப் பொறுப்பும் இந்த அம்மாளுடையதுதான். சமீபத்தில்தான் இந்த அம்மாளின் இரண்டு பெண்களுக்கும் கலியாணம்கூட ஆயிற்று. ஆசிரமத்திற்கு நிறைய நிதி இருக்கிறது. அதுவும் தவிர இங்கே படிக்கும் குழந்தைகளோ, பெரியவர்களோ யாரும் சும்மா இருப்பதில்லை. ஆசிரமத்தில் நெசவுத் தொழில் நடக்கிறது. அதில் இவர்கள்தான் உழைக்கிறார்கள். இன்னும் சித்திரங்கள், மரவேலைச் சாமான்களும் தயாரிக்கிறார்கள்.”

சுவாமி வித்யானந்தர் தம் பேச்சை இவ்வளவு பொறுமையுடன் கேட்டுக் கொண்டிருந்ததில் பண்ணையூர் கிருஷ்ணன் கோவிலில் ஏழைப் பூசாரியாக வாழும் பூதலிங்கமய்யருக்குப் பெருமை தாங்கவில்லை.

வித்யானந்தர் குனிந்தவாறு ஏதோ யோசனை செய்து கொண்டே பூஜை அறைக்குள்ளே நுழைந்ததும் வித்யானந்தரின் கண்கள் அணைமீறி நீர் சொரிந்தன. கீழேயிருந்த கம்பளியில் உட்கார்ந்து கொண்டே எதிரே சுவரில் தொங்கிய தேவியின் படத்தை உற்று நோக்கினார் அவர்.

அன்னை சிரித்தாள். அவள் அவரைப் பார்த்துத்தான் சிரிக்கிறாளா!

சுவாமிஜியின் மனத்திலே சிந்தனைச் சிலந்தி வேகமாக வலை பின்னியது.

“சரஸ்வதி நிராதரவாக விடப்பட்ட பெண். தன் குடும்பப் பொறுப்புகளையும் உதறி விடாமல் சமூகத்திற்கே சேவை செய்கிறாள். கணவன் தனியே தன்னைத் தவிக்க விட்டுப் போய் விட்டானே என்று பயந்து அவள் தற்கொலை செய்து கொள்ளவில்லை. வாழ்க்கையைப் பரிபூரணமாக உணர்ந்தவள் அவள்தான். எங்கெங்கோ சுற்றித் திரிந்த அவளை அன்னை இந்த ஆசிரமத்திற்குக் கொண்டு சேர்த்து விட்டாள். ஒப்பரிய சேவை செய்கிறாள் அவள். நான்......ராஜ போகம் அனுபவிக்கிறேன் மனத்திலே சம்சாரப் பற்றை வளர்த்துக் கொண்டு வெளியிலே சன்னியாச வேஷம் போடுகிறேன்!”

அவர் தம் நெற்றியை அழுத்திப் பிடித்துக் கொண்டார். எதிரேயிருந்த தேவி படத்திற்கு அணிந்திருந்த மாலையிலிருந்து இரண்டு ரோஜா இதழ்கள் உதிர்ந்தன. அவர் அவற்றை எடுத்துக் கண்களில் ஒற்றிக் கொண்டார்.

‘ராமகிரி மடாலயத்தையே ஒரு சேவா நிலையமாக மாற்றிவிட வேண்டும். போகம் நிறைந்த இந்தச் சூழ்நிலை குடும்பப் பற்றைத்தான் வளர்க்கும். ஆனால்...!” அவர் சிந்தனை தடைப்பட்டது. ‘சேவையில் ஆர்வம்’ என்ற பாட்டின் அடிகள் அவர் காதுகளில் ஒலித்தன. ராமகிரி மடாலயத்தின் செலவிலே நிறுவப்படும் பிரம்மாண்டமான கலைக் கூடங்களும் கலாசாலைகளும் அவரது மனக் கண்முன் ஒரு கணம் ஒளி வீசின.

மலர்ந்த கண்களுடன் அன்னையின் அழகு வடிவத்தைப் பார்த்தார் அவர்.

“தேவி, இல்லற வாழ்விலே தோற்றுவிட்டேன். துறவறத்திலும் தோல்விதான்! சூழ்நிலையை வெல்லும் சுத்த மனத்தை அருள் செய்து, கலா சேவையிலாவது எனக்கு வெற்றியைத் தருவாயா, அம்மா!” என்று மனம் உருகி வேண்டினார் அவர்.

அன்னை மலர் உதிர்த்தாள். அப்பொழுது வெளியே சங்கம் அதிர்ந்தது.



பின்னிஷ் கதை: . டியூலி ரெய்ஜோனேன் மொழிபெயர்ப்பு: வாஞ்சி

அந்தச் செய்தி வெகு சீக்கிரத்தில் சுற்று வட்டக் கிராமங்களுக் கெல்லாம் பரவி விட்டது. அமெரிக்காவிலிருந்து வந்த சாதனங்களை மறுபடியும் விற்கப் போகிறார்கள் என்ற செய்திதான்! உடனே பல விடங்களிலிருந்தும் அந்தச் சாதனங்களை வாங்குவதற்காகத் தகாகுஸ்டோ கிராமத்துக்குச் சரமாரியாக ஜனங்கள் வரத் தொடங்கினர்.

இரண்டாவது மகாயுத்தத்தின்போது அமெரிக்காவிலிருந்து துருப்புக்களுக்காக எல்லையில்லாமல் சாதனங்கள் வந்து குவிந்து கிடந்தன. அவைகளில் செலவானவை போக பாக்கி யிருந்த ஏராளமான சாதனங்களை ஜனங்களுக்கு விற்க முற்பட்டார்கள். இராணுவத்துக்காகப் பிரத்தியேகமாய்த் தயாரிக்கப்பட்ட சிறந்த சாதனங்களானதால், ஜனங்கள் போட்டி போட்டுக் கொண்டு ஆர்வத்துடன் அவற்றை வாங்கலாயினர்.

கொடும் பனியைத் தாங்கும் கம்பளிக் கோட்டுகள், மிருதுவான ஆனால் மிகவும் கெட்டியான கம்பளிப் போர்வைகள், எங்கு சென்றாலும் தூங்குவதற்கு வசதியான படுக்கைப் பைகள், பல்வேறு உடுப்பு வகைகள், பூட்ஸ்கள் முதலிய எத்தனையோ சாதனங்கள் விற்கப் பட்டன. அவற்றுள் எல்லாவற்றையும் காட்டிலும் படுக்கைப் பைகளுக்குத் தான் கிராக்கி மிகவும் அதிகமாக இருந்தது.

கெஸ்டரியும் தனக்கு ஒரு படுக்கைப் பை வாங்கிக் கொள்வதென்று முடிவு செய்தான். "எனக்கு ஒரு படுக்கைப் பை அவசியம் தேவை" என்று அடிக்கடி அவன் வாய் முணுமுணுத்தது. வசதியான படுக்கைப் பையில் அவனுக்கு அவ்வளவு பிரேமை!

இந்தக் கதை அகில உலகச் சிறுகதைப் போட்டியில் முதல் பரிசு பெற்ற நாலு கதைகளில் ஒன்று. இதை எழுதிய ஸ்ரீமதி டியூலி ரெய்ஜோனென் பின்லாந்தைச் சேர்ந்தவர். இவர் ஏராளமான நாவல்கள், நாடகங்கள், சிறுகதைகள் எழுதிப் பிரக்யாதி பெற்றிருப்பதுடன், "கூவா" என்ற பின்லாந்தின் பிரபல பத்திரிகைக்கும் ஆசிரியையாக விளங்குகிறார். இவரது கணவரும் மிகச் சிறந்த எழுத்தாளர்.

உயர்ந்த ரகக் கம்பளிப் போர்வைகளைக் கூட அவன் விரும்பவில்லை. அவை படுக்கைப் பையைப் போல் ஆகுமா! படுக்கைப் பையைச் சுலபமாக எங்கும் எடுத்துச் செல்லலாம். அது பனி, மழை எல்லாவற்றையும் தடுத்துப் பாதுகாப்பு அளிக்கும் அல்லவா! தவிர அதைப்போல் கடும் குளிருக்கு அடக்கமாக இருப்பது வேறு எதுவுமே யில்லை.

ஆனால் கெஸ்டரி வருவதற்குள் படுக்கைப் பைகள் எல்லாம் விற்பனை யாகிவிட்டன. அதைக் கேட்டதும் அவன் முகத்தில் தென்பட்ட ஏமாற்றத்தைப் பார்க்க வேண்டுமே! அவன் முகத்தில் ஏற்பட்ட மாறுதலை, மேற்படி சாமான்களை விற்பதில் ஈடுபட்டிருந்த செங்கூந்தல் அழகி கவனித்தாள். அவளுக்கு அது மிருந்த ஆச்சரியத்தையும் அனுதாபத்தையும் உண்டு பண்ணியது!

அந்த அற்ப விஷயத்துக்காக அவன் ஏன் அவ்வளவு ஏமாற்றம் அடைய வேண்டும்! இது மிகவும் வேடிக்கையாக இருக்கிறதே!

"நன்றாகப் பார்த்துச்சொல்" என்றான் கெஸ்டரி.

"ஒன்றுகூட இல்லவே இல்லை" என்பதற்கு அறிகுறியாகசெங்கூந்தல் அழகி தலையை அசைத்தாள்.

"நிச்சயம்தானா! ஒன்று கூடப் பாக்கி இல்லையா!"

"இல்லை. எல்லாம் விற்பனையாகி விட்டன."

"மூலை முடுக்குகளிலே ஏதாவது சாமான்களுக்கு அடியிலேயாவது ஒரு பை இருக்கக் கூடும்."

"பார்த்தாகி விட்டது; ஒன்றுமே இல்லை!"

"அந்த மேஜைக்குக் கீழே என்ன! படுக்கைப் பை மாதிரி இருக்கிறதே!"

"இல்லை; அது படுக்கை சுற்றும் கான்வாஸ்" என்றாள் அக் கூந்தல் அழகி.

செங்கூந்தல் அழகி கீழே குனிந்து அதை எடுத்துக் காட்டியபோது, அவனது கூந்தல் அவளுடைய முகத்தில் விழுந்தது. அதை அவள் மெதுவாக அப்பால் தள்ளிக் கொண்டாள். இந்தக் காட்சி தன் மனதில் படம் பிடித்தாற்போல் பதிந்து விட்டது என்பதை கெஸ்டரி பிறகுதான் தெரிந்து கொண்டான்! ஏனெனில் அப்போது அவன் கவனம் முழுவதும் படுக்கைப் பை வாங்க வேண்டும் என்பதில் மூழ்கியிருந்தது அல்லவா!

அதிருப்தியுடன் தயங்கிக் கொண்டே ஸ்டோரி லிருந்து புறப்பட்ட கெஸ்டரி இரண்டு மூன்று அடி எடுத்து வைத்ததும் என்ன நினைத்தானோ தெரியவில்லை. மறுபடியும் திரும்பி வந்தான்.

"எனக்காகக் கடைசி முறையாக ஒரு தடவை பார்த்துவிடு" என்று கேட்டுக் கொண்டான்.

கெஸ்டரியின் நச்சரிப்பு செங்கூந்தல் அழகிக்குச் சிறிது கோபத்தை உண்டாக்கியது. ஆனால் அதே சமயம் அவனது பார்வை ஸ்டோரின் ஒரு மூலையில் அழகாகச் சுருட்டி வைக்கப்பட்டிருந்த படுக்கைப் பையின்மீது விழுந்தது.

அது எங்கிருந்து வந்தது! ஏற்கெனவே எவ்வளவோ தேடியும் அகப்படவில்லையே!

அந்தப் படுக்கைப் பை கெஸ்டரிக்கென்றே அங்கு எடுத்து வைக்கப்பட் டிருப்பதுபோல் செங் கூந்தல் அழகிக்குத் தோன்றியது.

அதை அவள் கையில் எடுத்துக் கொண்டு வருவதற்குள் கெஸ்டரி அவளிடமிருந்து அந்தப் படுக்கைப் பையைப் பிடுங்கிக் கொண்டான்.

ஒருவேளை ஸ்டோர் மானேஜர் அதை வேறு யாருக்காவது கொடுக்க வேண்டும் என்பதற்காக எடுத்து வைத்திருக்கலாம். எனினும் செங்கூந்தல் அழகியிடம் அவர் எதுவும் சொல்லவில்லை. எனவே அதை எடுத்து விற்க அவளுக்கு உரிமையுண்டு. தவிர, பாவம்! அந்த அப்பாவி மனிதன் படுக்கைப் பை கிடைக்காவிட்டால் ஏதோ பறி கொடுத்தவனைப்போல் ஏமாற்றம் அடைந்து திரும்பிச் செல்லுவான் அல்லவா!

அந்தப் பையைச் செங்கூந்தல் அழகி ஒழுங்காகக் கட்டிக் கொடுப்பதற்கும் கெஸ்டரி இசையவில்லை.

அதை அவள் தன் கையிலிருந்து அவனிடம் திருப்பிக் கொடுத்தால்தானே!

அவள் ஏதோ விலை சொன்னாள். கெஸ்டரி தன் சட்டைப் பையில் கசங்கிக் கிடந்த நோட்டை எடுத்துச் சரிப்படுத்தினான். செங்கூந்தல் அழகியிடம் அதைக் கொடுத்தான்.

"இது மிகவும் நேர்த்தியான பை. நான் கொடுக்கும் பணத்துக்குச் சிறிதும் நஷ்டமில்லை" என்று சொல்லிவிட்டுச் சிரித்தான்.

செங்கூந்தல் அழகியும் சிரித்தாள்.

படுக்கைப் பையைக் காட்டிலும் அதிகமாக அந்த அழகியின் செங்கூந்தலும் அவளது சிரிப்பும் தன் மனதைக் கவர்ந்து விட்டன என்பதை அப்போதுதான் கெஸ்டரி தெரிந்துகொண்டான்!

* * *

கெஸ்டரி தச்சு வேலை செய்பவன். திறமையும் சுறுசுறுப்பும் உள்ளவன் ஆனதால் அந்தப் பக்கத்தில் அவனைத் தெரியாதவர்கள் யாருமில்லை. தச்சு வேலை செய்வதற்காகப் பல கிராமங்களிலிருந்தும் அவனை அழைத்துக் கொண்டு போவதற்காக வருவார்கள். யுத்தத்தில் அழிந்த கிராமங்கள் மறுபடியும் நிர்மாணிக்கப்பட்டு வந்ததால், கெஸ்டரிக்கு மிகுந்த கிராக்கி இருந்தது.

வீடு இல்லாமல் கஷ்டப்படும் ஜனங்களுக்கு வீடுகளைக் கட்டி முடித்த பின் தனக்கு ஓர்



அருமையான சிறிய வீட்டைக் கட்டிக் கொள்ள வேண்டும் என்பது கெஸ்டரியின் அபிப்பிராயம்.

அவனுக்குக் கல்யாணம் ஆகவில்லை என்பது உண்மையே. எனினும் அதற்காக அவனை யாராவது கேலி செய்தால் அவன் முகம் மாறிவிடும். மேற்படி மாறுதலை ஒரு தடவை பார்த்தவர்கள் பிறகு அவனை அவ்விஷயமாகப் பரிகாசம் செய்யத் துணிய மாட்டார்கள்! ஏனெனில், கல்யாணம் ஆகாவிட்டாலும் பெண்களைப் பற்றி எதுவுமே தெரியாத அவ்வளவு மூடன் அல்ல அவன்!

* * *

கெஸ்டரி தான் வாங்கிய படுக்கைப் பையைப் பரிசீலனை செய்யத் தொடங்கினான். தூசுகள் போகத் தட்டினான். அங்குலம் அங்குலமாக அதைப் பரிசோதனை செய்து பார்த்தான்.

'இதன் தையல் எவ்வளவு உறுதியாக இருக்கிறது!' என்று தனக்குள் ஆச்சரியப்பட்டான்.

அதைப் பிரித்து அதில் படுத்துக் கொண்டான். அவன் சிறிது ஸ்தூல சரீரம் படைத்தவனானதால், அதில் படுத்துக் கொண்ட பின் அதை மூடுவது சிறிது கஷ்டமாகத்தான் இருந்தது.

"முதல் தடவையானதால் சிறிது கஷ்டமாக இருக்கிறது. நாளா வட்டத்தில் சரியாகிவிடும். மூடுவதற்காக இருக்கும் அலகுப் பற்கள் எவ்வளவு அழுத்தமாக இருக்கின்றன. அதே சமயம் யாதொரு தங்கு தடையுமின்றி அப்பற்கள் பொருந்திக் கொள்கின்றன. இனி மழைக் காலம், பனிக் காலம் எதைக் கண்டும் கலங்க வேண்டிய அவசியமில்லை. அவற்றைச் சமாளிக்கக்கூடிய இந்த அருமையான பை இருக்கிறது அல்லவா!"

அவன் சிந்தனை படுக்கைப் பையை விட்டு வேறிடத்துக்குச் சென்றது.

ஆஹா! அக்னி ஜ்வாலையைப்போல் செவ்வானம் எவ்வளவு அழகாக இருக்கிறது! ஸ்டோரில் இருக்கும் பெண்ணின் செங் கூந்தலுடன் இதை ஒப்பிடலாம். அதுவும் இப்படித்தான் சுருண்டு சுருண்டு இருக்கிறது. அடிக்கடி அந்தக் கூந்தல்



அவள் முகத்தில் புரளுகிறது. அதை அவள் அப்பால் தள்ளிக் கொள்ளுகிறாள். அன்று அவள் நெல்ஸ்டரியைப் பார்த்துச் சிரித்தாள். நர்த்தனமாடிச் சிரிக்கும் அவளுடைய கண்கள் இடைவிடாமல் அவன் மனக் கண்முன் நிற்கின்றன. அந்தப் பெண்,—செங்கூந்தல் அழகி இப்போது அவன் பக்கத்தில் இருந்தால்...!

மேற்படி படுக்கைப் பையில் இதற்கு முன் யார் யார் படுத்திருந்தார்களோ! என்னென்ன கனவு கண்டார்களோ! யாருக்குத் தெரியும்!

அந்தப் பையிலிருந்து ஒரு இனுசான வாசனை வருகிறது. அது என்ன வாசனை! ஒரு வேளை யுத்த வாசனையாக இருக்கலாம்!

இதற்கு முன் ஒரு சிப்பாய் அந்தப் பையில் படுத்திருந்திருக்கலாம் நெல்ஸ்டரியைப்போல் அவனும் அவனது செங்கூந்தல் அழகியை நினைத்து நினைத்து உருகி யிருக்கலாம். இப்போது அந்தச் சிப்பாய் எங்கு இருக்கிறானோ! போரில் செத்து விட்டானோ அல்லது உயிருடன் திரும்பிச் சென்று ஒரு செங்கூந்தல் அழகியுடன் ஆனந்தமாக இருக்கிறானோ! ஆயிரக்கணக்கான மைல்களுக்கு அப்பால் ஒரு காலத்தில் தான் படுத்துக் கனவு கண்ட படுக்கையில் இப்போது வேறு ஒருவன் படுத்துக் கொண்டிருக்கிறான், இன்பக் கனவு காண்கிறான் என்பதை அவனால் ஊகிக்க முடியுமா!

நெல்ஸ்டரியின் சிந்தனையில் இரண்டாவது உலக மகாயுத்தமும் இடம் பெற்றது. அவன் போர் முனையில் இருந்தவன். யுத்த சம்பந்தமான சகல விஷயங்களையும் அவன் நேரில் பார்த்திருக்கிறான்.

இந்த உலகில் என்ன நேர்ந்தாலும் எத்தனை லட்சம் பேர் ஏககாலத்தில் பலியானாலும் அதற்காக உலகம் ஸ்தம்பித்து நின்று விடுவதில்லை. அப்படியிருக்க ஒரு தனி நபருக்கு என்ன நேருகிறது என்பது அற்பமான விஷயம். உலகமாகிற கடலில் தனி நபர் ஒரு துளியைப் போல!

படுக்கைப் பையில் படுத்துக் கொண்டு பல்வேறு சிந்தனைகளில் ஆழ்ந்த நெல்ஸ்டரி தூங்குவதும் விழித்துக் கொள்வதும் மறுபடியும் தூங்குவதுமாக இருந்தான். ஸ்டோரில் தான் கண்ட அழகியின் செங்கூந்தல் அவன் கன்னங்களில் படுவது போல் இருந்தது. மெய்மறந்து விட்டான்.

தான் வசிப்பதற்காகக் கட்ட உத்தேசித்துள்ள வீட்டை அடுத்த கோடை காலத்துக்குள் கட்டி முடித்துவிட வேண்டும். அவன் இப்போது படுத்துக் கொண்டுள்ள சிறிய இடம் தற்காலிகமாக அமைக்கப்பட்டதாகும். நெல்ஸ்டரி கட்டப்போகும் வீடு இதைப்போல் இராது. பலமான கட்டிடமாக இருக்கும். அவனுடைய பேரன் காலம் வரையில் அந்த வீடு தாங்க வேண்டும் அல்லவா!

அந்த வீடுகட்டி முடிந்ததும் முதன் முதலாக அங்கு செங்கூந்தல் அழகியே வருவாள். நெல்ஸ்டரியின் மகனும் அவனைப்போலவே தொழில் திறமை வாய்ந்தவனாக இருப்பான். அவன் தாயைப்போல் ஜ்வாலையைப் போன்ற அழகிய செங்கூந்தல் உடையவனாக இருப்பான்.

வீடு கட்டி முடிந்ததும் நெல்ஸ்டரி செங்கூந்தல் அழகி இருக்கும் ஸ்டோருக்குச் செல்லத் தீர்மானித்தான். அங்கு சென்றதும், "என் வீட்டை வந்து பார்க்கிறாயா!" என்று அவளைக் கேட்பான். அவளும், "இதோ வந்து பார்க்கிறேன்" என்று உடனே இசைந்து விடுவாள்.

அவள் அங்கு வந்ததும், "நீ இங்கேயே என்னுடன் வசிக்க மாட்டாயா!" என்று கேட்பான்.

அவனது கோரிக்கையை அவள் மறுக்க மாட்டாள். அவள் நல்லபெண். ஜ்வாலைபோல் கூந்தல் உள்ள பெண்கள் துஷ்டையாக இருப்பார்கள் என்று சொல்லுவது உண்டு. எனினும் ஸ்டோரில் இருக்கும் செங்கூந்தல் அழகியை துஷ்டப் பெண்கள் கோஷ்டியில் சேர்க்க முடியாது.

ஏனெனில், நெல்ஸ்டரிக்காக அவள் படுக்கைப் பையை எடுத்து வைத்திருந்தாள் அல்லவா! தவிர அதை அவனிடம் கொடுத்தபோது அவள் தன் செவ் வாயைத் திறந்து சிரிக்க வில்லையா!

அவளுடைய கண்களில்தான் என்ன சுழற்சி! அந்தச் சுழலில் எவன்தான் அகப்பட்டுக் கொள்ளாமல் தப்ப முடியும்!

வீடு கட்டி முடிந்தபின் இந்தப் படுக்கைப் பை தேவையில்லை. திறந்த வெளியில் படுத்துக் கொள்ளும் தனி நபருக்குத்தானே இது மிகவும் அவசியம். ஆனால் பிறகு இதையே ஒரு மெத்தையாகத் தைத்து விடலாம். செங்கூந்தல் அழகி வீட்டுக்கு வந்தபின் அவன் முன்போல் அடிக்கடி வெளியூருக்குப் போய்க் கொண்டிருக்கமாட்டான்.

அந்த மெத்தைக்கு அழகான வர்ணத்தில் ஓர் உறைவாங்கிப் போட்டு விடலாம். அதிக விலை கொடுத்தாலும் பட்டுத் துணிதான் அதற்கு ஏற்றதாகவும் பார்வைக்கு அழகாகவும் இருக்கும்.

* * *

ஒரு சனிக்கிழமை யன்று நெல்ஸ்டரி தகாகுஸ்டோ கிராமத்தில் உள்ள ஸ்டோருக்குச் சென்றான். அப்போது அவன் வீடு அநேகமாகக் கட்டி முடிந்து விட்டது என்றுதான் சொல்லவேண்டும்.

நெல்ஸ்டரி ஸ்டோரின் வாசற்படியில் நின்று கொண்டு ஸ்டோரைச் சுற்றித் தன் ஆர்வம் நிறைந்த பார்வையைச் செலுத்தினான்.

எப்போதுமே சனிக்கிழமை ஸ்டோரில் கூட்டம் அதிகமாக இருக்கும். அன்றும் அப்படியே அதிகக் கூட்டமாக இருந்தது. ஆனால் நெல்ஸ்டரி கூட்டத்தில் உள்ள யாரையும் கவனிக்கவில்லை.

திடீரென நெல்ஸ்டரியின் முகம் மலர்ந்தது. செங்கூந்தல் அழகி சாதனங்களை விற்பதில் மிகவும் மும்முரமாக ஈடுபட்டிருந்தாள். அவன் போவதை

யும் வருகைதையும் புன்முறுவல் செய்வதையும் அவள் முகத்தில் விழும் செங்கூந்தலையும் கெஸ்டரி கவனித்த வண்ணமாக இருந்தான். அவள் நடக்கும்போது பூமியை அவளுடைய கால்கள் தொடுகின்றனவா என்பது அவனுக்குச் சந்தேகமாக இருந்தது. அவளைக் கண்குளிரப் பார்த்தான்.

இவ்வளவு கூட்டத்துக்கு இடையே, பரபரப்புக்கு இடையே செங்கூந்தல் அழகி எவ்வளவு நிதானமாகவும் பொறுமையாகவும் தன் அலுவல்களைக் கவனிக்கிறாள்! இப்படிப்பட்டவளால் தான் தன் எதிர்காலம் இன்பமாக இருக்க முடியும் என்று தோன்றியது கெஸ்டரிக்கு.

மற்றவர்களைப்போல் கெஸ்டரி அவசரப்படவில்லை. மௌனமாகச் செங்கூந்தல் அழகியையே கவனித்துக் கொண்டிருந்தான்.

ஆனால் அவள் கெஸ்டரியைக் கவனித்ததாகத் தெரியவில்லை. கடைசியாக இப்போதுதான் முதல் தடவையாக கெஸ்டரியைப் பார்க்கிறாள். இல்லை, இல்லை! கெஸ்டரிக்குப் பின்னால் இருக்கும் யாரையோ அல்லவா பார்க்கிறாள்! "இப்போது சந்தேகமில்லை. அவள் என்னைப் பார்த்து விட்டாள்" என்றது கெஸ்டரியின் மனம்.

கெஸ்டரி அவளைப் பார்த்து மெதுவாகச் சிரித்தான். அவளும் பதிலுக்குச் சிரித்தாள். ஆனால் உடனே அவள் உணர்ச்சியின்றி வேறு அலுவல்களைக் கவனிக்கத் தொடங்கி விட்டாள்.

எனினும் சில நிமிஷங்களுக்கு ஒரு தடவை அவள் கெஸ்டரியைப் பார்க்கத் தவறவில்லை. அவள் ஒருநிமிஷமாக கெஸ்டரியைப் பார்த்தாள் என்பது உண்மையே.

வந்த வேலையைக் கவனித்துக்கொண்டு போகாமல் இந்தப் பைத்தியக்காரன் ஏன் இப்படித் தன்னையே உற்றுப் பார்க்கிறான் என்று அவள் நினைக்கிறாளோ! அப்படியிராது; அப்படி அவள் நினைப்பதாயின், கெஸ்டரிக் கென்று படுக்கைப் பையை எடுத்து வைத்திருப்பாளா! அதை அவனிடம் கொடுத்தபோது சிரித்திருப்பாளா!

செங்கூந்தல் அழகி கெஸ்டரியைப் பார்க்கும் பொழுதெல்லாம் அவன் ஹிருதயத்தில் இதுவரை அவன் அனுபவித்திராத ஒருவித உணர்ச்சி உண்டாயிற்று. சிறிது காலத்துக்கு முன் அவன் ஒரு பெண்ணைக் காதலித்த போது கூட அவனுக்கு இத்தகைய உணர்ச்சி இன்பம் ஏற்பட்டதில்லை!

கடைசியாக கெஸ்டரி தன்னை யறியாமலேயே செங்கூந்தல் அழகிக்கு அருகில் வந்துசேர்ந்தான். அவன் அவளைப் பார்த்தான். அவளும் அவனைப் பார்த்தாள். அவளுடன் என்ன பேசுவது! கெஸ்டரிக்கு ஒன்றும் தெரியவில்லை. கடைசியாக தன் வீட்டுக்குத் தேவையான ஆணிகள் முதலிய சில சாமான்களை வாங்கிக் கொண்டான்.



அந்தச் சாமான்களை அவன் வாங்ுவது செங்கூந்தல் அழகிக்கு விசித்திரமாகத் தோன்றியிருக்க வேண்டும். இல்லாவிட்டால் அவள் ஏன் அவனை அப்படிப் பார்க்கிறாள்!

"இந்தச் சாமான்கள் எல்லாம் எதற்காக வாங்குகிறேன் தெரியுமா! புதிய வீட்டுக்காகத்தான். அந்த வீடு யாருடையது! உன்னுடையதுதான்! வீடு கட்டி முடிந்ததும் அதில் வந்து வாழ்க்கை நடத்தப் போகிறவள் நீதான்" என்று சொல்ல வேண்டும் போலிருந்தது கெஸ்டரிக்கு.

கெஸ்டரி அவளிடம் விடை பெற்றுக் கொண்டபோது அவள் அவனைப் பார்த்துச் சிரித்தாள்.

அது வெறும் சிரிப்பாக இராது. ஒருவேளை கெஸ்டரியின் மனதில் உள்ளதை அவள் அறிந்து கொண்டிருக்கலாம். அதற்குத் தன் சிரிப்பின் மூலமாக அவள் பதில் கூறியுமிருக்கலாம்!

* * *

அன்று மாலை அந்தக் கிராமத்தில் உள்ள மண்டபத்தில் நடனம் நடக்கப் போவதாக அறிவிக்கப்பட்டிருந்தது. கெஸ்டரிக்கு நடனப் பைத்தியம் எதுவும் கிடையாது. எனினும் செங்கூந்தல் அழகி நிச்சயமாக மேற்படி நடனத்தில் கலந்து கொள்வாள் என்பது அவனுக்குத் தெரியும். எனவே அவளைப் பார்க்கச் சந்தர்ப்பம் கிடைக்கும் என்ற ஆர்வத்துடன் அவன் நடன மண்டபத்துக்குச் சென்றான்.

நடனத்துக்கு இளையவர்களான ஆடவர்களும் பெண்களும் ஏராளமாக வந்திருந்தனர். அவர்கள் நடனம் செய்வதை கெஸ்டரி கவனித்துக் கொண்டிருந்தான். அவன்தான் நடனம் ஆடுவதற்குக் கற்றுக்கொண்டதில்லையே!

திடீரென்று கெஸ்டரியின் ஹிருதயத்தில் ஒரு வேதனை உண்டாயிற்று. எந்த செங்கூந்தல் அழகியுடன் தன் எதிர்கால வாழ்க்கையைப் பிணைக்க அவன் உத்தேசித்திருந்தானோ, அந்த அழகி வேறு ஓர் இளைஞனுடன் நடனம் செய்து கொண்டிருந்தாள். அவர்கள் இருவரும் ஆலிங்கனம் செய்து கொண்டு நடனம் செய்தது, கெஸ்டரியின் ஹிருதயத்தை இறுக்குவது போலிருந்தது!

அந்த நடனம் முடிந்ததும் செங்கூந்தல் அழகியும் அந்த இளைஞனும் உலாவுவதற்காகக் கை கோத்துக் கொண்டு வெளியே சென்றார்கள். கெஸ்டரியும் அவர்களைப் பின் தொடர்ந்து சென்று கொண்டிருந்தான்.

கெஸ்டரிக்கு ஒன்றுமே புரியவில்லை. அவள் அங்கு வந்திருக்கும்போது செங்கூந்தல் அழகி ஏன் வேறொரு இளைஞனுடன் செல்லுகிருள்! அவன் ஏற்கெனவே அவளிடம் தன் மன நிலையை விளக்கிக் கூறவில்லை என்பது உண்மைதான்.

இரண்டாவது தடவை அவன் ஸ்டோருக்குச் சென்றது எதற்காக! செங்கூந்தல் அழகியைத் தன் வீட்டுக்கு அழைத்துச் செல்வதற்காகத்தான். அதை அவள் தெரிந்து கொண்டிருக்க வேண்டும். அப்படியிருந்தும் அவள் ஏன் இந்த இளைஞனுடன் உல்லாசமாகச் சிரித்துக் கொண்டு செல்லுகிருள்!

"சிறிது நேரம் இங்கேயே இரு. என் காக்கை இனிமையாக்கிக் கொண்டு வருகிறேன்" என்று, அதாவது குடித்துவிட்டுத் திரும்பி வருவதாக அந்த இளைஞன் செங்கூந்தல் அழகியிடம் கூறியது கெஸ்டரிக்குக் கேட்காமலில்லை.

செங்கூந்தல் அழகியைத் தனியாகச் சந்திக்கும் அரிய சந்தர்ப்பம் கெஸ்டரிக்கு இப்போது கிடைத்தது. அவன் உடனே அவள் அருகில் போய் உட்கார்ந்து கொண்டான்

திடீரென்று ஒருவன் தன் அருகில் வந்து உட்கார்ந்ததைக் கண்டதும் அவள் திடுக்கிட்டாள். அவனையே உற்றுப் பார்த்தாள்.

கெஸ்டரியின் கண்கள் கோவைப் பழம்போல் சிவந்திருந்தன. அவன் அவளுடைய கையைப் பிடித்தபோது அவன் கை கொதித்தது.

அவளுக்காகவே தான் வீடு கட்டியிருப்பதாயும் இனிமேல் தன்னுடைய எதிர்கால வாழ்க்கை அவளையே பொறுத்திருக்கிறது என்றும் கெஸ்டரி என்னவெல்லாமோ உளறிக் கொட்டினன்.

அவன் இரண்டு தடவை ஸ்டோருக்கு வந்து விசித்திரமாக நடந்து கொண்டது அப்போது செங்கூந்தல் அழகிக்கு ஞாபகம் வந்தது.

அவன் அவளை அணைத்துக் கொள்ள முயற்சித்த போது அவள் வீறிட்டுக் கத்தினள். உடனே தட தடவென்று காலடிச் சப்தம் கேட்கவே கெஸ்டரி ஓட்டம் பிடித்தான்.

அவன் திரும்பிப் பார்க்கவேயில்லை.

கெஸ்டரி அரைகுறையாகக் கட்டி முடிந்துள்ள தன் வீட்டுக்கு வந்து சேர்ந்தான். வீட்டைச் சுற்றிலும் மரத் தூள்களும் துண்டங்களும் கிடந்தன. பனி கடுமையாக இருந்ததால் குளிருக்குப் பாதுகாப்பாக அடுப்பை மூட்டித் தன் அறைக்குள் வைத்துக் கொண்டான். படுக்கைப் பையில் படுத்து அதன் பலமான இரும்புக் கொக்கிகளை மாட்டி அதை இழுத்துமூடிக் கொண்டான்.

அவனுக்குத் தூக்கமே வரவில்லை. எப்படித் தூக்கம் வரும்! கண்களை மூடிக்கொண்டான்.

ஜன்னல் வழியாகக் காற்று அடித்தது. அடுப்பிலிருந்து ஒரு பொறி, இரு பொறிகள், பல பொறிகள் எங்கும் தெறித்தன. மரத்தூள்கள் பற்றிக் கொண்டன; கட்டைகள் எரியத் தொடங்கின.

வெளியில் இவ்வளவு பனியாக இருந்தும் தன் வீட்டுக்குள் உஷ்ணமாக இருப்பது, கண்களை மூடிக்கொண்டு படுத்திருந்த கெஸ்டரிக்கு மிகுந்த திருப்தியைக் கொடுத்தது!

கெஸ்டரியின் செங்கூந்தல் அழகியை ஓர் இளைஞன் அபகரித்து விட்டான். ஆனல் கெஸ்டரியின் வீட்டை யாரும் அபகரிக்க முடியாது!

கெஸ்டரியின் தேகத்துக்கு இதமாக இருந்த உஷ்ணம் இப்போது அவன் தேகத்துக்கு ஏன் வேதனையைக் கொடுக்கிறது! "இது வீண் பிரமை!" என்று எண்ணினன் கெஸ்டரி.

அவனை அறியாமல் கண்கள் திறந்தன. அவன் கண்களுக்கு எங்கு பார்த்தாலும் ஸ்டோர் அழகியின் செங்கூந்தல்களே தெரிந்தன!

தனக்கும் தன் வீட்டுக்கும் என்ன நேர்ந்திருக்கிறது என்பதை கெஸ்டரி அறிந்து கொள்ளவே சில வினாடிகளாயின. வீடும் படுக்கைப் பையும் தீப்பிடித்துக் கொண்டதை உணர்ந்தான்.

அழகியின் செங்கூந்தல்கள் தன் கன்னத்திலும் முகத்திலும் விழும்காலம் எப்போது வரும் என்று ஏங்கிக் கொண்டிருந்த கெஸ்டரியை இப்போது அவளுடைய கூந்தலின் நிறத்தைப்போன்ற ஜ்வாலைகள் தழுவிக் கொண்டிருந்தன!

மனப்பிரமை தெளிந்து கெஸ்டரி படுக்கைப் பையைப் பிரிக்க முயன்றான்; முடியவில்லை. அதைக் கிழிக்க முயற்சித்தான்; அதுவும் முடியவில்லை. அவன் பரபரப்புடன் இழுத்ததால் படுக்கைப்பையின் பற்கள் ஒன்றையொன்று உறுதியாகக் கவ்விக் கொண்டன. இனி அது எரிந்து சாம்பலாகுமேதவிர, அதை யாராலும் பிரிக்க முடியாது!

செங்கூந்தல் அழகி தன் கழுத்தை நெறிப்பது போல் கெஸ்டரிக்குத் தோன்றியது. 'அவள் ஏன் என் கழுத்தை நெறிக்கிருள்!' என்று ஆச்சரியப் பட்டான் கெஸ்டரி!

அவன் தலை சுழன்றது. உலகம் சுழன்றது. அத்துடன் படுக்கைப் பையும் செங்கூந்தல் அழகியும் அந்த அழகியைத் தழுவிக் கொண்டிருந்த இளைஞனும் சுழன்று சுழன்று வந்தார்கள்!


ஹிமாலயா
புக்கே
டாய்லட், டால்கம் பௌடர்களின்
இனிமையான நறுமணத்தை
நீங்களும் விரும்புவீர்கள்
Himalaya Bouquet
Himalaya Bouquet
இரண்டு
நேர்த்தியான
இராஸ்மிக்
தயாரிப்புகள்
HBP. 5-X30 TM



22. 'எங்கே அவள்?'

பொழுது விடிந்து விட்டதற்கு அடையாளமாகச் சூரியனின் இளங்கதிர் பட்டுக் கீழ்வானில் இருள் கலைந்து ஒளி பரவ ஆரம்பித்தது. டாக்டர் பரசுராமன் முன்னே செல்ல அவரைத் தொடர்ந்து வேதாவும் பொன்னியும் சென்று கொண்டிருந்தனர். ராஜாளி மடத்திற்குச் சமீபமாகவுள்ள பெரிய தோப்பினிடையே அவர்கள் வந்து கொண்டிருந்தபொழுது ஏதோ சப்தம் கேட்கவே, அவர்கள் மூவரும் சட்டென்று நின்று பரபரப்போடு நாற் புறமும் பார்த்தனர். கலகலவென்று ஒரு சிரிப்பொலி கேட்டது. ஒரு பெரிய மரத்தடியில் மருதப்பன் நின்றுகொண்டு, "என்ன அப்படி விழிக்கிறீங்க! ஏதோ பேயோ பிசாசோன்னு...! இல்லே, நான்தான் மருதப்பன். பொன்னிக் குட்டிக்குச் சொந்த அத்தான்..." என்றான். அவனுக்குப் பக்கத்தில் மரத்தடியில் திறந்தபடி ஒரு பெரிய பெட்டி கிடந்தது. அந்தப் பெட்டியில் சில நுணிகளும் சில வெள்ளிப் பாத்திரங்களும் இருந்தன.

பொன்னி அவனை நெருங்கிப் பதை பதைப்போடு, "இதென்ன அத்தான்!" என்று கேட்டாள்.

"இதுவா...! இந்தப் பெட்டியை யாரோ கொள்ளையடித்துக் கொண்டு வந்தாங்க. அதை நான் வழிப்பறி செய்து விட்டேன். அவ்வளவு தான்!" என்றான் சிரித்துக் கொண்டே.

"கொள்ளையடித்துக் கொண்டு வந்தவர்களிடமிருந்து வழிப்பறி செய்தீர்களா! கதை எனக்குப் புரியவில்லையே!" என்றாள் பொன்னி திகைப்போடு.

"கதை சொன்னால்தானே புரியும்! பொன்னி, இருந்தாலும் நீ இவ்வளவு பதட்டப்படக் கூடாது. டாக்டர் ஐயா, நீங்களே சொல்லுங்கள். இவ்வளவு பதட்டமுள்ள பெண்ணை நான் கல்யாணம் செய்து கொண்டு எப்படிக் குடித்தனம் நடத்துகிறது!" என்றான் மருதப்பன் ஒரு பெருமூச்சு விட்டுக் கொண்டே.

"அத்தான்! இப்போதுதானா உங்களுக்கு விளையாட்டெல்லாம்! முதலில் இந்தப் பெட்டி ஏது, சொல்லுங்கள்!"

"அடடே! சொல்ல மாட்டேனா! இந்தப் பெட்டியை நான் எங்கேயிருந்தும் கொள்ளையடித்துக் கொண்டு வந்துவிடவில்லை. கொள்ளையடித்துக் கொண்டு வந்தவர்களிடமிருந்து அடித்துப் பிடுங்கிப் பத்திரமாக வைத்திருக்கிறேன். அவ்வளவுதான் கதை" என்றான் எல்லாவற்றையும் தெளிவாக்கி விட்டவன் போல்.

டாக்டர் ஒன்றும் விளங்காதவராக மருதப்பனையும் பொன்னியையும் மாறி மாறிப் பார்த்தார்.

பொன்னி பொறுமை இழந்து விட்டாள். "இதென்ன, அத்தான் விளையாட்டு! எதையும் கொஞ்சம் விளங்கும்படியாகத்தான் சொல்லுங்களேன்! இந்தப் பெட்டியை யார் எங்கேயிருந்து கொள்ளையடித்துக் கொண்டு வந்தார்கள்...!" என்று கேட்டாள் துடிப்போடு.

"பார்த்தியா, மறுபடியும் பதட்டம்! உன்னோடு நான் எப்படிக் குடித்தனம் நடத்தப் போகிறேனோ...! அது போகட்டும். உனக்காக அந்தக் கட்டிடத்துக் கொல்லைப் புறத்திலே வந்து இரவு முழுவதும் காத்திருந்தேன். 'என்னடா, ஒருவன் வந்து நமக்காகக் காத்துக் கொண்டு இருப்பானே!' என்று உனக்குத் தோன்றியதா! சீழ்க்கை அடித்து அடித்து என் நாக்கு உலர்ந்து போய் விட்டது. உனக்குத் தயவு பிறக்கவில்லை; மனசு இரங்கவில்லை. அன்பு, பாசம், எல்லாம் கதையாய்ப் போய்விட்டது...!" என்று சொல்லிப் பெருமூச்சு விட்டான் மருதப்பன்.

"போதும், அத்தான்! இன்னொரு ஆண்பிள்ளை இருக்கும்போது எப்படிப் பேசணும் என்று உங்களுக்குத் தெரியவில்லையே!" என்றாள் ரோசத்தோடும் வெட்கத்தோடும் பொன்னி.

"இன்னொரு பெண்பிள்ளை இருக்கும் போது புருசனாக வரப் போகிறவனுடன் எப்படிப் பேசணும் என்று உனக்குத் தெரியவில்லையே!" என்றான் மருதப்பன்.

"அதெல்லாம் இருக்கட்டும். இந்தப் பெட்டி சமாசாரம் என்ன! இது ஏது! விவரமாகச் சொல்லு" என்றார் டாக்டர் சிரித்துக்கொண்டே.

"இதுவா...! நான் இந்த ராஜாளி மடத்துக்குப் பின்புறத்துக் கொல்லையிலே பொன்னியை எதிர்பார்த்துக் காத்துக் கிடக்கும்போது அந்த வேலைக்காரி பூதம் இருக்கிறது, பாருங்கள்! அது இந்தப் பெட்டியைத் தூக்கிக்கொண்டு கொல்லை வழியாக அதிவேகமாகப் போயிற்று. அதை அப்படியே வழி மறித்து..." என்று மருதப்பன் சொல்லிக் கொண்டு வரும்போது பொன்னி இடை மறித்து "யார், செங்கம்மாவா!" என்று கேட்டாள்.

"ஆமாம், அந்த அம்மாதான். நான் அவளை அவ்வளவு சுலபமாகத் தப்பிப் போக விட்டு விடுவேனா! அவள் பதுங்கிப் பதுங்கி வருவதைப் பார்த்தவுடனே இவள் அகப்பட்ட வரையில் சுருட்டிக் கொண்டு ஓடிப்போகப் பார்க்கிறாள் என்பதைத் தெரிந்து கொண்டு விட்டேன்!"

"ஹூம்! அப்புறம்!" என்று கேட்டாள் பொன்னி துடி துடிப்போடு.

"நான் யார்! மருதப்பனல்லவா! சும்மா விட்டு விடுவேனா? அப்படியே எதிரே போய் வழியை மறித்துக் கொண்டேன். அவள் அப்படியே பேயைக் கண்டது போல் திகைத்து நின்று விட்டாள். 'பெட்டியைக் கீழே வை' என்றேன். 'மாட்டேன்' என்றாள். அப்படியே கன்னத்திலே ஒரு அடி கொடுத்துக் கையிலே இருந்த பெட்டியைப் பிடுங்கிக் கொண்டேன்!"

"அவள் ஓடிப்போய் விட்டாளா!"

"ஓடிப் போயிருந்தால்தான் தேவலையே! கையிலே ஒரு கத்தியை எடுத்து ஓங்கி 'என்னைக் கொன்று விடுவேன்' என்றாள். இதற்கெல்லாம் நானா அசைவேன்! அவளுக்குப் பணிந்து போகிறது போலவே நடித்து அவள் கையிலே இருந்த கத்தியை வெடுக்கென்று பிடுங்கிக் கொண்டேன். அவளை அந்தக் கத்தியைக் காட்டியே மிரட்டி மாட்டுக் கொட்டடியிலிருந்த தூணில் பிணைத்துக் கட்டி விட்டு இந்தப் பெட்டியை எடுத்துக் கொண்டு வந்து விட்டேன். இந்தத் தோப்பிலே வந்து இந்தப் பெட்டியிலே என்ன இருக்கிறது என்று சோதனை செய்து பார்த்துக் கொண்டிருக்கும் போதுதான் நீங்களும் வந்தீர்கள். அவளை எப்படியாவது போலீசிலே ஒப்படைத்துவிட வேண்டும் என்று தான் தூணோடு தூணாகக் கட்டிப் போட்டிருக்கிறேன். இந்தப் பெட்டியைப் பாருங்கள்! எத்தனை நகை! எத்தனை பட்டுச் சேலை! எத்தனை பணம்! அவள் பலே கொள்ளைக்காரியாக இருப்பாள்போலிருக்கிறது!" என்று சொல்லி டாக்டரை ஆச்சர்யத்தோடு பார்த்தான்.

"ஆமாம், நானும் அப்படித்தான் நினைத்தேன். சரி! இந்தப் பெட்டியை மூடி எடுத்துக் கொள். வீட்டிலே போய்ச் சோதனை செய்து கொள்ளலாம்" என்றார் டாக்டர்.

மருதப்பன் அந்தப் பெட்டியிலிருந்து எடுத்த சாமான்களை யெல்லாம் மறுபடியும் சீராக எடுத்து வைத்துப் பெட்டியை மூடி எடுத்துக்கொண்டான்.

டாக்டர் ஏதோ ஆழ்ந்த யோசனையோடு நடந்தார். வேதாவிற்கு எல்லாம் வியப்பாகவே யிருந்தது. முதல் நாள் இரவு அவளுக்குத் தகப்பன் என்று சொல்லிக் கொண்டு ஒருவர் வந்தது, அவர் தன்னைப் பம்பாய்க்கோ கல்கத்தாவுக்கோ அழைத்துக் கொண்டு போகப் போவதாகச் சொன்னது, டாக்டர் வந்தது, அவரிடம் மரகதம் அவளை ஒப்படைத்தது, செங்கம்மா பெட்டியை எடுத்துக் கொண்டு கொல்லைப்புறமாக ஓட யத்தனித்தது, மருதப்பன் அவளை வழிமறித்துப் பெட்டியைப் பிடுங்கிக் கொண்டு அவளை மாட்டுக் கொட்டிலில் தூணோடு கட்டி விட்டு வந்தது எல்லாம் அவளுக்கு வியப்பிற்கு மேல் வியப்பை அளிக்கக்கூடிய விஷயங்களாக இருந்தன. அவளுக்குத் தெரியாமல் ஜாஜாளிமடத்தில் ஏதேதோ நடந்திருக்க வேண்டுமென்று தோன்றியது. என்ன நடந்தது! டாக்டர் அந்த நிசி வேளையில் அங்கு எப்படி வந்தார்! மரகதத்தின் மனது திடீரென்று ஏன் இப்படி மாறியது? ஒன்றும் அவளுக்குத் தெளிவாக வில்லை. ஒவ்வொன்றும் அவிழ்க்க முடியாத சிக்கலாக இருந்தன. இதெல்லாம் பொன்னிக்குக் கட்டாயம் தெரிந்திருக்க வேண்டும். டாக்டருக்கும் தெரிந்துதா னிருக்கவேண்டும். எல்லாவற்றையும் டாக்டர் சொல்லுவா ரென்று மரகதம் சொல்லியிருக்கிறாளல்லவா! பொறுத்துப் பார்ப்போம் என்று தன்னைத் தானே சமாதானப் படுத்திக் கொண்டு நடந்தாள். மருதப்பன், தான் செங்கம்மாவைப் பிடித்து சாமர்த்தியமாகக் கட்டி விட்டதையும், அவளை எப்படியாவது போலீஸ்காரர்களிடம் ஒப்படைத்துவிட வேண்டும் என்பதையும் திரும்பத் திரும்பச் சொல்லிக்கொண்டே வந்தான். பொன்னி அளவிற்கு மீறிய ஆனந்தத்தோடு மருதப்பனை இடை யிடையே பரிகாசம் செய்து கொண்டு வந்தாள். டாக்டர் அவர்களை எல்லாம் தன்னுடைய வீட்டுக்கு அழைத்துக் கொண்டுவந்து சேர்ந்த பொழுது நன்றாக விடிந்து விட்டது. இரவு முழுவதும் கண் விழித்ததில் அவர் மிகவும் களைப்படைந்திருந்தாலும் தலைக்கு மேலே அவசியமாகவும் அவசரமாகவும் கவனிக்க வேண்டிய வேலைகள் இருந்தன.

டாக்டர் மருதப்பன் கொண்டுவந்திருந்த பெட்டியை முதலில் சோதனை போட ஆரம்பித்தார். அந்தப் பெட்டியில் சில தங்க நகைகளும் வைர நகைகளும் இருந்தன. அவைகளை யெல்லாம் எடுத்து வேதாவிடமும் பொன்னியிடமும் காட்டி, "இதெல்லாம் யாருடையது! உங்களுக்குத் தெரியுமா!" என்று கேட்டார்.

வேதா அந்த நகைகளை அதற்குமுன் பார்த்ததே இல்லை. ஒரு வேளை அவைகளெல்லாம் அவளுடைய பெரியம்மா மரகதம் வைத்திருந்தவைகளாய் இருக்கலாம் என்று அவளுக்குத் தோன்றியது. ஆனால் அதை எப்படி உறுதியாகச் சொல்ல முடியும்! ஆகவே, "எனக்குத் தெரியாது" என்றாள்.

"யாருடையது! அந்த வேலைக்காரி எங்கேயிருந்தாவது கொண்டு வந்தாளோ! எல்லாம் எஜமானி அம்மாள் வைத்திருந்ததாகத் தானிருக்கும்..." என்றாள் பொன்னி.

"அப்படித்தான் நானும் நினைக்கிறேன்" என்று டாக்டர் சொல்லிக் கொண்டே பெட்டியிலிருந்த சாமான்களை ஒவ்வொன்றாக எடுத்து வைத்தார். விலை மதிப்புள்ள இரண்டு மூன்று பட்டுச் சேலைகள் இருந்தன. இவற்றைத் தவிர அதில் ஒரு பழைய புகைப் படமும் இருந்தது.



அதைப் பார்த்ததும் டாக்டரின் முகத்தில் ஒரு திகைப்பு ஏற்பட்டது. "இது யார் அது...!" என்றார் ஆச்சர்யத்துடன் அந்தப் படத்தைப் பொன்னியிடமும் வேதாவிடமும் காட்டி. அவர்கள் இருவரும் அந்தப் படத்தைவிடப் போடு பார்த்து விட்டு ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்துத் திகைத்து நின்றனர்.

ஆடம்பரமாக உடையணிந்திருக்கும் ஒரு வாலிபர். அவருக்குப் பக்கத்தில் அவருடைய அழகிற்கும் வயதிற்கும் பொருத்

தமாயுள்ள ஒரு மங்கை. அந்தப் புகைப் படத்திலிருந்து அவர்களைத் திகைப்படைய வைத்த இரண்டு உருவங்கள் இவைதான். அந்தப் புகைப் படத்தில் காணப்படும் வாலிபர் யாரோ! அவருடைய அலங்கார உடைகளிலிருந்து அவர் ஒரு ஜமீன்தார் என்பது எளிதில் விளங்கியது. அவருக்குப் பக்கத்தில் ஏராளமான ஆபரணங்களை அணிந்து கொண்டு நிற்கும் பெண் ராஜாளி மடத்தில் வேலைக்காரியாக இருந்த செங்கம்மாதான் என்பது முக ஜாடையிலிருந்து தெளிவாக விளங்கியது. அது பல வருடங்களுக்கு முன்பு எடுக்கப்பட்ட புகைப்படமானதால் மங்கலாக இருந்தது. இருப்பினும் செங்கம்மா மங்கைப் பருவத்தில் எவ்வளவு சிறந்த அழகோடு விளங்கினாள் என்பது நன்கு விளங்கியது.

டாக்டர் அந்தப் படத்தைக் கையில் வைத்துக் கொண்டு பொன்னியைப் பார்த்து, "இது யாரென்று விளங்கி விட்டதா! இப்படி ஒரு காலத்தில் வாழ்ந்தவளிடம் இப்படிப்பட்ட நகைகளும் புடவைகளும் இருந்தால் அதில் சந்தேகப்பட என்ன இருக்கிறது!" என்றார்.

"அது சரி! ஆனால் இப்படிப் பட்டவள் ஏன் ஓரிடத்திற்கு வேலை செய்து ஜீவிக்க வரணும்!" என்றாள் பொன்னி.

"அதில் ஏதோ காரணம் இருக்க வேண்டும். எல்லாவற்றிற்கும் நாம் இந்தப் பெட்டியைப் போலீஸில் ஒப்படைத்து விடுவதுதான் நல்லது" என்றார் டாக்டர்.


"உங்களுக்கு எது சரியாகப்படுகிறதோ, அதைச் செய்யுங்கள். எங்கள் அத்தானைக் கஷ்டத்திலே கொண்டு விட்டுவிடாதீர்கள்" என்றாள் பொன்னி.

"அப்படிச் செய்வேனா! ஆனால் எல்லா உண்மைகளையும் போலீஸிடம் சொல்லியாக வேண்டுமே என்றுதான் சங்கடமாய் இருக்கிறது. அதுவும் உன் எஜமானி மரகதத்திற்கு ஏற்படக்கூடிய நிலைமையை நினைத்தால் எனக்கு மிகவும் திகிலாய் இருக்கிறது!" என்றார் டாக்டர் யோசித்த வண்ணம்.

"இதனால் பெரியம்மாவுக்கு என்ன வந்துவிடப் போகிறது!" என்றாள் வேதா.

வேதாவிற்கு ராஜாளி மடத்தில் நடந்தவை அவ்வளவும் தெரியாது என்பதை அப்பொழுதுதான் உணர்ந்தார் டாக்டர். அவளெதிரில் சிந்திக்காமல் எதையோ சொல்லி விட்டோமே என்பதை எண்ணி ஜாக்கிரதையானார். வேதாவிற்கு ராஜாளி மடத்தில் நடந்த கோரமான சம்பவம் தெரியாமல் இருப்பதே நல்லதென்று அவருக்குப் பட்டது. அப்படித் தெரிந்தாலும் சில நாட்கள் சென்ற பின் தெரிந்தால் அவள் மனதிற்கு அதிர்ச்சி ஏற்படாமலிருக்கும் என்று எண்ணினார். "உன் பெரியம்மாவிற்கு எவ்வித ஆபத்தும் வருமென்று நான் நினைக்கவில்லை. இருந்தாலும் செங்கம்மாவை வேலைக்கு வைத்துக் கொண்டதனுக்கு உன் பெரியம்மாவும் குற்றவாளியாகக் கருதப்பட்டால்......! இருக்கட்டும், அதை நான் பார்த்துக் கொள்கிறேன்" என்று சொல்லிவிட்டு அந்தப் பெட்டியில் எல்லா சாமான்களையும் முன் போலவே எடுத்துப் போட்டு மூடி, மருதப்பனை எடுத்துக் கொண்டு வரும்படி சொல்லி விட்டுப் போலீஸ் ஸ்டேஷனை நோக்கிப் புறப்பட்டார்.

சில நிமிஷ நேரத்தில் டாக்டர் பரசுராமனும் மருதப்பனும் போலீஸ் ஸ்டேஷனை அடைந்தனர்.



காலை வேளையில் பெரிய பெட்டியுடன் ஒருவன் பின் தொடர டாக்டர் அங்கு வந்தது போலீஸ் இன்ஸ்பெக்டருக்கு வியப்பை அளித்தது. இருப்பினும் அவர் அதைக் காட்டிக் கொள்ளாமல் ஆசனத்தை விட்டு எழுந்து டாக்டரை வரவேற்றார். "என்ன, இந்த வேளையில் நீங்கள் இங்கே வந்தது! ஏதாவது திருட்டுக் கேஸா, என்ன!" என்று விசாரித்தார்.

"இல்லை. அதைவிடப் பெரிய கேஸ்" என்றார் டாக்டர்.

"சரிதான். குற்றவாளியைக் கூடக் கையும் களவுமாகப் பிடித்துக்கொண்டு வந்து விட்டீர்கள் போலிருக்கிறது. எங்களுக்கு அதிக சிரமம் கொடுக்கக் கூடாதென்று......" என்றார் இன்ஸ்பெக்டர் மருதப்பனைப் பார்த்துக் கொண்டே.

"அப்படியெல்லாம் இல்லை. அவசரப்படாதீர்கள். சொக்கிக் குளத்தில் ராஜாளி மடம் என்று ஒரு பெரிய கட்டிடம் இருக்கிறதே, உங்களுக்குத் தெரியுமா!" என்றார் டாக்டர்.

"தெரியும். அங்கு வேலைக்காரியாக இருக்கும் ஒரு ஸ்திரீயைக்கூட ஏதோ எனக்குச் சந்தேகம் ஏற்பட்டதின் பேரில் கண்காணித்துக் கொண்டு வரும்படி உத்தரவிட்டிருக்கிறேன்" என்றார் இன்ஸ்பெக்டர்.

"அப்படி என்றால் அவளை உங்களுக்கு முன்னதாகவே தெரியும் போலிருக்கிறதே!" என்றார் டாக்டர்.

"நான் ஏதோ சந்தேகப்படுகிறேனே தவிர, மற்றப்படி அவனைப்பற்றிப் பூரணமாக எனக்கு ஒன்றும் தெரியாது. ஏன்! நீங்கள் கொண்டு வந்திருக்கும் கேஸ் அவனைப் பற்றியதுதானே!"

"அவனைப்பற்றியும் உண்டு......அதிருக்கட்டும். முதலில் இந்தப் பெட்டியைத் திறந்து சோதியுங்கள். இதில் ஒரு புகைப் படம் இருக்கிறது. அதிலிருந்து உங்களுக்கு அவனைப்பற்றி ஏதேனும் இன்னும் நிச்சயமாகத் தெரியலாம்" என்றார்.

இன்ஸ்பெக்டர் பெட்டியைத் தூக்கி மேஜை மீது வைக்கும்படி மருதப்பனுக்குக் கட்டளையிட்டு விட்டு அதைத் திறந்து அதிலிருந்த புகைப் படத்தை எடுத்து உற்றுப் பார்த்தார். உடனே துடிப்புடன், "இவன்தானா! என்னுடைய சந்தேகமும் சரிதான். எங்கே அவன்! எங்காவது ஓடிவிட்டானா!" என்று ஆசனத்தில் உட்காராமலே துள்ளிக் குதித்தார்.

* * *

டாக்டர் பரசுராமன் பதட்டமடைந்த சப் இன்ஸ்பெக்டரைச் சமாதானப்படுத்தி ஆசனத்தில் அமரச் செய்து "அவன் எங்கும் ஓடி விடவில்லை. இருக்கிறான். அவனை ஓடிவிடாமல் தூணோடு தூணாகக் கட்டி வைத்துவிட்டு வந்திருக்கிறான் இவன்" என்று மருதப்பனைக்காட்டிவிட்டு, "உங்களிடம் இன்னும் சில விஷயங்கள் சொல்லவேண்டியிருக்கிறது. நீங்கள் தயவுசெய்து அந்த வேலைக்காரி யாரென்று எங்களுக்குத் தெரிவிக்க முடியுமா!" என்று கேட்டார்.

"உங்களிடம் தெரிவிப்பதில் எனக்கு யாதொரு ஆட்சேபமும் இல்லை. இந்தப் படத்திலுள்ள மனிதரை உங்களுக்குத் தெரியுமோ!" என்று டாக்டரிடம் அந்தப் புகைப்படத்தைக் காட்டிக் கேட்டார் இன்ஸ்பெக்டர்.

"எனக்குத் தெரியாது. ஆனால் மிகவும் பணக்கார மனிதராகத் தோன்றுகிறது......"

"ஆமாம். இவர் பூங்குளம் ஜமீன்தார் சொக்கப்ப உடையார்" என்றார் சப் இன்ஸ்பெக்டர்.

"பூங்குளம் ஜமீன்தாரா...! அப்படி யென்றால் செங்கம்மா அவருடைய மனைவியா!" என்றார் டாக்டர் ஆச்சர்யத்துடன்.

"இவள் அவருடைய மனைவி இல்லை. அவருடைய பிரியத்துக்குப் பாத்திரமானவள். இவள் பெயர் செங்கம்மா இல்லை..." என்றார் பதட்டப் படாமல் சப் இன்ஸ்பெக்டர்.

"செங்கம்மா இல்லையா! அப்படி யென்றால் பெயரை மாற்றிவைத்துக் கொண்டிருக்கிறாளா!"

"கொலைக்குற்றம் செய்தவள் உலகத்தில் போலீஸார் கண்ணிலிருந்து தப்பித்து வாழவேண்டுமென்றால் பெயரை மாற்றிக் கொள்வார்கள், உருவை மாற்றிக் கொள்வார்கள், தொழிலை மாற்றிக் கொள்வார்கள், எல்லாம் செய்வார்கள். இவளுடைய பெயர் செங்கம்மா யில்லை. ராஜேஸ்வரி......"

"அப்படியா...! இவள் கொலைக்குற்றம் செய்தவளா!" என்றார் டாக்டர் வியப்போடு.

"பார்த்தாலே தெரியவில்லையா! ஒரு கொலை இல்லை; ஒரே சமயத்தில் ஒன்பது கொலை கூடச் செய்வாள். என்னைக் கூடக் கத்தியால் குத்த வந்தாளே!" என்றான் மருதப்பன். (தொடரும்)

ஆரோக்கிய ரகசியம்

13. சந்தேக விளக்கம்

கேள்வி: தினமும் எத்தனை மணி நேரம் தூங்க வேண்டும். நான் இரவு பகல் மாறி மாறி வேலைக்குச் செல்பவன்; இரவு பத்து மணிக்குத் தூங்கப் போகிறேன். அதிகாலை மூன்றரை மணிக்கு எழுந்து உடனே ஆசனம் செய்யலாமா!

பதில்: தூக்கம், அவரவர்களின் வயதையும் வேலையையும் பொருத்திருக்கின்றன. சிறுவர்கள் தினம் பத்து மணி நேரம் தூங்க வேண்டும். வாலிபர்கள் எட்டு மணி நேரம் தூங்கலாம். நாற்பது வயதிற்கு மேலானவர்களுக்கு ஆறு, ஏழு மணி நேரத் தூக்கம் போதும். அறுபது எழுபதிற்கு மேல் வயதானவர்களுக்கு இரவில் எட்டு மணி நேரத் தூக்கமும் பகலில் ஓரிரண்டு மணி நேரமும் தூங்க வேண்டும்.

இரவு வேலை செய்பவர்கள் மாலையில் ஆசனம் செய்து விட்டு வேலைக்குப் போகலாம். அதிகாலையில் எழுந்து வேலைக்குப் போகிறவர்கள், வேலையை முடித்து வந்து மாலை ஆறு அல்லது ஏழு மணிக்கு ஆசனம் செய்யலாம். சாதாரணமாய்க் காலை ஒன்பது பத்து மணிக்கு வேலைக்குப் போகிறவர்கள், காலை நேரத்தில் ஆறு ஏழு மணிக்கு ஆசனம் செய்து வரலாம்.

இரவு பத்து மணிக்குப் படுத்துக் காலையில் மூன்றரை மணிக்கு எழுந்து ஆசனம் செய்யக் கூடாது. நரம்புகளுக்குப் போதிய ஓய்வு கிடைத்திருக்காது. தூக்கமும் போதாது. காலை ஆறு மணிக்கு எழுந்து ஆசனம் செய்யலாம். அப்படி அதிகாலை வேலைக்குப் போக வேண்டுமானால், எங்கும் எட்டு ஒன்பது மணி நேரத்தை விட அதிக வேலை கிடையாது. காலை ஐந்து ஆறு மணிக்குப் போனால், இரண்டு மூன்று மணிக்கு சுமாருக்குத் திரும்பிவிடலாமல்லவா! அதன் பின், மாலை ஆறு ஏழு மணிவரை ஏதாவது காரியத்தைக் கவனித்து விட்டுப் பிறகு ஆசனத்தை ஒரு மணி நேரம் வரை செய்யலாம். பிறகு சாப்பிட்டுப் படுக்கலாமே! எல்லாம் அவரவர்கள் வேலை நேரத்தை அனுசரித்துத் திட்டம் போட்டுக் கொள்ள வேண்டும். ஆனால் ஒன்று, வயிறு மட்டும் ஆசனம் செய்யும் போது காலியாய் இருக்க வேண்டும். அதை மட்டும் பார்த்துக் கொண்டால் போதும்.

கேள்வி: இரவு பகல் மாறி மாறி வேலை செய்பவர்கள் இரவில் நன்றாய்த் தூங்கும் பாக்கியசாலிகளைப் போல ஆரோக்கியமாய் இருக்க முடியுமா!

பதில்: ஒரு ஒழுங்காய்க் குறிப்பிட்ட நேரத்தில் தூங்குவதுதான் ஆரோக்கியத்துக்கு நல்லது. அது இரவில் அமைவது நல்லதுதான். ஆனால் வருஷத்தில் ஆறு மாதம் ஒரே சூரிய வெளிச்சமாய் இருக்கும் பிரதேசங்களிலுள்ள மக்களும், தூங்கத்தான் செய்கிறார்கள். ஒரே வெளிச்சமாய் இருக்கிறதே என்று விழித்துக் கொண்டிருப்பதில்லை. அவர்களெல்லாம் கடிகார மணிப்படி வேலை செய்கிறார்கள். இரவு ஒன்பது மணி ஆனதும் தூங்கச் சென்று விடுகின்றார்கள். மற்றும் ஒரு நாளில் பதினெட்டு இருபது மணி நேரமும் பகலாய் இருக்கும் தேசத்திலுள்ள மக்களும் அவ்வாறே செய்கின்றனர். இரவு ஒன்பது மணி ஆகி விட்டிருக்கும். ஆனால் சூரியன் அப்பொழுதும் தெரியலாம். காலையில் சூரியன் மூன்று மணிக்கே மறுபடி உதித்து விடுவான். சூரியன் ஒன்பது மணி வரை இருக்கிறதே என்று மக்கள் தூங்காமல் இருப்பதில்லை. அதிகாலையில் சூரியன் மூன்று மணிக்கே மறுபடி உதித்து விட்டதென்று எழுந்திருப்பதுமில்லை. எட்டு ஒன்பது மணி நேர தூக்கத்துக்குப் பின்தான் எழுந்திருப்பார்கள். எனவே, தூக்கத்திற்கு இரவுதான் வேண்டுமென்பதில்லை. எப்படி நாம் பழக்கப் படுத்திக் கொள்கிறோமோ அப்படி நமக்குப் பழக்கமாய் விடுகிறது. நமது நாட்டில் எல்லோரும் இரவில்தான் தூங்குவது வழக்கம். அதற்கு மாறாக இரவில் விழித்திருப்பதென்றால் கஷ்டமென நினைக்கிறோம். ஆனால் அப்படி வாரா வாரம் மாறி மாறி வேலை செய்பவர்களும், ஆசனத்தை ஒரு வாரம் காலையிலும், ஒரு வாரம் மாலையிலும் செய்வார்களானால், வேலை மாறுதலினால் ஏற்படும் சிரமத்தைச் சமாளிக்கக் கூடிய சக்தி உடையவர்களாகி விடுவார்களென்பது நிச்சயம்.

கேள்வி:—நான் ஒட்டலில் சாப்பிட்டு வருபவன். தாங்கள், காரம் குறைக்க வேண்டும், புளியைச் சேர்க்க வேண்டாம், எலுமிச்சம் பழத்தைச் சேருங்கள் என்று சொல்லுகிறீர்கள். அங்கு காரம், புளி முதலியவைகள் இல்லாமல் பசி நீங்கச் சாப்பிடும் மார்க்கம் என்ன!

பதில்:—ஹோட்டலில் சாப்பிடும் அன்பர்களுக்கு இது ஒரு மிகப் பெரிய பிரச்னைதான். ஒரே வித சாம்பார்ப் பொடியைத்தான் சாம்பாரிலும், ரசத்திலும், கூட்டிலும், கறியிலும் போடுவார்கள். எதைச் சாப்பிட்டாலும் ஒரே வித வாசனையாய் இருக்கும். எந்த நாளிலும் அதே வாசனைதான். அவரைக்காய் சாம்பாருக்கும் அதே வாசனைதான். வெண்டைக்காய் சாம்பாருக்கும் அதே வாசனைதான். முருங்கைக்காய் சாம்பார் செய்தாலும் அதே வாசனைதான். பாவக்காய் சாம்பாரும் ஒரே விதந்தான். மற்றும் கூட்டு, பொரியல் எல்லாமுமே ஒரே தனியா, மிளகாய் வாடைதான் அடிக்கும். அந்தந்த காய்கறிகளுக்குண்டான வாசனையை அனுபவித்துச் சாப்பிட முடியாது. இம்மாதிரிச் சாப்பாட்டைச் சாப்பிட்டு வருகிறவர்கள் அபாக்கியசாலிகள்தான்! என்ன செய்வது! சிலர் இம்மாதிரி சாப்பிடத்தான் வேண்டியிருக்கிறது. இப்படிச் சாப்பிடுகிறவர்களின் ஆரோக்கியம் சரியாய் இருக்கும் என்று யாரும் சொல்ல முடியாது. அதுதான் நன்கு தெரிகிறதே! எவ்வளவுக்கெவ்வளவு ஓட்டல்கள் அதிகமாகின்றதோ அவ்வளவிற்கும் டாக்டர் பில்லும் அதிகமாகிக் கொண்டே போகிறதல்லவா! அதுவும் இந்தத் தண்ணீர்ப் பஞ்ச காலத்தில், சுகாதாரமற்ற ஓட்டல் பெருக்கத்தில் நோய் பரவச் சொல்ல வேண்டுமா!

ஆனால், விதியையும் மதியால் வெல்லலாம் அல்லவா! ஓட்டலில் சாப்பிடுகிறவர்கள் முதலில் பருப்பு நெய் சாதம் சிறிது அதிகமாகச் சாப்பிடுவது. பிறகு சிறிது சாம்பாரோ, ரசமோ துளி போட்டு (துளி யென்றால் ஒரு துளி அல்ல. சுமார் அரை அவுன்ஸ் அல்லது ஒரு அவுன்ஸ்) ஒன்றிரண்டு கவளம் மட்டும் சாப்பிடுவது. பிறகு இருக்கும் சாதத்திற்குத் தயிரையோ மோரையோ போட்டுக் கொள்ளலாம். ஆக மூன்றில் இரண்டு பாகம் தயிர் அல்லது மோர் சாதம். ஒரு பாகத்தில் பாதி பருப்பு சாதம். பாதி சாம்பார் அல்லது

ரசம் சாதம். இதில் காரம், புளி எவ்வளவு சேரும்! மிக மிகக் குறைந்த அளவே யிருக்கும். உடம்பு வாயுவாய் இருக்கிறதென்றால் பருப்பை நிறுத்திவிட்டு, ரசம் சாதம் மட்டும் சாப்பிட்டுத் தயிர் சாதமோ மோர் சாதமோ சாப்பிடலாம். மற்றும் காய்கறி, கூட்டு, பொரியல் முதலியவை சாப்பிட லாயக்கில்லாமல் மிளகாய் கடுகு முதலியவை போட்டுச் சித்திரவதை செய்திருப்பார்கள். இவைகளைத் தள்ள வேண்டியதுதான். பச்சடி யென்றால் அதுவும் வாயில் வைக்க முடியாது. அதிலும் மிளகாய் புகுந்து விடுகிறது. எனவே அப்பளம் இருக்கவே இருக்கிறது. அதை இன்னமும் தேவையானால் இரண்டு போடச் சொல்லிச் சாப்பிடலாம். பிறகு தனியாக. பச்சையாய் வாங்கி வைத்துக் கொண்டு வெண்டக்காய் இரண்டு, தக்காளி ஒன்று சாப்பிட்டு விட்டால் பேஷான சாப்பாடாகிவிடும்.

ஓட்டலில் சாப்பிடுகிறவர்கள் எதையும் சொல்லுவதே யில்லை. ஒருக்கால் ஓட்டல் முதலாளிகளிடம் "இப்படிக் காரத்தைப் போட்டு வதைக்கிறீர்களே!" என்று கேட்டால், "ஜனங்கள் அதைத் தானே விரும்புகிறார்கள். நாங்கள் காரம் குறைத்துச் செய்தால் வியாபாரம் நடவாதே!" என்கிறார்கள். ஓட்டல்காரர்கள் நமக்குத் தாயாரா! தந்தையா! இல்லை, அத்தையா! பாட்டியா! "இது சாப்பிட்டால் உடம்புக்கு ஆகாது. அது சாப்பிட்டால் உடலுக்கு ஒத்துக் கொள்ளாது" என்று பார்ப்பதற்கு. காரத்தை எவ்வளவு அதிகமாய் ஹோட்டல்காரர்கள் போடுகிறார்களோ அவ்வளவு விற்கும் பண்டங்கள் குறைவாய்ச் செலவாகும். சிறிதளவு சாப்பிடுவார்கள். லாபம் அதிகம் கிடைக்கும். காரத்தைக் குறைத்தால் அதிகமாய்ச் சாப்பிடுவார்கள். அதிகமாய்ச் செலவாகும். காசு என்னமோ அதைத்தானே கொடுப்பார்கள்! வியாபாரம்தானே! அதில் லாபந்தான் பிரதான மாகப் பார்ப்பார்கள். எனவே, ஜனங்கள் காரத்தைக் குறைக்க வேண்டும் என்று அடிக்கடி சொல்லி வந்தால் ஒருக்கால் ஹோட்டல்காரர்கள் குறைக்கலாமோ என்னமோ! இல்லையானால் ஒன்று சொல்லலாம். மதுவைக் குடிப்பது கெடுதி யென்று எப்படி நீக்கிவிட்டார்களோ, அப்படி மிளகாயும் கெடுதி என்பது கண்கூடு. அதை ஒரே தடவையாய் நீக்கிவிடாமல், கொஞ்சமாகத்தான் சேர்க்கலாம் என்று சட்டம் கொண்டுவந்தால் எவ்வளவு நன்மை மக்களுக்குச் செய்வதாகும். அப்படி மட்டும் செய்து விட்டால் ஆஸ்பத்திரிகளைப் பெருக்க வேண்டிய அவசியமிருக்காது. பல கோடி ரூபாய்களைச் செலவழித்து அன்னிய நாட்டு மருந்துகளை வரவழைக்க வேண்டியு மிருக்காது. ஜனங்களுக்கு ஆரோக்கியத்திற்கு ஆரோக்கியம் மிச்சம்.

கேள்வி :—'அது கூடாது, இது கூடாது, காபி கூடாது, சிகரெட் கூடாது' என்று சொல்லுகிறீர்களே! என்ன சார் உங்கள் ஆசனம்! இவைகளால் ஏற்படும் கெடுதிகளைக் கூட விலக்கிச் சமாளித்துக் கொள்ள முடியாத ஆசனம், வேறு எதைச் செய்ய முடியும்! நாம் என்ன செய்தாலும் எதைச் சாப்பிட்டாலும் அதைச் சரிக்கட்டிக் கொண்டு உடல் ஆரோக்கியமாக இருக்க வேண்டாமா!

பதில்:—பேஷான கேள்விதான். வரவேற்கிறேன். ஒருவன் கல்வியைக் கற்க வேண்டுமானால், பள்ளிக்கூடம் போக வேண்டும். அங்கு வாத்தியார் சொற்படி நடக்க வேண்டும். அவர் சொல்லித் தந்த பாடங்களைச் சிரத்தையுடன் ஒழுங்காய்ப் படிக்க வேண்டும். அப்படி யெல்லாம் செய்யாமல் "நான் வீட்டிலேதான் கற்றுவேன். சோம்பேறியாய்த்தான் இருப்பேன். நான் எங்கும் யாரிடத்திலும் சென்று கல்வி கற்கமாட்டேன். அந்தக் கல்வி, அவ்வளவு விசேஷம் பொருந்தியதாயிருந்தால், அது என்னைத்தான் தேடிவந்து அடையட்டுமே. என்னைத் திருத்த முடியாத கல்வி அது என்ன கல்வி! கல்வியாம், அறிவாம்" என்றால் எப்படி இருக்கும்! அதுபோலவேதான் இருக்கிறது இந்த கண்பருடைய வாதம்.

மனிதன் சுகமாய் ஆரோக்கியமாய் வாழவேண்டுமானால் சில விதிகளை அனுசரிக்கத்தான் வேண்டும். உடலுக்கு ஒத்துக் கொள்ளாதவைகளை விடவும் வேண்டியிருக்கும். இது இயற்கை விதி. இந்த விதியை அனுசரிக்காமல், கண்டபடி நடந்து விட்டு, "நான் அப்படித்தான் சாப்பிடுவேன். எனக்கு ஆசனம் செய்வதால் எல்லாம் சரியாய்விட வேண்டும்" என்று நினைத்தால் அவர்கள் ஏமாற வேண்டியதுதான். இப்படிப் பட்டவர்கள்தான் "ஆசனத்தினால் எந்தப் பலனும் இல்லை" என்று பொய்ப் பிரசாரம் வேறு செய்ய ஆரம்பித்து விடுகிறார்கள்.

பாவத்திற்கு மன்னிப்பு உண்டு. ஆனால் எப்படி! தான் செய்த பாவத்தை நன்கு உணர்ந்து, மனப்பூர்வமாய்க் கனிந்து உருகி மன்னிப்புக் கோரினால் கிடைக்கும். ஆனால், ஒரு பக்கம் குற்றத்தையும் பாவத்தையும் செய்து கொண்டே மறு பக்கம் பாவ மன்னிப்புக் கோரினால் கிடைக்குமா! இது யாரை ஏமாற்றும் வித்தை! யாரையுமல்ல. தன்னைத்தானே ஏமாற்றிக் கொண்டு இன்னமும் கீழ் நிலைக்குப் போக வேண்டியதுதான். அதைப் போலத்தான் இதுவும். ஆசனம் செய்வதால் பாவ மென்னும் நோய் மன்னிக்கப்பட்டு விடும். ஆனால் ஆரோக்கியத்துக்கு விரோதமான காரியம் செய்யக் கூடாது. அப்படிச் செய்வதால் எதிர் பார்க்கும் பலன் கிடைக்காது. அவரவர்களின் செய்கைக்குத் தக்கபடி ஆசனப் பலன் கொஞ்சமாகவோ அதிகமாகவோ கிடைக்கும். (தொடரும்)



மனைவி :—வெறும் பர்ஸைத் தூக்கிக் கொண்டு வர வெட்கமாக இருக்கிறது. நாலணாக் காசாவது கொடுங்கள். அதில் போட்டு எடுத்து வருகிறேன்.

கணவர் :—ஐயையோ! வேண்டாம். அப்புறம் பர்ஸ் கனம் தாங்காமல் நீ கீழே விழுந்து விடுவாய்!


உறுதியான
தேகதிடம்
நீங்களும்
பெறுக
வாட்டர்பரீஸ்
காம்பவுண்ட்
ஆரோக்யமளிக்கும் தன்மை நிரூபணமான இந்த டானிக்கைச் சாப்பிட்டுப் பாருங்கள். போஜனம் பூர்த்தியாவது மின்றி போஷாக்கும் பெறுவீர். உங்கள் தினசரி வேலைகளையும் தேகாப்யாசங்களையும் சரிவரச் செய்ய புதிய சக்தியும் உறுதியான தேகதிடமும் பெறுக. களைப்பே தோன்றாதபடி உங்கள் உறுப்புகள் வளர்ச்சியடைவதற்கு அவசியமான போஷாக்கு கிடைக்கும்.
வளரும் குழந்தைகளுக்கு ருசி மிகுந்த வாட்டர்பரீஸ் காம்பவுண்ட் மிகவும் உதவிகரமானது. இருமல், சளி ஏற்படாதவாறு எதிர்ப்பு சக்தி உண்டாக்கும்.
WATERBURY'S
COMPOUND
வாட்டர்பரீஸ் காம்பவுண்ட்
உங்களைத் தெம்புடன் வைத்திருக்கும்
Waterbury's Compound

NAS 743



கலியாணப் பேச்சு

டி.வி.ஜெனா

ஆபீசுக்குப் புறப்படும் பொழுது ராஜம் வந்து மெதுவாக "இன்று சாயங்காலம் வீட்டுக்குச் சீக்கிரம் வாருங்கள். தினம்போல 'லேட்'டாக வராதீர்கள்" என்று சொன்னாள்.

"என்ன விசேஷம், இன்றைக்குச் சீக்கிரம் வரச் சொல்லுகிறாய்!" என்று கேட்டேன் நான்.

"ஒன்றும் இல்லை. நம்ம பையன் ராமுவுக்குப் பெண்ணைக் கொடுக்க ஒருவர் இரவு ஏழு மணிக்கு வந்து உங்களிடம் பேசுவதாகச் சொல்லி விட்டுப் போனார். அதற்குத்தான் சீக்கிரம் வரச் சொல்லுகிறேன்" என்றாள் ராஜம்.

"இப்பொழுது என்ன அவசரம் அவன் கலியாணத்திற்கு! வயது என்ன இருபதுதானே ஆயிற்று! இன்னும் அவன் படிப்பே முடியவில்லையே!" என்றேன்.

ராஜம், "இப்பொழுதே ஆரம்பித்தால்தான் இரண்டு வருஷத்திற்குள்ளாவது நல்ல சம்பந்தமாகக் கிடைக்கும். நினைத்தபோது நமக்குத் திருப்தியாகக் கிடைக்குமா!" என்றாள்.

"சரி, சரி, உன் இஷ்டம்போல் நடக்கட்டும். நீ அவன் தாயாராயிற்று, மாட்டுப் பெண்ணை ஆளுவதும் நீ, இதில் எனக்குப் பேச என்ன இருக்கிறது!" என்று சொல்லிக் கொண்டே புறப்பட்டேன். அதுவரையிலும் இன்று நான் அதிஷ்டசாலிதான். ஏனெனில் வழக்கம்போல் இன்று சண்டை இல்லை. ராஜம் நான் ஆபீசுக்குப் புறப்படும்போது ஒரு பத்து நிமிஷம் ஏதோ ஒரு சாக்கிட்டு இது இல்லை அது இல்லை என்று ஆரம்பித்துத் தீவிரமாகப் பேசி மனசுக்குச் சங்கடத்தை விளைவிக்காத நாளில்லை.

★

அவள் கூறியபடியே அன்று மாலை சீக்கிரம் நான் வந்து விட்டேன். என் மனைவி சொன்ன பிரகாரம் பெண்ணைக் கொடுப்பவர் சம்சாரத்துடன் வந்தார். அவர் எங்கள் பையனைப் பற்றியும் எங்கள் குலம் கோத்திரங்களைப் பற்றியும் விசாரித்தார். தம்முடைய சங்கதிகளையும் சொன்னார். என் சம்சாரமும், பெண்ணின் தாயாரை, "பெண் சிவப்பா, அல்லது கருப்பா! அழகா இருக்குமா, படித்தவளா, நன்றாய்ப் பாடுவாளா!" என்று எல்லாம் கேட்டுத் தெரிந்து கொண்டாள். "வீட்டு வேலைகளை அமைதியாகச் செய்வாளா!" என்று வேறு கேட்டுக் கொண்டாள். அதற்கப்புறம் "என்ன, வண்மை, வரிசைகள் செய்வீர்கள்! நாலு பேருக்குக் கௌரவமாகவும் பெருமையாகவும் செய்யணும். பெண்ணுக்கு என்ன நகை போடுகிறீர்கள்!" என்றெல்லாம் கேட்டுக் கொண்டாள். கடைசியாகப் பெண்ணை அடுத்த வெள்ளிக்கிழமை பார்ப்பதாக நிச்சயித்து அதற்கப்புறம் பெண், பையனுக்கும், என் சம்சாரம் ராஜத்துக்கும் திருப்திப் பட்டால் மற்ற விஷயங்கள் பேசிக் கொள்ளலாம் என்று முடிவாயிற்று.

அப்படியே நாங்கள் பெண்ணை வெள்ளிக்கிழமை போய்ப் பார்த்தோம். ராஜம், வீட்டுக்குப் போய்ச் சொல்லி அனுப்புவதாகச் சொல்லி விட்டு வந்தாள். நாங்கள் வீட்டுக்கு வந்ததும், "என்ன, எப்படி இருக்கிறாள் பெண்!" என்று நான் கேட்டேன். அதற்கு ராஜம், "பெண் நன்றாகத்தான் இருக்கு. கண்ணுக்கு லக்ஷணமாக இருக்கிறது. அமைதியாகத்தான் இருக்கும் போலத் தோன்றுகிறது. ஆனால் குள்ளம். நம் பையன் உயரமாக இருக்கானே! ஈடு ஜோடு சரியாகவே இல்லை; கேவலம் பணத்திற்காகவா கலியாணம் செய்கிறது! இன்னொரு இடம் பார்ப்போம். 'பிராப்தி இல்லை' என்று சொல்லி அனுப்பி விடுங்கள்" என்று சொன்னாள். அந்த மட்டுக்கும் எனக்கும், என் பையனுக்கும் சந்தோஷந்தான். அவன் எம். எஸ்ஸிக்குப் படிக்கிறான். இன்னும் படிப்பு முடிவதற்கு இரண்டு வருஷங்கள் இருக்கின்றன. படிப்பு முடிவதற்கு முன் கலியாணம் வேண்டாம் என்பது அவனுடைய எண்ணம். ஆனால் அப்படி வெளிப்படையாகச் சொன்னால் தாயாருக்குக் கோபம் வரும் என்று உறுதியாகச் சொல்லுவதில்லை. எப்படியும் ஏதோ ஒரு காரணத்தால் சம்பந்தங்கள் குதிராமல் கால தாமதம் ஆகிவிடும் என்று நம்பி இருந்தான்.

கலியாணப் பேச்சை ஆரம்பித்துப் பையனைக் "கலியாண மார்க்கட்டில்" விட்டால், தினந்தோறும் யாரேனும் ஒருவர் மாற்றி ஒருவர் தம் பெண்ணைப் பண்ணிக் கொள்ள வேண்டியது என்று வந்து கொண்டே இருப்பார்கள். அது ஒரு பெரிய தொந்தரவு. ஆனால் விலக்கிக் கொள்ளக் கூடிய தொந்தரவுமல்ல. ஆகவே, அதற்கப்புறம் எத்தனையோ பெண்கள் வந்தன. ஒன்று இருந்தால் மற்றொன்று இல்லை. எல்லாம் அமைந்தால் பெண்ணுக்குத் தாயார் இருக்க மாட்டாள். தாய் இல்லாவிட்டால் பிறந்தகம் கிடையாது. ஒருவேளை தாய் இருந்தால் தகப்பனார் இருக்க மாட்டார். அவர் இல்லாவிட்டால் பெண்ணுக்கு நாள் கிழமை விசேஷங்களில் செய்வது யார்! ஒவ்வொரு சமயம் முன் பின் தெரியாதவர்கள் வந்து விடுவார்கள். பெருமையாகத்தான் இருக்கும் அவர்களோடு சம்பந்தம். ஆனால் புது மனிதரிடம் எப்படி இருக்குமோ! ஏதாகிலும் ஒரு விஷயத்தில் கலகப் பேச்சு ஏற்பட்டு முடிவில் கெட்டுவிடும்.

எல்லாம் அமைந்தால் படிப்பில்லாத பெண் வந்து சேரும். அதற்கு ராஜம் "நான்தான் இருக்கேனே படிப்பில்லாமல்! நீங்கள் சொல்லிக் காட்டுவது போதாதா! வரும் மாட்டுப் பெண்ணும் அப்ப

டியேதான் வரணுமா! நம்ம பையன் ரொம்ப நாகரிகமானவனுச்சே !'' என்று சொல்லுவாள்.

அதற்கு நான் ''பைத்தியமே! படித்த பெண் வந்தால் வீட்டு வேலை செய்யாது ; உன்னை மதிக்காது. தனக்காக 'டிரஸ்' செய்து கொண்டு சினிமா நடிகை மாதிரி பாடுவதும், நாற்காலியில் உட்கார்ந்து நாவல்கள் படிப்பதும், உல்லாசமாகத் திரிவதும் தவிர மற்றபடி இல் வாழ்க்கைக்கு ஏற்றவளாய் இருக்க மாட்டாளே!'' என்று பரிகாசமாகச் சொன்னேன்.

அதற்கு அவள், ''அது என்ன அப்படிச்சொல்லுகிறீர்கள்! அடுத்த வீட்டுப் பெண்களைப் பாருங்கள். படித்து விட்டு உத்தியோகம் கூடப் பார்க்கிறார்கள். ஆனால் எவ்வளவு லக்ஷணமாகவும் வணக்கமாகவும் இருக்கிறார்கள்! வீட்டில் தாயாருக்கு எவ்வளவு ஒத்தாசையாக வேலை செய்கிறார்கள். படித்தவளேயே சரியாக இருக்க மாட்டார்கள் என்பது வெறும் பேச்சு. பழக்க வழக்கங்கள்தான் காரணம் எதுக்கும்'' என்று சொல்லி விட்டாள்.



''சரி, பார்க்கலாம். உனக்கு எந்த மாதிரி மாட்டுப்பெண் வருகிறாளோ!'' என்று சொன்னேன்.

ராஜம் பதிலுக்கு, ''நல்லமாதிரியாகத்தான் வருவாள். அக்கறையோடு பார்த்துக் கொண்டேயிருந்தால் எல்லாம் சரியாகத்தான்வரும். நமக்கென்ன குறைவு! நம்ம பையனுக்கு என்ன குறைவு! ஏன் உசத்தியான பெண் அமையக்கூடாது!'' என்று அடித்துப் பேசி என்னை மடக்கிவிட்டாள்.

இப்படியே பேசுவதும், பெண்களைப் பார்ப்பதும், எதுவும் சரிப்படாமல் போவதுமாக வருஷம் முழுவதும் கழிந்து விட்டது. கலியாணப் பேச்சை எடுத்தாலே எங்கள் பையன் ராமுவுக்கு எரிச்சலாக இருந்தது. அம்மாவிடம் ''இது என்ன தொந்தரவு! படிப்பதற்கல்லவா எனக்கு 'டிஸ்டர்பென்ஸ்' ஆக இருக்கிறது! வேணுமானால் ஏதோ ஒரு பெண்ணை முடித்து விடுகிறதுதானே!'' என்று சொல்லி விடுவான். நான் நடக்கிறது நடக்கட்டும் என்று பேசாமல் இருந்து விடுவேன்.

★

அடுத்த தை மாதமும் பிறந்தது. தை பிறந்தால் வழி பிறக்கும் என்கிற மாதிரி மறுபடியும் கலியாண முயற்சிகள் ஆரம்பமாயின. மறுபடியும் பழைய கதைதான். எல்லாம் சரியாய் வந்தால் ஏதோ ஒரு குறையில் என் மனைவி ராஜம் தள்ளி விடுவாள். அதில் ஒரு சம்பந்தம் எவ்விதக் குறையும் இல்லாமல் வந்தது. எல்லோருக்கும் திருப்தியாகவே இருந்தது. நானும் இது முடிந்து விடும்; இத்துடன் இந்தக் கலியாண அலைச்சல் தீர்ந்து விடும் என்று உற்சாகமாக இருந்தேன். பெண்ணும் ராமுவுக்குப் பிடித்ததால் அவனும் சந்தோஷமாகத்தான் இருந்தான். ஆனால் ஒருவர் யாரோ வந்து மெதுவாக ராஜத்தின் காதில் அந்தப் பெண்ணின் தாயாருக்கு டி. பி. இருந்ததென்று சொல்லி விட்டார்கள். உடனே ராஜம் இதுவும் வேண்டாம் என்று சொல்லி நிறுத்தி விட்டாள்.

அதற்கப்புறம் எனக்கு அந்த விஷயத்தில் வெறுப்பு ஏற்பட்டது. ராஜத்துக்கு மாத்திரம் உற்சாகம் குறையவில்லை. பார்த்துக் கொண்டேதான் இருந்தாள். மறுபடியும் ஒரு நல்ல பெண் வந்தது. ராமுவுக்கு ரொம்பவும் பிடித்தமாக இருந்தது. ராஜம் கூடச் ''சரி'' என்று சொல்லி விடுவாள் என்று கோலாகலமாய் இருந்தோம். பெண்ணுக்கு நகை போடும் பேச்சு வந்தது. அதில் ஒரு சந்தேகம் இருந்தது. அவர்கள் தங்க ஒட்டியாணம் போட இயலாது என்று சொல்லி விட்டார்கள். பெண்ணின் தகப்பனார் தற்சமயம் பெரிய உத்தியோகத்திலிருந்தாலும் முதலில் சிறு சம்பளத்திலிருந்து மேலுக்கு வந்தவர். இன்னும் நாலு பெண்கள் கலியாணத்திற்கு இருந்தார்கள். அவர் கூடிய சீக்கிரத்தில் பென்ஷன் வாங்குவதாயும் இருந்தார். ஆகையால் ''ஒரு பெண்ணுக்குச் செய்தால் அதே மாதிரி எல்லாப் பெண்களுக்கும் செய்ய வேண்டியிருக்கும். இப்பொழுது இருக்கும் விலை வாசிகளில் ஒட்டியாணம் பண்ணுவது கஷ்டம். அது கட்டாது. ஐந்து பெண் இருந்தால் அரசனும் ஆண்டி ஆகி விடுவான். என் கதி என்ன!'' என்று சொல்லி விட்டார். ராஜம் அது இல்லாவிட்டால் முடியாது என்று ஒரே பிடிவாதமாகச் சொல்லிவிட்டாள்.

நானும் அவளிடம் ''இது சரி இல்லை'' என்று வாதித்தேன். ''இந்தக் காலத்தில் எந்தப் பெண் ஒட்டியாணம் அணிந்து கொள்ளுகிறாள்! அதுவும் படித்த பெண்கள் நகையே நிறையப் போட்டுக் கொள்ள மாட்டார்கள். 'பழைய அநாகரிகமான பெண்கள்போல உடம்பு நிறையக் குறத்திமாதிரி யார் போட்டுக் கொள்வார்கள்' என்றே பரிகாசமாகப் பேசுவார்கள். இந்த ஒட்டியாணத்திற்காக இந்தச் சம்பந்தத்தையும் விட்டு விடாதே'' என்றேன்.

ராஜம், ''பெண் போட்டுக் கொள்ளா விட்டால் என்ன! கௌரவத்திற்குத்தானே இது எல்லாம் கேட்பது! முப்பது பவுனில் ஒட்டியாணம் செய்தால் ரூபாய் 2500 ஆகுமோ இல்லையோ! செய்யட்டுமே, நம்ம பையன் வேணுமானால்!'' என்று திட்டமாகக் கூறினாள். அதற்கு மேல் நான் பதில்சொல்ல விரும்பவில்லை; சொல்லியும் பிரயோஜனம் இல்லை.

ஆனால் அதைக் கேட்டுக் கொண்டு வந்த ராமு அம்மாவுடன் அதிக தீவிரத்துடன் ''இது என்ன அம்மா, பெரிய விளையாட்டாக ஆகி விட்டது! நான் பொம்மையா! எனக்கு ஒரு இஷ்டம், மனம், சுதந்திரம் கிடையாதா! தாயார் என்ற கௌரவம் கொடுத்ததற்கு ரொம்பவும் கேலியாகப்போகிறது. நாலு பேர் சிரிக்கிறார்கள், என் சகாக்கள் கூடப் பரிகாசம் செய்கிறார்கள். இவ்வளவு அட்டகாசம் செய்யாமல் பிராப்தம் போல் நடக்கும் என்று சும்மா இருந்தாலும் நன்றாக இருந்திருக்கும். நகையையா ஆளப்போகிறோம்! பெண்ணைத்தானே ஆளப்போகிறோம்! நகை வந்தால்தானா நமக்கு ஆஸ்தி, அந்தஸ்து வரும்! மழை பெய்து நிறையணுமே தவிரப் பனி பெய்தா நிறையும்!'' என்று சொல்லிக் கொண்டே போனான். முடிவில் ராஜத்தின் தீர்மானந்தான் முடிந்தது. அந்தச் சம்பந்தமும் நடக்கவில்லை.

அதற்கப்புறம் அவனுக்குப் பரீட்சை சமீபமாக வந்து விட்டது. கலியாணப் பேச்சை எடுத்தால் சிடு, சிடு என்று விழுவான். கஷ்டப்பட்டுப் படித்



பெரிய மனிதர் (தம் காரியதரிசியைப் பார்த்து):—ஸார், என் பேனா எங்கே?

காரியதரிசி :—உங்கள் காதிலேயே வைத்துக் கொண்டிருக்கிறீர்களே!

பெரிய மனிதர் :—அதையெல்லாம் தேடிக் கொண்டிருக்க எனக்கு அவகாசமில்லை. எந்தக் காதில் இருக்கிறது, சொல்லுங்கள்!

துப் பரீட்சையில் தேறிவிட்டான். உடனே அதிருஷ்டவசமாகப் பம்பாய் சர்வகலாசாலையில் ரூ. 300 சம்பளத்தில் வேலையில் அமர்ந்தான். ராஜத்துக்கு உள்ளூற ராமு பம்பாய் போவது இஷ்டம் இல்லை. ஆனாலும் பெருமைக்காகவும் பெரிய உத்தியோகம் ஆகிவிடும் என்கிற ஆசையினாலும் சம்மதித்தாள். நல்ல நாள் பார்த்துக்கொண்டு ராமு பம்பாய்க்குப் புறப்பட்டான். ரயில் புறப்படும்போது ராஜம் ராமுவைப் பார்த்து "இனிமேல் கூடிய சீக்கிரத்தில் கலியாணம் தீர்மானமாகும்; கடிதம் எழுதின உடனே வந்துவிடு" என்றாள். அவன் சிரித்துக் கொண்டே "சரி" என்றான்.

★

அடுத்த வீட்டுத் திண்ணையில் சாப்பிட்டு விட்டு, வெற்றிலை, பாக்கு உல்லாசமாக போட்டுக் கொண்டு பெண்கள் சில பேர் வழக்கம் போல் அக்கப்போர் பேசிக் கொண்டிருந்தார்கள். அதில் ஒரு மாமி "என்ன கேட்டேளோ! அடுத்த வீட்டுப் பையன் பம்பாய்க்குப் போய்விட்டானாமே! இன்னும் கலியாணம் ஆகவில்லையாமே!" என்றாள்.

இதற்கு மற்றொரு மாமி, "அந்தக் கூத்தை ஏன் கேட்கிறேள்! இரண்டு வருஷமாக அவாளும் பார்க்காத பெண்ணும் சம்பந்தமும் கிடையாது. ஆனால் ராஜம் மாமிக்கு எதுவும் சரிப்படவில்லை. 'நாய் அகப்பட்டால் கம்பு அகப்படவில்லை, கம்பு அகப்பட்டால் நாய் அகப்படவில்லை; இரண்டும் அகப்பட்டால் ராஜா வீட்டு நாய் ஆயிடுத்தாம்' என்கிற மாதிரிதான். ஊரில் இருக்கிற பெண்களுக்கெல்லாம் கலியாணம் ஆகி விட்டது. இனி மேல் வெளி தேசத்தில் தான் பெண் தேட வேண்டும்" என்று சொல்லிச் சிரித்தாள். இப்படிப் பேச்சு பலவிதமாக இருந்தது. ஒரு நாள் என்னை உடனே புறப்பட்டு வரச் சொல்லி ராமுவிடமிருந்து தந்தி வந்தது. நான் அன்று இரவே புறப்பட்டுப் போய் விட்டேன். இறங்கினதும் ராமு என்னை ஸ்டேஷனிலேயே எதிர்கொண்டு அழைத்துப் போக வந்திருந்தான். பிறகு அவன் இருக்கும் அறைக்குப் போனோம். அங்கே, தான் சொல்லப் போகும் விஷயங்கள் தன் வாழ்க்கைக்கு வெகு முக்கியமானவைகள் என்றும் தான் தீர்மானித்தபடி செய்வது நிச்சயம் என்றும் சொல்லி விட்டான்.

ராமுவின் குணம் எனக்குத் தெரியுமாதலால் அவன் கூறியவற்றுக்கு எல்லாம் என் சம்மதத்தைத் தெரிவித்துவிட்டுப் பம்பாயிலேயே ஒரு வாரம் இருந்தேன். ராமு நினைத்த காரியம் குறைவின்றி முடிந்து விட்டது.

நான் பட்டணம் புறப்பட்டுப் போவதாக எண்ணியிருந்தேன். அதற்குள் பட்டணத்திலிருந்து எனக்கு ஒரு தந்தி வந்தது: "பம்பாய் யூனிவர்சிடி, ரிஸர்ச் ஸ்காலர், ராமகிருஷ்ணன் எம்.எஸ்ஸி.க்கும் அதே கழகத்தில் சமஸ்கிருத பண்டிதராக இருக்கும் ஸ்ரீ விஷ்ணு பத்தாங்கர் அவர்கள் குமாரத்தியும் அந்தக் கலாசாலை மாணவியுமான ஸ்ரீமதி வசந்தா பாய் பி. எஸ்ஸி.க்கும் திருமணம் மிகவும் விமரிசையுடன் புனாவில் நடந்தேறியது— என்று பத்திரிகையில் வந்திருக்கிறதே! இது யார்? நம்ம ராமுவா!" என்று ராஜம் அடித்திருந்தாள். "ஆம், நம்ம ராமுவேதான். நாங்கள் எல்லோரும் நாளைக் காலை விமானத்தில் புறப்பட்டு அங்கு வருகிறோம்" என்று பதில் கொடுத்துவிட்டோம்.

அப்படியே மறு நாள் மாலை நாலு மணிக்கு விமானத்தில் வந்து மீனம்பாக்கத்தில் இறங்கி டாக்ஸியில் வீட்டுக்கு வந்தோம். வீட்டு வாசலில் டாக்ஸி நின்றது. வாசலில் ஒரே கூட்டமாக இருந்தது. உள்ளூருக்குள் இருக்கும் பந்துக்கள் எல்லோரும் விஷயம் தெரிந்து வந்து சேர்ந்து விட்டார்கள். அக்கம் பக்கத்து வீட்டுக்காரரெல்லோரும் கார் ஓசை கேட்டவுடனே வெளியில் வேடிக்கை பார்க்க வந்து கூடி விட்டார்கள். வீடும் கல்யாண வீடுமாதிரி இருந்தது. காரிலிருந்து நான் முதலில் இறங்கினேன். அப்புறம் ராமுவும், வஸந்தாவும் இறங்கினார்கள். என் பெண்கள் காரின் அருகில் வந்து அண்ணாவை அன்புடன் "வாருங்கள்" என்று அழைத்ததும், அவன் ஆங்கிலத்தில் வஸந்தாவை நோக்கி "யூவர் ஸிஸ்டர் இன்லா" என்று தங்கைகளை அறிமுகம் செய்து வைத்தான். அவர்கள் வஸந்தாவைச் சந்தோஷத்துடன் உள்ளே அழைத்துக்கொண்டு போனார்கள். எல்லோரும் வஸந்தாவைப் பார்த்துச் சந்தோஷப்பட்டார்கள். அவள் அழகாகவும், அமைதியாகவும்தான் இருந்தாள். நாகரிகத்துக்கும் ஒன்றும் குறைவில்லை. ஆனால் ராஜம் மட்டும் வெளியில் வரவில்லை. ஹாலில் நின்று கொண்டு பார்த்துக் கொண்டிருந்தாள். ராமு வஸந்தாவை அழைத்துக் கொண்டு போய் அம்மாவுக்கு நமஸ்காரம் செய்வித்து "இதோ பார் அம்மா, உன்னுடைய மாட்டுப் பெண்" என்று சொன்னான். ராஜத்துக்குச் சிரிப்பு வந்தது. ஆனால் என்ன சொல்லுவது என்று தெரியவில்லை. தமிழ்ப் பாஷை தெரியாதகினால் வஸந்தாவும் சிரித்துக் கொண்டே இருந்தாளே தவிர மற்றபடி ஒன்றும் பேசவில்லை.

ராமுவும் வஸந்தாவும் பதினைந்து நாள் சென்னையில் இருந்துவிட்டுப் பம்பாய்க்குத் திரும்பிப் போய் விட்டார்கள். இருந்த நாள் எல்லாம் அவர்கள் ரொம்பவும் உல்லாசத்துடன் இருந்துவிட்டுப் போனார்கள். ராஜத்துக்குக் கூட வஸந்தாவின்மீது மிகவும் ஆசையும் அன்பும் உண்டாகி விட்டது என்று அக்கம் பக்கத்து மாமிகள் சொல்லிக் கொண்டார்கள். ராஜம் அவர்களிடம் "என்ன மாமி, கடைசியில் எங்கே பிராப்தி என்று பார்த்தீர்களா! எதுக்கும் ராமுவுக்குப் பிடித்த பெண் வஸந்தா. அவளும் அழகாகத்தான் இருக்கிறாள். நம்ப தேசத்துச் சம்பந்தம் இல்லாவிட்டாலும் நான் தேடினது எல்லாம் கூடி வந்தது. அதுவே போதும்" என்று மிகுந்த சந்தோஷத்துடன் சொல்லிக்கொண்டே இருக்கிறாள்.


விசேஷ நாட்களிலே
மங்களம் பொங்கும் இந்நாட்களில் தான் என்ன ஆனந்தம். நண்பர்களுடன் களிப்பதும், தங்கள் பரிசுகளைப் பிரித்துப் பார்க்கத் துடிப்பதும், சிற்றுண்டி, கேளிக்கை ஒரே கோலாகலம். இந்த சந்தர்ப்பத்தில் பிரிட்டானியா பிஸ்கோத்துகளை வழங்குவது தான் அதிலும் விசேஷம். சிறந்தவைகளை அனுபவிக்க இதுதானே சமயம்.
சிறந்த பிஸ்கோத்து
பிரிட்டானியா
FBMI
FEDERATION OF BISCUIT MANUFACTURERS OF INDIA

சசிகேதன் கனவு

ஏ. எஸ். ராகவன்

இருட் போர்வையில் வானமும், வையமும் ஒன்று சேர்ந்து சுருண்டு கொண்டன. நட்சத்திரங்கள் கூடக் கண்ணுக்குப் புலப்படவில்லை. நள்ளிரவின் விகார அமைதி நிலவியிருந்தது. அவன் எழுந்து வெளியே வந்தான். ஆகாயத்தைப் பார்த்து விட்டு ஒரு பெருமூச்சு விட்டான்.

தொலைவில் தெரியும் மலையின் சிறு உருவம் போல அவன் உள்ளத்திலும் ஏதோ புரியாத லட்சியக் கரு உருப்பெற்றது. ஆனால் அது வளர்வதற்குள் எவ்வளவு தடைகள்! அது வளர்ந்து முடியும் தருணத்தில் அவன் கைக்கு எட்டாமலே போய்விட்டது!

இனி வாழ்வதால் பயன் ஒன்றுமில்லை என்றே சசிகேதன் முடிவு கட்டினான். வெகு சிரமப்பட்டுக் கட்டிய உள்ளக் கோயில் சிதைந்து போன பிறகு மீண்டும் அதை உருவாக்கும் பணியைச் செய்ய அசக்தனாக நின்றான். இவ்வளவுக்கும் அவன் சுத்த வீரன். ஆனால் வீரத்துக்கும், காதலுக்கும் ஒற்றையடிப் பாதை கிடையாதே!

காமினியை அவன் காதலித்தான். அவளுக்காகவே அரண்மனைக் குற்றேவலிலும் பல ஆண்டுகளைக் கழித்தான். அவனுடைய ஆண்மையை அவள் ரஸித்தாளா இல்லையா என்பதைத் தெரிந்து கொள்ள முடியவில்லை. அவளுக்காக அவன் செய்த மகத்தான தியாகத்தை அவள் உணர்ந்தாளா இல்லையா என்பதை அவனால் உணர்ந்து கொள்ள முடியவில்லை. கடைசியில் அவள் அவனுக்கு எட்டாத தொலைவுக்குப் போய் விட்டாள். எங்கிருந்தோ வந்த சந்திரஹாஸனை அவளிடம் சேர்க்க விதி சதி செய்து விட்டது.

இனித் தன்னால் வாழ முடியாது என்று அவன் நைந்து போனான். அரண்மனையின் உத்யானவனத்துக்குப் போய்ச் சுற்றினான். சுற்றிலும் கமழ்ந்த பூக்கள் அவனைப் பார்த்துப் பரிகசிப்பதுபோலத் தோற்றமளித்தன.

பொழுது, போகாத தொலைவுக்குப் போவது போல மெள்ள நகர்ந்தது. அவன் பளிங்கு மண்டபத்திற்குள் நுழைந்து ஒரு கண்ணோட்டம் விட்டபடியே, "இந்த இடத்தில் காமினி தினமும் வந்து ஆடிப் பாடி விளையாடுவாள். நானும் பார்த்து மகிழ்ந்திருக்கிறேன். இதுகாறும் இந்த இடம் என் கண்களுக்கு இன்பலோகமாகத் தெரிந்தது. இப்போதோ முள் நிறைந்த காடுபோலக் காட்சி தருகிறது!" என்றான். மனம் மாறிய வெறுப்பினால் என்னென்னவோ பிதற்றினான்.

உறக்கம் வந்து அவனைத் தாவி அணைத்துக் கொண்டது. அங்கேயே படுத்தான்.

அகிற்புகையின் மணம் கம்மென்று வீசியது. மலர்ந்த மல்லிகையில் பட்ட இளங்காற்று மயக்கத்தைத் தந்தது. சோலைக் குயில்கள் பல கீதம் பாடின. பாதை வழியே நடந்த சசிகேதன் இந்த சுகானுபவத்தில் மிதந்தபடியே நடந்தான்.

அவன் உடல் காற்றுப் போல இருந்தது. மனமோ கல்லாகப் போயிருந்தது. ஒவ்வொரு அடி எடுத்து வைக்கும் போதும் அவன் எண்ணாத எண்ணமெல்லாம் எண்ணினான்; களிகூத்தாடினான்.

மேலே நல்ல நிலவு. அதன் இனிமை அவனை ஆட்கொண்டது. அவன் பாட ஆரம்பித்தான். பாட்டு இழைந்து புறப்பட்டதும் குயில்கள்கூடப் பாட மறந்து அவனையே பார்த்தன! அவன் உல்லாஸமாகப் பாடிக் கொண்டே இருந்தான். அவனைச் சுற்றி ஒரு பெருங்கூட்டம் கூடி விட்டது. பாட்டுக்குப் பின்னணி வாத்தியங்களும் வந்து விட்டன.

"ஜல்...ஜல்..." என்று சலங்கை சத்தம் கேட்டது. கூடியிருந்த கூட்டம் வழிவிட்டு விலகி நின்றது. வானத்து சுந்தரி நிலை பெயர்ந்து வந்ததுபோல ஒரு பேரழகி அங்கே வந்து நின்றாள். சசிகேதன் அவளைப் பார்த்தான். அடுத்த விநாடி அவன் கண்கள் மலர்ந்தன. ஆ! காமினியா?

அவள் ஆடினாள். அவன் பாடினான். இருவரும் ஒன்றாகச் சேர்ந்து பாடி ஆடினர். அவன் மனம் மெலிந்து நெகிழ்ந்தது. உடலோ புலப்படாத வெறியின் பிடியில் பெருங்கனம் கனத்தது. ஏனோ இந்த மாறுதல்?

"காமினி, நீ எப்படி இங்கு வந்தாய்?... உன்னை விட்டு விட்டு வந்ததாக நான் எண்ணியிருந்தேன். நீ சந்திரஹாஸனை..." என்று அவன் கேட்பதற்குள் அவள் தன் மலர்க் கரத்தால் அவன் வாயை மூடினாள்.

"உங்களைத் தேடியே நான் வந்தேன். அவரை நான் விரும்பவில்லை என்பது உங்களுக்குத் தெரியாதா? அது மாமாவின் ஏற்பாடு" என்றாள் அவள்.

சசிகேதன் அவளைப் பார்த்துப் புன்முறுவல் பூத்தான். "என்னைத் தேடி வந்தாயா? இன்று பௌர்ணமி. நிலவின் இனிமையைப் பார்த்தாயா?" என்று அவன் கேட்டான்.

அவள் மௌனமாகத் தலையசைத்தாள்.

சசிகேதனுக்கு அவளைப் பார்க்கப் பார்க்கத் தன் எதிர்காலப் பொறுப்பு பளிச்சென்று தெரிந்தது. அதற்குத் தன்னை மாற்றிக் கொள்ள வேண்டாமா? மேலும் அவள் அரண்மனையிலே வளர்ந்தவள். முடிவற்ற இந்த நீண்ட பாதையில் அவனுடன் சேர்ந்து கைகோர்த்து நடக்க அவள் சம்மதிப்பாளா

தைரியமாக அவளைக் கேட்டு விட்டான். "காமினி, காதல் என்பது ஒரு போதை என்று பலர் சொல்வதுண்டு. எனக்கும் சில சமயம் அப்படித் தோன்றுவதுண்டு. இதோ பார், நான் புறப்பட்டு விட்டேன். எங்கே செல்கிறேனோ எனக்குத் தெரியாது. நீ என்னுடன் தைரியமாக வருவாயா?"

அவள் ஆனந்தத்துடன் அவன் கையைப் பற்றியபடியே, "தாராளமாக. நீங்கள் இருக்கும் இடமே எனக்குச் சுவர்க்கம்..." என்றாள்.

அவன் புறப்பட்டு விட்டான். இரண்டடி எடுத்து வைத்ததும், "அங்கேயே நில்! நகராதே!" என்ற கர்ஜனை கிளம்பியது.

அவன் நின்றான். அவள் அவனுடைய கைகளை உதறிவிட்டு விலகி நின்றாள். சந்திரஹாஸன் அவன் முன்வந்து கத்தியை நீட்டினான். "அவளை இழுத்துச் செல்ல உனக்கு எவ்வளவு துணிச்சல்? ராஜத் துரோகி, உனக்கு அரண்மனையில் இடம் அளித்ததே பிசகு. என் திருமண நாளன்றே உன் கைத் திறத்தைக் காட்டி விட்டாயே! எடு உன் கத்தியை" என்று கூறிச் சீறிவிழுந்தான்.

சசிகேதன் தன் இடையிலிருந்த கத்தியை உருவினான். அதன் நுனியிலே தங்க முலாம் பூசப்பட்டிருந்தது. அதில் சிரமப்பட்டு அவன் எழுதிய கவிதை காட்சியளித்தது. "தென்றலிலே அவள் இசைத்த கீதம் கேட்டு, மெய் சோர்ந்து நெக்குருகி வீழ்ந்து விட்டேன்" என்றிருந்தது.

அவன் கால்கள் தள்ளாடின. எங்கிருந்தோ மயக்கம் தரும் அந்த இசை வந்து காதில் மோதியது. பலம் பொருந்திய அவன் கையை விட்டு நழுவிக் கத்தி கீழே விழுந்தது.



* * *

திடுக்கிட்டு எழுந்தான் சசிகேதன். கனவின் பிரமை அவனை உலுக்கிற்று. இன்னமும் நன்றாக இருள் விலகவில்லை. விடிவதற்கு இன்னும் வெகு நேரம் இருக்கும் போலிருந்தது. அவனுக்கு அங்கு இருக்கவே பிடிக்கவில்லை. எழுந்து வேகமாக நடந்து தன் அறையை அடைந்தான்.

நுழைந்ததும் முதலில் அவன் கண்களில் பட்ட பொருள் தங்க முலாம் பூச்சுடன், அழகிய கைப் பிடியில் பொறிக்கப்பட்ட எழுத்துகளைத் தாங்கி நின்ற கத்திதான். அதை எடுத்து உற்றுப் பார்த்தான். அந்த எழுத்துக்கள் இப்போது அவனுள் புது வீரத்தைப் புகுத்தின. இவற்றைக் கண்டா கனவில் அவன் மயங்கி வீழ்ந்தான்? சே! அவனுடைய பராக்கிரமம், தன்னம்பிக்கை எல்லாம் எங்கே போயிற்று?

கனவு அவனை நோக்கிப் பரிகசித்தது. அதை அவன் எண்ணி நகைத்தான். தன் பருத்த தோள்களை ஒரு முறை பார்த்துக் கொண்டான். இப்போதும் ஒன்றும் கெட்டு விடவில்லை. காமினியை அடைய எத்தனை எத்தனையோ வழிகள் இருக்கின்றன என்று மன உறுதி கொண்டான்.

யோசித்தபடியே உட்கார்ந்தான். சிறிது நேரம் ஆயிற்று. கொட்டாவி விட்டுவிட்டு மீண்டும் படுத்து உறங்கி விட்டான்.

* * *

அழகான குதிரையின் மீது அவன் ஆரோகணித்திருந்தான், இளவரசன் போல. குதிரை அவனைத் தூக்கிக் கொண்டு சிட்டாய்ப் பறந்தது. தன் பின்னால் பறந்து வரும் வீரர்களை அவன் ஒரு முறை திரும்பிப் பார்த்து, "வாருங்கள். வெற்றி நம்முடையதே! உங்கள் வீரத்தின் பிரதாபத்தைப் பாருங்கள், கும்மாளம் அடியுங்கள். அங்கே கிடைக்கும் சகல செல்வமும் உங்களுக்கே" என்று வீரர்களுக்கு ஊக்கமூட்டினான்.

வீரர்களுக்கு ஆனந்தம் தாள முடியவில்லை. நாட்டுக்குப் பல காலம் ஓயாத தொல்லைகள் தந்து வந்த கொள்ளைக் கூட்டத்தைப் பிடிக்க அரசரின் கட்டளையின் பேரில் சசிகேதன் புறப்பட்டிருக்கிறான். அவனுடைய வீரத்தைக் காட்ட இதைவிட வேறு நல்ல சந்தர்ப்பம் எப்போது கிடைக்கும்?

அடர்ந்த காட்டை அடைந்ததும் அவர்கள் நின்றார்கள். அந்த இடத்திற்கு அவன் ஒரு முறை வந்திருக்கிறான். தற்செயலாக காமினியையும் அங்கே சந்தித்திருக்கிறான். அப்போதெல்லாம் அவள் அவனிடம் அன்பைவிட அதிக மரியாதை காட்டினாள். மரியாதையை

விட அன்பல்லவா பெரிது? அவனுடைய ஆயிரம் கடுஞ்சொற்களை ஏற்றுக் கொண்டு அவன் காதலைப் பெற அவன் போராட விரும்பினான். அவன் பேச்சு காவியமாய், கவின் சுவையாய் இனிக்கும் போது அவன் பேதையாகி விடுவான். ஆனால், இன்று எல்லாம் கை நழுவிப் போய்விட்ட போது...

குதிரை வேகமாகக் கனைத்தது. அவனுக்குச் சுய நினைவு வந்தது. அவன் கீழே இறங்கினான். தன் உடைகளில் ஒட்டியிருந்த புழுதியைத் தட்டிவிட்டு அத்துடன் தன் மனதில் படிந்திருந்த தூசியையும் விலக்கிக் கொண்டான். வீரர்களுக்குச் சமிக்ஞை காட்டி விட்டு வேகமாக முன்னே நடந்தான்.

பாதை வளைந்து வளைந்து சென்றது. அதன் முடிவு அவனுக்கு நன்றாகத் தெரியும், அதைக் காணவே அவன் வந்திருக்கிறான். சிறிது தூரம் நடந்ததும் அவன் நின்று சுற்றிலும் பார்த்தான். இலை, தழைகளால் மூடப்பட்டிருந்த அவ்விடத்தில் அவன் கண்கள் எதையோ துழாவின. முடிவில் அவன் ஆழ்ந்த யோசனையுடன் தழைகளை விலக்க ஆரம்பித்தான். வீரர்களும் உதவி செய்தனர். கடைசியாக அங்கே ஒரு சுரங்க வழி இருப்பதை அவன் கண்டு கொண்டான்.

முகத்தில் சந்தோஷம் பொங்க அவன் அதனுள் பிரவேசித்தான். அவர்களும் கூட நுழைந்தனர். கையில் தீவட்டியுடன் சிறிது தூரம் நடந்தனர். அதற்குள் பலர் பேசும் குரல் கேட்கவே அவன் நின்றான். ஆம், சதியாலோசனை நடக்கிறது.

வீரர்களுக்கு உத்தரவிட்டு நாலாபுறமும் ஆட்களை அனுப்பினான். சரேலென்று புலி போலக் கூட்டத்திற்குள் பாய்ந்தான். "உம்... என்ன சொல்கிறீர்கள்? அப்படியே நில்லுங்கள். இல்லையேல் ஒவ்வொருவரையும் கண்டதுண்ட மாக்குவேன். ஜாக்கிரதை!" என்று பயங்கரமாக உத்தரவிட்டான்.

அந்தக் கூட்டத் தலைவனை அருகில் வரும்படி அழைத்தான். தொலைவில் இருந்தபோது சரிவரப் புலனாகாத அந்த உருவம் அருகில் வர வர நன்கு புலப்பட்டது. அது வேறு யாருமில்லை, சந்திரஹாஸன்தான்! காமினியை அவனிடமிருந்து பறித்துக் கொண்டு போக வந்த சதிகாரன்தான்!

எல்லோரையும் சிறைப்படுத்தி விட்டு அவன் திரும்பினான். வீரர்கள் கைதிகளை நடத்திக் கொண்டு சென்றனர். சசிகேதன் வெற்றி மிதப்பில் உல்லாச நடை நடந்தான்.

சுரங்கத்திற்கு வெளியே வந்ததும் குதிரை மீது தாவி ஏறிக் கொண்டான். "நான் முன்னால் போகிறேன். நீங்கள் ஜாக்கிரதையாக வாருங்கள்" என்று வீரர்களுக்குக் கூறிவிட்டுக் குதிரையைத் தட்டினான்.

குதிரை பறந்தது. நல்ல இருட்டு, ஒன்றுமே புரியவில்லை. குதிரை மட்டும் பாதையை விட்டு விலகாது ஓடிக் கொண்டிருந்தது. அவன் எண்ண ஆரம்பித்தான். "இனி காமினி என்னை மணந்து கொள்ள ஒரு தடையும் இல்லை."



நடுவில் குதிரை நின்றது. அவன் திடுக்கிட்டுப் பார்த்தான். பாதை நடுவில் யாரோ படுத்திருப்பது தெரிந்தது. இறங்கி அந்த உருவத்தைப் பார்த்தான். காமினியா அது? அவனால் நம்ப முடியவில்லை. பரபரப்போடு அவளை எழுப்பினான்.

அவள் எழுந்து அவனைக் கண்டதும் விலகி நின்றாள். "யார் நீயா? உன்னை நல்லவன் என்று நான் எண்ணியிருந்தேன்" என்று கூறினாள். அவள் அழகிய முகம் கோபமாயிருந்தது.

அவனுக்குச் சுருக்கென்று தைத்தன இந்த வார்த்தைகள். யார்மீது அவன் தன் பிரேமையைக் குவித்திருந்தானோ அவளா இப்படிப் பேசுகிறாள்?

"காமினி, ஏன் இப்படிப் பேசுகிறாய்?" என்று சாவதானமாகக் கேட்டான்.

"அழகாக இருக்கிறது உம் கேள்வி. கொள்ளைக்காரனிடம் வேறு என்ன கேட்பது?"

"நானா கொள்ளைக்காரன்? அதோ அவன் பின்னால் வருகிறான். நீயே போய்ப் பார்!"

"நான் யாரையும் பார்க்க வேண்டியதில்லை. உன்னைப் பிடிக்கத்தானே அவரை அனுப்பினேன். உன் ரகசிய இடத்தைக் கண்டு பிடித்து உனக்கு முன்பே அவர் அங்கே காத்திருந்திருப்பாரே! இப்பொழுது யாரையும் ஏமாற்ற முயல வேண்டாம்!"

அவன் விழித்தான். இடுப்பில் சுமையாகத் தொங்கிய கத்தியை உருவினான். "இது

காறும் உன் காதலை இக்கத்தியிலே பொறித்து வைத்திருந்தேன். அது ஈடேறவில்லை. அதன் முடிவை இக் கத்தியே சொல்லட்டும்.

கத்தியை உறுவினான். அடுத்த கணம் யாரோ வரும் சத்தம் கேட்டது. சசிகேதன் சட்டென்று திரும்பிப் பார்த்தான்.

வீரர்கள் அருகில் வந்தனர். அவர்களுடன் எதிரில் அரசரும் வந்து கொண்டிருந்தார். இதற்குள் கள்வர்கள் பிடிபட்ட விவரம் அவருக்குத் தெரிந்து விட்டது. அவசரம் அவசரமாக அவரே புறப்பட்டு வந்தார்.

சசிகேதன் காமினியைப் பார்த்தான். காமினி அவனைக் காதலோடு பார்த்தாள்.

*　　　　*　　　　*

கனவு கலைந்தது. சசிகேதன் கண்களைக் கசக்கிவிட்டு விழித்துப் பார்த்தான்.

அந்த அழகான கத்தியை எடுத்து இடுப்பில் செருகிக்கொண்டான். காமினியைச் சந்திரஹாஸன் மணப்பதென்று முடிவு செய்தாயிற்று. மண நாளும் குறித்து விட்டார்கள். இதற்கிடையில் அர்த்தமற்ற கனவுகள் காணுவதில் என்ன பயன்? தன் விதியை நொந்தபடியே அவன் நடந்து கொண்டே இருந்தான். இதைத் தவிர வேறெதுவும் அவனால் செய்ய முடியவில்லை.

பாழடைந்த மண்டபம் ஒன்று குறிக்கிட்டது. அதில் உட்கார்ந்து கொண்டே யோசித்தான். ஒரு வழியும் புலனாகவில்லை. முடிவாக காமினியையே நேரில் கேட்டு விடுவது என்று துணிந்து புறப்பட்டான்.

காமினியின் அறையை அடைவதற்குள் அவனுடைய தெம்பெல்லாம் போய்விட்டது. பனிக்கட்டி போல உருகிவிட்டான்.

அறைக்குள் எட்டிப் பார்த்தான். ஒருவரும் இல்லை. மனதை மயக்கும் வாசனைப் புகை மட்டும் வந்து கொண்டிருந்தது. திரைச் சீலைகள் மூடியபடியே கிடந்தன. படுக்கை அலங்கோலமாகப் பிரிந்து கிடந்தது. அறை நடுவிலிருந்த அழகான மேஜையின் மீது ஒரு காகிதமும் எழுத்தாணியும் கிடந்தன.

பூனைபோல அவன் உள்ளே நடந்தான். அந்தக் காகிதத்தை எடுத்து அடங்கா ஆவலுடன் படிக்க ஆரம்பித்தான்.

''கனவு காண்பது பலர் விருப்பம். எனக்கும் அப்படித்தான். இவ்வளவு நாட்களாக லட்சியக் காதல் என்று நான் ஒருவரைக் காதலித்தேன். அந்தக் காதல் நிறைவேறுமா என்ற நம்பிக்கை எனக்கு இல்லை. என் உள்ளம் கவர்ந்த அந்த அன்பரின் பெயரை நான் கேட்டு வைக்கவில்லை. அவர் நம் நாட்டைச் சேர்ந்தவரல்ல. இரண்டாண்டுகளுக்கு முன் நடந்த வாள் வீச்சுப் போட்டியிலே அவர் கலந்து கொண்டார். அவருடைய திண்மையான புஜங்களும், முறுக்கேறிய கைகளும், கூர்மையான பார்வையும், அழகிய முகமும் என்னை வசீகரித்தன.

மனம் இன்றி வாழ்க்கைத் துணை கொள்வது எனக்குப் பிடிக்கவில்லை. ஆனால் என் உள்ளத்தை எவரிடம் வெளியிடுவேன்? ...... மன அமைதி கிடைக்க எனக்கு ஒரு வழியும் தோன்றவில்லை.


பொதுவாகவே என் அனுபவங்களால் காதல் செய்வது பெரும் பாபம் என்று நினைக்கிறேன்.''

காமினியின் எழுத்துக்கள் அவனை வாட்டின. உணர்வற்று சிலைபோல அவன் நின்றான். அந்த அறையின் சுகந்தம் அவனைத் துளைத்துப் புரிபடாத பிரமையை உண்டாக்கிற்று. அவன் திகைத்து நின்றான். அடுத்த கணம் இடுப்பிலிருந்த கத்தி நழுவிக் கீழே விழுந்ததையும் உணராமல் அவன் காமினியைப் பார்க்காமலேயே திரும்பி விட்டான்.

*　　　　*　　　　*

மறுநாள் காமினி இறந்து விட்டதாக செய்தி பறந்து வந்தது. அவள் உயிரைப் போக்க உதவி செய்த கத்தியின் பிடியில், ''தென்றலிலே நீ இசைத்த கீதம் கேட்டு, மெய் சோர்ந்து நெக்குருகி வீழ்ந்து விட்டேன்'' என்ற வரிகள் புலப்பட்டன. அவள் தற்கொலை செய்து கொண்டதாக அறிவிக்கப்பட்டது. அதன் பின்னர் சசிகேதன் என்னவானான் என்பதை அறிந்தவர்கள் யாருமே இல்லை.

இதற்குத்தானா!



ரோஜா
போன்ற
நறுமணம்
வாய்ந்தது





ஒரு ரோஜா நறுமணம் உள்ளது என்று சொல்லும்போது நாம் அதன் இன்பகரமான வாசனையை குறிப்பிடுகிறோம். மார்ட்டன் டாபிகளும் மிட்டாய்களும் ரோஜாவின் இனிய நறுமணத்தை அள்ளி வீசுவதோடு மட்டுமல்லாது மற்ற இதர அனேக பழங்கள், புஷ்பங்களின் உண்மையான வாசனை, சுவைகளை அளிக்குமாறு உன்னத முறையில் தயாரிக்கப் படுகிறது.

MORTON

ஓர் அத்யாவசியமானது குழந்தைகளுக்கு
ஓர் இன்பம் யாவர்க்குமே.

ஸி. & இ. மார்ட்டன் (இந்தியா) லிட்.

●

தென் இந்தியாவிற்கு ஸோல் ஏஜண்டுகள் :

மெஸர்ஸ். ஸௌத் இந்தியா கார்ப்பொரேஷன் (மதராஸ்) லிமிடெட்

தபால் பெட்டி நெ. 113, 2, அரமனைக்காரத் தெரு, மதராஸ்-1



பாலைவனங்களில் தென்படும் மணல் மலைத் தொடர்

மத்தியதரைக் கடல்

உலகத்திலே ஒரு காலத்தில் மிகப் பிரபலமாக விளங்கிய பிரதேசங்கள் இன்று இருக்கும் இடமே தெரியவில்லை. உலக சரித்திரத்திலே முக்கிய ஸ்தானம் பெருத பல இடங்கள் சென்ற சில வருஷங்களில் சர்வதேசப் பிரசித்தி பெற்று, கேந்திர ஸ்தானமாகத் திகழ்வதைக் காண்கிறோம்.

ஆனால் எக்காலத்திலும் கீர்த்தி குன்றாத சில பிரதேசங்கள் பூமியில் இருக்கத்தான் செய்கின்றன. அத்தகைய இடங்களில் ஒன்றான மத்தியதரைக் கடலைப் பற்றிய விவரங்களை இப்போது பார்க்கலாம்.

மத்தியதரைக் கடல் பூமிக்கு மத்தியில் இருப்பதாலேயே அதற்கு ரோமியர்களால் அப்பெயர் சூட்டப் பட்டது. பண்டைய காலத்திலும் சரி, இக்காலத்திலும் சரி, மத்தியதரைக் கடல் உலக நாடுகளுக்கும் அவைகளின் வர்த்தகத்துக்கும் உயிர் நாடியாக விளங்கி வருகிறது.

இதைத் தவிர பல புராதன மதங்களும் உலகத்தின் கலாச்சாரங்களும் மத்தியதரைக் கடற்கரையில்தான் பிறந்தன.

ஐரோப்பா, ஆசியா, ஆப்பிரிக்கா இந்த மாபெரும் மூன்று கண்டங்களும் மேற்படி கடலுக்குக் கரையாக அமைந்திருப்பது அதன் தனிச் சிறப்பைக் காட்டுகிறது.

மத்தியதரைக்கடல் இரண்டு மகா சமுத்திரங்களுக்கு வாசற்படியாகவும் விளங்குகிறது. மேற்படி கடலிலிருந்து ஜிப்ரால்டர் வழியாக அட்லாண்டிக் மகா சமுத்திரத்துக்குச் செல்லலாம். சூயஸ் கால்வாய் வழியாக இந்து மகா சமுத்திரத்துக்குப் போகலாம்.

எட்டு லட்சம் சதுர மைல்களுக்கு மேல் விஸ்தீரணம் உள்ள மத்தியதரைக் கடலிலிருந்து கடற்பஞ்சு அதிகமாகக் கிடைக்கிறது.

மத்திய தரைக் கடலில் உள்ள தீவுகளில் கார்சிகா, சார்டினியா, சிசிலி, க்ரீட், சைப்ரஸ் இந்த ஐந்து பெரிய தீவுகளும் மிகவும் முக்கியமானவை.

கார்சிகா :—சுமார் மூன்றரை லட்சம் ஜனத் தொகை உள்ள கார்சிகா 1768-ம் வருஷத்திலிருந்து பிரான்சின் ஆதிக்கத்தில் இருந்து வருகிறது. இத்தாலி தேசத்துக்கு மேற்கே இருக்கும் இந்தத் தீவின் விஸ்தீரணம் மூவாயிரத்து நானூறு சதுர மைல்கள்.


கார்சிகா தீவின் தலைநகரான அஜாசியோ தான் வீர நெப்போலியன் பிறந்த இடமாகும். அந் நகர் மேற்படி தீவின் துறைமுகமாகவும் விளங்குகிறது. கருங்கல், பளிங்குக்கல் இவற்றிற்குக் கார்சிகா தீவு பிரசித்தி பெற்றது.

சார்டினியா :—கார்சிகா தீவுக்கு அப்பால் ஒன்பது மைல் தூரத்தில் உள்ள சார்டினியா தீவு இத்தாலியிலிருந்து நூறு மைல் தூரத்தில் இருக்கிறது. அங்கு பத்தரை லட்சம் ஜனங்கள் வசிக்கிறார்கள். சார்டினியா தீவின் விஸ்தீரணம் ஒன்பதினாயிரத்து முந்நூறு மைல்கள் ஆகும்.

அங்கு கோதுமை, ஆரஞ்சு, திராட்சை முதலியவை உற்பத்தியாகின்றன. தாமிரம், துத்தநாகம், வெள்ளி முதலிய சுரங்கச் செல்வமும் அந்தத் தீவில் கிடைக்கிறது.

சிசிலி :—இத்தாலிக்குத் தெற்கே அந்த நாட்டை ஒட்டி இருக்கும் சிசிலியும் இத்தாலியும் சரித்திர காலத்துக்கு முன் ஒன்றாக இருந்ததாய்த் தெரிகிறது. பிறகு காலக்கிரமத்தில் இவ்விரண்டையும் மிகவும் குறுகிய கடல் பிரதேசம் பிரித்து விட்டது.

சுமார் பத்தாயிரம் சதுர மைல் பரப்பு உள்ள சிசிலித் தீவில்தான் உலகப் பிரசித்தி பெற்ற பயங்கரமான எட்னு எரிமலை இருக்



கிறது. எனினும் அந்த எரிமலையைச் சுற்றிலும் ஏராளமான நகரங்களும் கிராமங்களும் இருப்பதுதான் ஆச்சரியமாகும்.

கிறிஸ்து பிறப்பதற்கு எழுநூறு ஆண்டுகளுக்கு முன் எட்னா எரிமலை முதன் முதலாக வெடித்துத் தீயைக் கக்கியதாம். அதிலிருந்து இது வரையில் மேற்படி மலை எண்பது தடவை நெருப்பைக் கக்கியதாகக் கணக்கிட்டிருக்கிறார்கள். அதனால் பல நகரங்கள் அழிந்து, பதினாயிரக் கணக்கான மக்கள் பலியாயினர். எனினும் மேற்படி எரிமலையின் சாம்பல் விழும் பிரதேசங்கள் மிகவும் செழுமையாக இருப்பது சிருஷ்டித் தத்துவத்தின் விசித்திரமாகும்.

எட்னா எரிமலையின் சேஷ்டை காரணமாக சிஸிலியில் அடிக்கடி கடுமையான பூகம்பங்கள் ஏற்படுவது உண்டு. சிஸிலி மலைகளில் கந்தகம் ஏராளமாகக் கிடைக்கிறது.

மேற்படி தீவில் சுமார் நாற்பத்தைந்து லட்சம் ஜனங்கள் வசிக்கிறார்கள்.

சிஸிலி ஐரோப்பாவுக்கும் ஆப்பிரிக்காவுக்கும் இடையே இருப்பதால், இரு கண்டங்களுக்கும் ஏற்பட்ட போர்களில் எல்லாம் அத்தீவுதான் போர் முனையாக இருக்க நேர்ந்தது.

க்ரீட் :—கிரீஸ் தேசத்திலிருந்து அறுபது மைல் தூரத்தில் உள்ள க்ரீட் தீவில் நாலரை லட்சம் ஜனங்கள் வசிக்கிறார்கள். அத்தீவு மூவாயிரம் சதுர மைல் பரப்பு உள்ளது.

பல நூற்றாண்டுகளாக க்ரீட் தீவு மாறி மாறி அதன் மீது படையெடுத்த பல்வேறு நாட்டினரின் ஆதிக்கத்துக்கு இலக்காக நேர்ந்தது. கடைசியாக 1840-ல் துருக்கியர்கள் அத் தீவை ஆக்கிரமித்துக் கொண்டனர்.

எனினும் துருக்கியர்கள் மேற்படி தீவை அதிக காலம் தங்கள் வசம் வைத்துக் கொண்டிருக்க முடியவில்லை. அங்குள்ள மக்களில் பெரும்பாலோர் கிறிஸ்துவர்களாக இருந்ததே அதற்குக் காரணம். அவர்கள் கிரீஸ் நாட்டிடம் அநுதாபம் உள்ளவர்களாக இருந்தனர். அவர்களுக்கும் சிறு பான்மையோராக இருந்த முஸ்லிம்களுக்கும் இடைவிடாமல் தகராறு ஏற்பட்டுக் கொண்டிருந்தது.

எனவே 1898-ம் ஆண்டில் துருக்கியர்கள் க்ரீட் தீவிலிருந்து வெளியேறி விட்டார்கள். பிறகு அத்தீவைத் தங்கள் தங்களுடைய ஆதிக்கத்தில் கொண்டு வருவதற்காக இங்கிலாந்து, பிரான்ஸ், இத்தாலி, ருஷ்யா முதலிய தேசங்கள் போட்டி போட்டன. எனினும் க்ரீட் மக்கள் தாங்கள் கிரீஸ் தேசத்துடன் ஐக்கியமடைய வேண்டும் என்று பலமாக வற்புறுத்தியதால், 1912-ல் க்ரீட் கிரீஸ் தேசத்தின் நிர்வாகத்துக்கு வந்தது.

சைப்ரஸ் :—சைப்ரஸ் தீவு துருக்கியிலிருந்து சுமார் நாற்பது மைல் தூரத்துக்கு மேற்கே இருக்கிறது. மூவாயிரத்து அறுநூறு சதுர மைல் விஸ்தீரணம் உள்ள அத்தீவின் ஜனத்தொகை மூன்றரை லட்சமாகும்.

அந்தத் தீவில் வசிக்கும் பெரும்பாலான மக்களும் விவசாயத்தையே ஜீவனமாகக் கொண்டிருக்கிறார்கள். அங்கு உற்பத்தியாகும் பொருள்களில் கோதுமை, பார்லி, திராட்சை முதலியன முக்கியமானவை.

மத்திய கேந்திரப் பிரதேசத்தில் தோன்றி மறைந்த பல்வேறு சாம்ராஜ்யங்களின் அதிகாரத்துக்கும் சைப்ரஸ் உள்ளாக நேர்ந்தது.

கடைசியாக, துருக்கியின் ஆதிக்கத்திலும் இங்கிலாந்தின் மேற்பார்வையிலும் இருந்த சைப்ரஸ் தீவை முதலாவது உலக மகா யுத்தத்தின் போது இங்கிலாந்து தன் வசப் படுத்திக் கொண்டது. இரண்டாவது மகா யுத்த காலத்தில் பிரிட்டிஷார் மேற்படி தீவைத் தங்களுடைய இராணுவக் கோட்டையாகப் பலப்படுத்தி யிருந்தார்கள்.

1948-ல் பாலஸ்தீனத்தில் இருந்து வெளியேறிய பிரிட்டிஷ் துருப்புகள் சைப்ரஸ் தீவுக்குத்தான் சென்றன. மேற்படி தீவில் உள்ள பெரும்பாலோர் கிரேக்கர்களானதால் அத் தீவைத் தங்களிடம் ஒப்புவிக்கும்படி கிரீஸ் சர்க்கார் பிரிட்டிஷ் சர்க்காரை இடைவிடாது வற்புறுத்தி வருகின்றனர்.—ஜெயமணி

Edited, Printed and Published by R. Krishnamurthy at the "Kalki" Press
116-119. Sladens Gardeu, Poonamallee High Road, Kilpauk. Madras

"லக்ஸ் டாய்லட் சோப்

என்
சருமத்திற்கு
விசேஷ
நன்மையளி-
க்கிறது"

என்று சொல்கிறார்

பி.எஸ்.ஸரோஜா





இனிய மணத்துடன் கூடிய
இந்த வெண்மையானதும் சுத்தமானதுமான
சோப் உங்கள் சருமத்தை
வசீகரமாகச்செய்யும்!

சினிமா நட்சத்திரங்களின் அழகு தரும் சோப்

LTS. 324-X30 TM

Regd. No. M 4392

Registered as a newspaper in Ceylon